கீதத் தமிழ்

(தமிழ்க் கீர்த்தனங்கள்)

ஆக்கியோர் :

திருவாசகம்

கே. எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்.

அட்வகேட், சென்னை

ஆசிரியரால் வெளியிடப்பெற்றது

சென்னை

1947

உரிமை
ஆக்கியோருடையது.

விலை ரூபா
மூன்று

Printed at the Sadhu Press, Royapettah, Madras
(P. I. C. No. M. S. 115) under clause 23
for Mr. K. M. Balasubramaniam, Madras-C. 1000—1-5-47



இந்நூல்,

என் அருமைத் தந்தை,

காலஞ்சென்ற

எஸ். முத்துசாமி பிள்ளை

அவர்களின் நினைவாக

வெளியிடப்பட்டது.

முன்னுரை

தமிழ் எனும் சொல்லுக்கே இன்பம், இசை என்ற பொருள்கள் உண்டு. ஆனால் தமிழ் என்னும் சொல் யாதானும் ஓர் அடைமொழியின்றி மொழியப்படுதலும் அரிது. மதி என்றால் வெள்ளை நிறமுடைய சந்திரனைத்தான் குறிக்கும் எனினும் வெண்மதி என்றும் பான்மதி என்றும்தான் சந்திரன் குறிக்கப்படுகின்றது. அதுபோலவே தமிழ் என்ற வார்த்தையிலேயே இனிமை, இளமை, இசைபோன்ற பொருள்கள் தொக்கிநின்றும் தொனித்தும் தோற்றமளிக்கின்றன எனினும், தமிழைக் குறிப்பிடும்போதெல்லாம் இன்றமிழ், செந்தமிழ், கன்னித் தமிழ், இசைத்தமிழ் என்றே நாம் சொல்லுகிறோம். தமிழே மக்களின் அமிழ்தெனும் தனிமொழி. தமிழ், இயல், இசை, நாடகம் என்னும் மூவகைத்தெனினும், தமிழின் இவ்வொவ்வொரு பிரிவிலும் இசையும் இசையையொத்த இனிமையும் எப்போதுமே உண்டு. ஆதலால்தான், தமிழ் நாட்டினைக் குறிக்கப்போந்த சேக்கிழார் பெருமான், “ பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள் ” என்று பண்புறப் பாடியுள்ளார். எப்போதும் எங்கணும் பாட்டின் இயல்புடையது தமிழுரை. பிறந்த சேய்க்குத் தாலாட்டுதலிலிருந்து இறந்த பேர்களுக்கு இரங்குதல்வரை, கழனியில் உழுவதிலிருந்து கடவுளைத் தொழுவதுவரை, ஐயம் ஏற்பதிலிருந்து அரசரைக் காணுதல்வரை, எல்லாக் காரியங்கட்கும் இன்னிசைப் பாட்டையே என்றென்றும் கையாண்டவர் தமிழர் ஒருவரே.

இசை என்பது ஏழ்வகைத்து. இறைவன் இவ்வேழிசை வண்ணனாயிருக்கிறான்.

“ ஏழுகொலாம் அவர்ஆளு முலகங்கள்
ஏழுகொலாம் இசையாக்கின தாமே. ”

எனவே எமது ஐயாற்றிறைவர், “ இருளின் வண்ணமும் ஏழிசை வண்ணமும், சுருளின் வண்ணமும் சோதியின் வண்ணமும் ” ஆனவர் என்கிறார் அப்ப மூர்த்திகள். “ இன்னிசை வீணையில் இசைந்தனன் காண்க ” என்றார் நம் மணிவாசக வள்ளலும்.

ஏழிசையே இறைவன். அதுபோலவே ஏழிசையை எம் இறைவன் விரும்புகின்றான். அவ்விசையில் அவன் ஈடுபடுகின்றான். ஏழிசையைப் பாடுபவர்க்கும் எளியவனாகின்றான். “ அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக ” என்று சிவபிரான் வன்றொண்டருக்கிட்ட கட்டளையின் கருத்தும் காணத்தக்கது.

கீதத் தமிழ்

சிவபெருமான், தன் அடியவர்களது பாட்டிசையை எவ்வளவு தூரம் நச்சி நிற்கின்றார் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஆற்றி விட்ட பொன்னைக் குளத்தெடுக்க முயன்ற ஆரூரரிடம் தமிழின் அருஞ்சுவைப் பாட்டினை இறைவன் அவாவினார் என்பதை,

“ நீற்றழகர் பாட்டுவந்து திருவிளையாட்டி னில்நின்று
மாற்றறுசெம் பொன்குளத்து வருவியா தொழிந்தருள ”

என்று சேக்கிழார் நமக்குத் தெரிவித்துள்ளார். ஆகவே, நமது அருங்குருநாதர் மணிவாசகனார்,

“ பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான் ”

என்று பாடிய பாட்டு எவ்வளவு பொருத்தமுடைத்தாகிறது! திருநாவுக்கரசப் பெருமானாரும், “பண்ணினைப் பாடவைத்தார் பத்தர்கள் பயில வைத்தார்”, “ கீதராய்க் கீதம்கேட்டுக் கின்னரந் தன்னை வைத்தார் ”, “ கீதத்திற் பொலிந்த ஓசைக் கேள்வியர் ”, “ பண்ணிடைச் சுவையின் மிக்க கின்னரம் பாடல் கேட்பார் ” என்பதுபோன்ற எண்ணிறந்த வாக்குகளால், சிவபெருமானுக்கு இசையின்பாலுள்ள ஆர்வத்தையும் இன்பத்தையும் தெளிவுறக் கூறியுள்ளார்.

பத்திக்கு எளியவன் ஈசன். இசைக்கு எளியது பத்தி. ஆதலின் இசையின் மூலம் இறைவனை எளிதில் அடைதல் இயலும். “ புற்றுமாய் மரமாய்ப்புனல் காலே உண்டியாய் அண்டவாணரும் பிறரும் வற்றியாரும் ” இறைவன் மலரடி காணமல் வருந்தாநிற்ப, ஆனயர் என்னும் ஓர் அன்பரின் இசை எவ்வளவு எளிதில் அம்பலக்கூத்தரை அவரருகிற்கொண்டு வந்தது என்பதைச் சைவக் கவியரசர் சேக்கிழார் தெய்வத் திருவாக்கால் தெளிவிக்கிறார் :

“ மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்த இசைக்குழலோசை
வையந்தன் னையும்நிறைத்து வானுந்தன் வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவில் நடம்புரியும்
ஐயன்றன் திருச்செவியின் அருகணையப் பெருகியதால் ”

‘இசை விரும்பும் கூத்தனார்’ அடியார்கள் பாடும் பாட்டுக்களின் இசையில் விருப்பம் கொள்வதோடு நிற்பதில்லை. எண்ணிறந்த இசையாறுகள் ஐயன்றன் திருச்செவியி னருகணையப் பெருகிய போதிலும், ‘ இசைவிரும்பும் கூத்தனருக்கு ’த் தம் இச்சையடங்குதல் என்பது கிடையாது. ஆகலின் அவர் தாமே இசைபயிலவும் செய்

கிறார். இதுபற்றித்தான் "வெந்தார் பொடிப்பூசி வெள்ளைமாலை விரிசடை மேற்றாஞ்சூடி வீணையேந்திக் கந்தாரந்தாம் முரலாப் போகா நிற்பர்" என்று சிவபெருமானின் விரிவானதொரு வருணனையை அப்பர் பெருமானே அருளுகிறார்.

இப்படி, இசையாகியும், இசைவிரும்பியும், இசை பயின்றும் "சர்வம் கானமயம்" என்ற வண்ணம் விளங்கும் இறைவனை, எம் சிவபெருமானை இசையின் மூலமன்றி வேறெவ்வாற்றால் வழிபடுதல் இயையும் அல்லது எளிதாகும்? அதுபற்றியேதான் நம் சைவகுரவர்கள் அனைவரும் தேவாரம், திருவாசகம் என்ற இசைத்தமிழ் மூலம் சிவபிரானை வாழ்த்தியும் வழிபட்டும், கண்டும் கண்களித்தும், அடைந்தும் அருளெய்தியும் நின்றனர். முருகக்கடவுளின் வரப்பிரசாதம் பெற்ற அருணகிரிப் பெருந்தகையும், இக்காரணம்பற்றியேதான் சந்தத் தமிழால் கந்தக்கடவுளை வந்தித்தணைந்து முருகன் தாளிணையடைந்தார்.

திருஞானசம்பந்தப் பெருமானைக் காட்டிலும், இசை மூலம் இறைவனை வழுத்திய பெரியோரை நாம் அறிந்திலம். "இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்று ஆரூரர் அவரைக் குறித்துள்ளதை யாரே யறியாதார். ஞானசம்பந்தருக்கு 'முத்தமிழ் விரகன்' என்றதொரு ஒத்த நற்பேரும் உண்டு.

"ஏழிசையும் பலகலையும் எவ்வுலகும் தனித்தனியே
வாழவரும் அவர் தம்மை"

என்று கூறிய சேக்கிழார் சைவத்துடன் ஏழிசையையும் வளர்த்து வாழ்விக்கத்தான் காழிஞானசம்பந்தர் அவதரித்தார் என்று எடுத்துக் காட்டுவது எவ்வளவு பொருத்தமுடையது பாருங்கள். வேதம் தமிழால் விரித்தார் எனத்தகும் பிள்ளையார் செல்லுமிடமெங்கணும் விருப்புடன் பாடல் இசைத்தார் என்பதை யறியாதார் யாரே?

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்" என்று பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் மற்றும் மாணிக்க வாசகரும் இன்னிசைத் தமிழ் மூலம்தான் இறைவனை வணங்கி வாழ்த்தி வளம் பெறும் அருள்கொண்டு வாழ்ந்தனர். "சலம்பூவொடு தூபமறந் தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்று பாடிய அப்பர் பெருமான் தனக்குத் தமிழ்க் கவித்திறனும் சந்த இசையின் ஞானமும் அருளிக் காத்தவர் சிவனே என்பதை வெகுதெளிவாக விளக்குகின்றார்.

எனவே, தமிழின் மூலமும் இசையின் மூலமும்தான் எளிதில் இறைவனை அடைதல் இயலும் என்பதை நாம் இதனால் இனிதறிதல் வேண்டும். ஞானமார்க்கமும் யோகமார்க்கமும் எல்லோருக்கும் இயைந்தவையன்று; கடைப்பிடித்தற்கும் எளியவையல்ல. பத்திமார்க்கமே சிறந்தது. இசையும் அன்பும் பத்திக்குயிர்நிலை; இனிய சொற்பதம் பக்தியின் இன்னுடல். இவ்விரண்டும் பொருந்திய கீதங்களும் பாடல்களும் எண்ணிறந்தன. தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலியனவே இவற்றுட் சிறந்தவை. இவற்றை முறைப்படிப் பாடின் முத்திநிலை பெறுதல் முக்காலும் உண்மை.

ஆனால், காலவேறுபாட்டாற்சில மாறுதல்களும் தேவையாகின்றன. ஏழிசைப் பண்கள் நிறைந்த தேவாரப் பாடல்கள் எக்காலத்துக்கும் பொருந்தும் இயல்பின எனினும், நமது மக்களின் மனப்பான்மை சுற்றுப்புறச் சார்புகளால் சற்று மாறத்தான் செய்கிறது. இதைக் கண்டிக்கலாம் சிலர்; ஆனால் அதை மறுத்துப் பயனில்லை. நம் பண்டைத் தமிழ் நாட்டின் இசைமுறை பற்பல மாறுதல்களை அடைந்த வண்ணம் இருக்கிறது. இன்று நாம் நம் நாட்டிடைக்கண்டும் கேட்டும், பழகியும், அனுபவித்தும்வரும் சங்கீதம், கர்னாடக சங்கீதம் என்னும் பெயருடன் வழங்கி வருகின்றது. இது, வடநாட்டில் வழங்கும் சங்கீதத்தினின்றும் மாறுபட்டது என்பதும் யாவரும் அறிந்ததே. இந்தக் 'கர்னாடக சங்கீதம்' எவ்வளவு தூரம் நமது பண்டைத்தமிழ் இசை முறையோடு இயைபுடைத்து, எவ்வளவு தூரம் அதனின்றும் மாறுபாடுடைத்து என்ற கேள்வி எழுதல் இயற்கையேயாயினும் அதற்கு விடையிறுத்தல் இஃது இடமும் அல்ல, யான் அருகனும் அல்லன். ஆனால், இக்கர்னாடக சங்கீதம்தான் தற்போது நம் தமிழ்நாட்டில் தலையோங்கி நிற்கிறது என்ற உண்மையைமட்டும் நாம் ஒப்புக்கொண்டாகவேண்டும். இக்கர்னாடக சங்கீதம் எப்பொழுது தோன்றியது, இதற்கு இப்பெயர் சூட்டியவர் யார் என்ற விஷயங்களும் ஈண்டுக் கவனிக்கப்படவேண்டியவையன்று. இன்று தமிழ்நாடு, தெலுங்கு தேசம், கன்னடப்பகுதி, மலையாள ராஜ்யம் என்னும் இந்தத் திராவிடப் பிரதேசங்களில் பொதுவாக வழங்கியும் பொன்னேபோல் போற்றப்பட்டும் வருவது இந்தக் கர்னாடக சங்கீதமேயாகும். இதனிடை நம் மக்களுக்குள்ள ஆர்வமும் பயிர்ச்சியும் அளவிடற்பாலதன்று.

இந்தக் கர்னாடக சங்கீத உலகில் அருங்கீதம் இயற்றி அழியாப் புகழ் படைத்து ஆக்கம் உண்டாக்கிச் சென்ற பெரியோர்கள் சிலர்.

அவர்களுள் புரந்தரதாஸர், தியாகப்ரம்மம், தீக்ஷிதர், அருணாசலக்கவி, முத்துத்தாண்டவர், ஸ்வாதித் திருநாள் என்பவர்கள் முக்கியமானவர்கள். தியாகய்யரின் கீர்த்தனங்கள் தெலுங்கில் பாடப்பட்டவை. எனினும் இவர் தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்து, பாடிக் காலமடைந்தவர். ஆதலால், தெலுங்கர்களைக் காட்டிலும் தமிழர்களே இவரை அதிகம் போற்றினர், போற்றுவர். இவரது கீர்த்தனைகளைப் பெருவாரியாகக் கையாண்டு, எல்லாச் சங்கீதக் கச்சேரிகளிலும் அவைகளையே பாடி, எல்லா மக்களுக்கும் சங்கீத மாணவர்களுக்கும் அவைகளையே புகட்டி அவற்றில் அளவற்ற ஆர்வமும் ஊட்டி, 'சர்வம் தியாகய்ய மயம்' என்ற நிலைமையை நம் சங்கீத உலகில் உண்டாக்கியவர்களும் நம் தமிழ் நாட்டுச் சங்கீத வித்வான்களேயாவர். அக் கீர்த்தனங்களின் பொருளைப் பற்றிப் பாட்டுப்பாடுபவரும் சரி அல்லது கேட்டுச் சுகிப்பவரும் சரி, இவ்விருசாராரும் கவலைப்பட்டதே கிடையாது. இசைச் சுகம் ஒன்றே கருதப்பட்டது, கையாளப்பட்டது.

எனவே, "தமிழ், தமிழ்" என்ற தாகம் எடுத்துத் திரியும் மக்களுள் ஒருசிலரின் கவனம் இந்நிலைமையில் புகுவதாயிற்று. அதிருப்தி, கேள்விகள், சந்தேகம், ஆராய்ச்சி, ஆலோசனை, பேச்சு என்று படிப்படியாகத் தமிழரின் உள்ளக்கிளர்ச்சி உருவகப்படலாயிற்று. எனவே, தியாகய்யரின் எல்லையற்ற கீர்த்தியே தென்தமிழ்க் கீதங்களின் சிறப்பை நினைவூட்டவும் பயன்பட்டது. பெரியவர்கள் நமக்கு எல்லாவிதத்திலும் நன்மை செய்வார்கள் என்பதற்கு இஃதோர் உதாரணமாகும். "தமிழிசை இயக்கம்" என்றதொரு புது இயக்கம் நம் தமிழ்நாட்டில் தோன்றலாயிற்று.

உள்ளக் கிளர்ச்சி சிறிதும் தோன்றாமல் தெள்ளத் தெளிவான சில பதங்களைப் பள்ளத்திலிருந்து தோண்டிக்கொண்டுவந்து தொடர்ச்சியாக வைத்துவிட்டு, இவைகளும் கீர்த்தனங்கள்தான் என்றால் அவைகளால் எழுதுபவருக்காவது பாடுபவருக்காவது அல்லது, பாடக் கேட்பவருக்காவது இம்மியும் இன்பம் வாராது, இறுதிப்பயனும் கிடையாது. பாடுபவரையும் கேட்பவரையும் பரவசப் படுத்துவனவே பாட்டுக்கள். எந்த ரஸம், எவ்வுணர்ச்சி ஒரு. பாட்டைத் தூண்டிற்றோ அந்த ரஸத்தையும் அவ்வுணர்ச்சியையும் யார் பாடினாலும், யார் கேட்டாலும் அவர்களிடம் விளைவிக்கக் கூடியவைகளே உண்மைப் பாடல்களாகும். இந்த ஒரு சிறு அளவுகோலால் தான் எல்லாக் கீர்த்தனங்களையும் அளக்கவேண்டும். ஆதலால்தான் அருணாசலக்கவி, முத்துத்தாண்டவர்,

வேதநாயகம் பிள்ளை இவர்கள் இப்போது கையாளப் பெற்று வெற்றிகரமாகத் தியாகய்யருடன் சரியாசனத்திருந்து வருகிறார்கள்; அவர்களுக்குத்தான் அது முடியும்.

இயற்றமிழ்க் கவிகள் பாடுவதில் இயல்பாகவே எனக்கு நாட்டம் உண்டு. அதன் பயனாய் இரண்டொருநூல்களும் இயற்றலானேன். ஆனால், திடீரென்று வந்த யுத்தம் என்னை இசைத்தமிழ் உலகிலும் எதிர்பாராத வண்ணம் புகுத்திவிட்டது. 1943-வது வருடம் மேமாதம் சென்னை மாகாணப் போர் இசை விளம்பர அதிகாரியாகச் சர்க்கார் என்னை நியமித்தபொழுது உண்மையிலேயே நான் மகிழ்ந்தேன். ஏனெனில் இந்த உத்தியோகத்தை யான் வகித்திருக்கவில்லை யென்றால் இன்று இந்த நூல் வெளிவந்திருக்க முடியாது. அன்றிலிருந்து சுமார் ஒன்றரை வருடகாலம் என் வாழ்க்கையில் பல கீர்த்தனங்கள் பற்பல சந்தர்ப்பங்களில் தோன்றலாயின. அவை மொத்தம் நூற்றைம்பதுக்கு மேலிருக்கும். ஆனால் இந்நூலில் காணும் நூறு கீர்த்தனங்களே அவைகளில் முக்கியமானவை. இவற்றில் பெரும் பாலானவற்றை அப்போது என் சங்கீத கோஷ்டியிலிருந்து வந்த ஸ்ரீமதி. வ. யசோதா என்பவரும் ஸ்ரீமதி. V. C. பாலாம்பாள் ஸ்ரீமதி. C. M. சரஸ்வதி என்னும் இவ்விருவரும் முறைப்படிப் பாடம்செய்து தக்கபடிப் பக்க வாத்தியங்களுடன் பல இடங்களில் பாடியும் 'கச்சேரி' செய்தும் வந்தனர். இவற்றிற்கு இசையமைக்க உதவிய பெருமை எம் இசைக்குழுத் தலைவராயிருந்த திரு. C.N. பாண்டுரங்கமுதலியாருக்கே உரியதாகும். ஆனால் பாட்டுகளுக்குச் 'சுரம்' அமைக்கப்படாமல் அவற்றை வெளியிடல் அவ்வளவு நல்லபயன் தாராது என்று நான் கருதி இது வரை வாளாவிருந்தேன். அவ்வாறு 'சுரம்' அமைக்கும் என் எண்ணம் பலகாரணங்களால் இதுவரை நிறைவேறவில்லை. இனியும் தாமதிப்பதினால் ஒரு நலமும் இல்லை என்று கருதிய நான் இந்த நூறு கீர்த்தனங்களையும் நூல்வடிவில் இப்போது வெளியிட முன்வந்தேன். இறைவன் திருவருள் துணையிருப்பின், கூடிய சீக்கிரம் இவற்றைச் 'சுர' அமைப்போடு மீண்டும் வெளியிட எண்ணியுள்ளேன். அதுவரை இப்பாடல்களைத் தமிழ் நாட்டுச் சங்கீத உலகம் ஒல்லும் வகையால் பயன்படுத்திக் கொள்ளும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன். இராக தாளங்களை மாற்றி யமைத்துப் பாட விரும்புபவர்கள் அவ்வாறு செய்துகொள்ளலாம். சாஹித்தியம் மட்டுமாவது தற்போது பயன்படட்டும் என்ற

முன்னுரை

ஒரே ஒரு நோக்கத்துடன்தான் இந்நூல் இப்போது வெளியிடப்பட்டுள்ளது. தேவார திருவாசக வாக்கியங்கள், இந்நூலில் காணும் சில பாடல்களின் பல்லவிகளாய் அமைந்திருப்பதும் நேயர்கள் கவனிக்கத் தக்கதே. அநேகமாக ஒவ்வொரு பாட்டிலுமுள்ள கடின வார்த்தைகளுக்கு ஆங்காங்கே விளக்கமும் குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன. முக்கியமான சில பாட்டுக்கள் தோன்றிய காரணத்தையும் சந்தர்ப்பத்தையும் ஆங்காங்கே குறித்துள்ளேன்.

இந்நூலின் குற்றங் குறைகளைப் பொருட்படுத்தாது இதன் சில சிறப்புக்களை மட்டுமே மனங் கொண்டு பாராட்டியதுடன் என்னை மேலும் ஊக்கும்பொருட்டு அரிய சிறப்புரைகள் அகமகிழ்ந்தளித்த இசையுலக மன்னர்களான உயர்திரு. சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, உயர்திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் ஆகிய இரு பெரியோர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

தமிழ் நாட்டின் தலைவரும், மாஜி மந்திரியுமாகிய கனம் ஸ்ரீ. பி. டி. ராஜன், பார்-அட்-லா அவர்கள் இந்நூலின் பொருட்டுச் செய்துள்ள உதவிக்காக அவர்களுக்கு நான் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் வெளிவர ஒரோவழி உதவி புரிந்த என் கெழுதகை நண்பர் சிதம்பரம் திரு. என். தண்டபாணிபிள்ளை அவர்களுக்கும் என் நன்றி உரியதாகுக.

திருநெல்வேலி வாசியும் எனது ஆருயிர் நண்பருமான உயர்திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை (Journalist, K. S. Bank) அவர்கள் தருணமறிந்து செய்த காலத்தாற் செய்த உதவிக்கு யான் என்றும் கடப்பாடுடையேன்.

சென்னை
1—5—'47

கே. எம். பாலசுப்பிரமணியம்

சிறப்புரை

1

சங்கீதச் சக்கரவர்த்தி
திரு. சித்தூர் - சுப்பிரமணிய பிள்ளை
இசைப்பேராசிரியர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

"தமிழ்நாட்டில் தமிழ்ப் பாடல்கள் பாடவேண்டும் என்ற ஊக்கம் இப்போது எல்லோரிடமும் வளர்ந்து வருகிறது. இவ்வுணர்ச்சியைத் திருப்தி செய்யச் சாஹித்ய நூல்கள் பல வெளியாகிக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் 'கீதத் தமிழ்' என்ற இந்நூல் பக்தி, சொல் நயம், பொருட்சுவை, சங்கீத அமைப்பு எல்லாம் பொருந்திச் சிறந்து விளங்குகிறது. இதனுள் அச்சிடப்பட்டிருக்கும் கீர்த்தனைகள் இசைக் கச்சேரிகளில் பாட மிகவும் ஏற்றவை என்று என் அனுபவத்தில் நான் கண்டிருக்கிறேன். கீர்த்தனைகளுக்குத் தற்காலிகமாக இராகமும் தாளமும் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குச் சுரம் அமைக்கப்பட்டால் இசை பயில்வோர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இந்நூலை இயற்றிய திருவாளர் கே. எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல். அவர்கள் தமிழ்ப் பாடல்கள் மூலமாகத் தெய்வபக்தியைப் பாமரர்களிடைப் பரப்பிப் பெருமிதப்படுத்தவேண்டும் என்ற அவா உடையவர். தொழில்முறையில் அவர் சர்க்காரில் பெரும்பதவி வகித்தவர். உத்தியோகத்தில் இருந்தபோதும் அவர் இக்கீர்த்தனங்களை இயற்றியதன் காரணம் தமிழ்ப் பாடல்களில் அவருக்கு இருக்கும் ஊக்கம்தான்.

சங்கீத வித்வான்களும், ரசிகர்களும், தமிழ்ப் பாடல்களில் ஊக்கமுடையவர்களும் இந்நூலை ஆதரித்து இயற்றியோரின் தொண்டு பயன்பட்டதாகச் செய்யவேண்டும் என்று அவர்களை வேண்டிக்கொள்கிறேன்."

எட்டயபுரம் சமஸ்தான வித்வான், தருமபுர ஆதீன இசைப் புலவர்,

இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேசிகர்

சொல்லும் இசையும் உடலும் உயிரும்போன்றிலங்குகின்றன. வெறும் இசையும் வெறுஞ் சொல்லும் தனித்தனியாக இயக்கப்படும்கால் நமக்கு ஓரளவுக்குத்தான் இன்பம் உண்டாகின்றது. ஆனுல், சொல்லையும் இசையையும் ஒரேகாலத்தில் இயக்கும்போதோ அளவிடமுடியாத பேரின்பத்தை அடைய முடியுமென்பது எல்லோரும் அறிந்ததே.

நம் நாட்டின் பண்டைய இசைத் தமிழேதான் இப்போது கர்நாடக சங்கீதம் என்று வழங்கிவருகிறதென்று பேரறிவாளர்களிற் சிலர் கருதுகின்ருர்கள். இக்கருத்தை நாமும் ஒப்புக்கொள்ளலாம். இல்லை என்ருலும் அதனுல் இழுக்கு யாதும் நேர்வதற்கில்லை. ஆனுல் ஒன்றுமட்டும் நிச்சயம். இசைத் தமிழாயினும் சரி, கர்நாடக சங்கீதமாயினும் சரி இவ்விரண்டும் நம் தமிழ்நாட்டிலேதான் உயர்ந்தமுறையில் நம் இசைவாணர்களால் போற்றப்பட்டு வருகின்றன. இதனுல் மக்கள் மாறுபாடு கொள்ள வேண்டுவதில்லை. நம் தமிழ்நாட்டின் இசை நுட்பங்களை மற்ற நாட்டார் அறிந்துகொள்ளப் பற்பல ஆண்டுகளாகும். ஏனெனில், அவ்வளவு தூரம் அளவிட முடியாத நுட்பதிட்பங்களை நம் இசைத்தமிழ் நூலாசிரியர்கள் நமக்குக் குறையாததொரு பெருஞ் செல்வமாக அளித்துப் போந்துள்ளனர்.

நம் நாட்டு இசைவாணர்களைப்பற்றியொரு வார்த்தை கூற விரும்புகிறேன். நம் தமிழ்நாட்டில் இசையரங்கில் பாடுகின்ற இசைவாணர்கள் பெரும்பாலும் பிறமொழிப் பாடல்களையே இதுவரை இசைத்து வந்திருக்கிருர்கள். சென்ற ஐந்து ஆண்டுகளாகத் தமிழ் மக்கள், தம் விழிப்பின் பயனுக இசையரங்கில் இசைத்தமிழ்ப் பாடல்களையே பெரிதும் விரும்பிக் கேட்டு இன்புற்று வருகிருர்கள். இதற்குக் காரணம் பிறமொழிப் பாடல்களின் பொருள்

பாடுபவர்களுக்கும் கேட்போர்க்கும் தெரியாமலிருப்பதே யாகும். பாடுபவர்களுக்கே பொருள் விளங்காவிடில் கேட்போர்க்குமட்டும் எங்ஙனம் அது விளங்கப் போகிறது? இது மட்டுமல்ல. பாடுகிறவர்களிற் பலர் தமிழிலேயே பாடினாலும் கூடத் தாம் அப்பாடல்களின் பொருளை உணராமலேயும், பாடல்களின் சொற்களை மென்றும் விழுங்கியும் கேட்போர்க்கு ஒன்றும் புரியாமற் பாடியும் வருகின்றார்கள்.

அடுத்த படியாக இசைத் தமிழ் ஆசிரியர்களைக் கவனிப்போம். தற்சமயம் கையாளப் பெற்றுவரும் தியாகராஜ சுவாமிகளின் பாடல்களில் பெரும்பாலானவைகளில் ஒவ்வொரு இராகத்தின் எண்ணிறந்த நுட்பங்களும் ஏராளமாக விரவியும் பரவியும் கிடக்கக் காண்கிறோம். இத்தகைய உயர்ந்த முறையில் தமிழிற் பாடப்படும் ஒவ்வொரு பாடலிலும் சிறந்த இசை நுணுக்கங்கள் அமையப் பெற்றால் தான் அப்பாடல்களை மக்கள் இன்னும் அதிக ஆர்வத்துடன் கேட்டு அகமகிழ்வார்கள் என்பது எனது கருத்து. இசைக்குத் தகுந்த பாட்டும் பாட்டுக்குத் தகுந்த இசையும் அமைந்தால்தான் நம் எண்ணம் கைகூடும். இத்தகைய பாடல்களை யமைக்க வேண்டியது நம் நாட்டு இசைப் புலவர்களின் இன்றியமையாத கடமையாகும்.

அரிய புலமையும், ஆழ்ந்த கருத்தும், சொல் வளமும், பொருள் வளமும் சிறப்புற்றோங்கு முறையில் தமிழ்ப் பாடல்களை இயற்றுபவர்கள் நம் நாட்டில் ஒரு சிலரே தான் இருக்கின்றார்கள். இச்சிலரில் உயர் திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல் அவர்களும் ஒருவராவர். ஆங்கிலப் புலமையிலும் தமிழ்ப் புலமையிலும் மிக்கவராகிய இசைத் தமிழ்ப் புலவர் திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களால் இயற்றப் பெற்ற 'கீதத் தமிழ்' என்ற இசைத் தமிழ்நூலை யான் கண்ணுற்று மனமகிழ்வுகொண்டேன். இந் நூலிலுள்ள ஒவ்வொரு பாடலும் பல திறப்பட்ட சந்தர்ப்பங்களில் இவ்வாசிரியர்பால் உண்டாகிய உணர்ச்சிப் பெருக்கால்

பாடப்பட்டுள்ளது. இப்பாடல்கள் எல்லாவற்றிலும் தமிழ்மறைப்பெரியோர்களின் பக்திப் பாடல்களின் சாரம் பொழியப்பட்டுப் பொலிகின்றதைக் காணலாம். உயர்ந்த கருத்துக்களும் உணர்ச்சி மிகுந்த சொற்களும் செறிந்து விளங்கும் இப்பாடல்கள் மிக எளிய நடையில் அமைந்து அறிவாளிகளும் பாமர மக்களும் ஆர்வத்துடன் படித்து இன்புறும் வண்ணம் அமைந்துள்ளமை பாராட்டத் தக்கதோர் பண்பாகும். இசைக்கு 'ஓம்' என்ற ஓசையே முதன்மையானதால், அக்கருத்துக் கேற்ப, "ஓம் எனும் ஒலி நீ ஓங்கும் அவ்வடிவும் உருவாய் உயர்வோனே" என்று இவ்வாசிரியர் விநாயகர் பாடலைத் தொடங்கி யிருப்பது மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. நம் நாட்டுக் கடவுளை மனமுருகிப் பாடிவழிபடும் முறையில் இவரது பாடல்கள் அனைத்தும் இனிக்கும் தெள்ளிய தமிழில் இயற்றப்பட்டுள்ளன. இயற்கைப் பொருள்களாகிய ஞாயிறு, திங்கள், விண் மீன், கடல், தாமரை, வானவில் முதலியவற்றைக் குறித்தும் சிந்தனைக் கற்பனைகள் செறிந்த பாடல்களையும் இந் நூலில் காண்கிறோம். அவைகளில் குறிப்பாகக் கடலைப் பற்றிப் பாடுகின்ற பாடலில், இவ்வாசிரியர் கடலை வினவுகின்ற கற்பனைக் கேள்வியின் நயம், சிறந்த கவி இன்பத்தை நமக் களிக்கின்றது. இவ்வாறு இயற்றமிழ் வளமும் இசைக்குப் பொருத்தமும் ஒருங்கேயமையப் பெற்ற பாடல்களைக் கொண்ட 'கீதத் தமிழ்' என்னும் இந்நூலை இசைவாணர்களும் இசைப்பயற்சியாளரும் பெரிதும் பயன்படுத்திப் பாடிப் பரப்ப வேண்டுமென்று நான் அனைவரையும் கேட்டுக் கொள்வதுடன் யானும் இப்பாடல்களை இசையரங்கில் இசைத்து மக்களுக்கு இன்பமூட்ட விழைகிறேன் என்று கூறவும் விரும்புகின்றேன். இதுபோன்ற அரிய இசைத்தமிழ் நூல்கள் இன்னும் பலவற்றை விரைவில் வெளியிட்டு, இவ்வாசிரியர், தமிழ் நாட்டிற்கும், மொழிக்கும், இசைக்கும் அருந்தொண்டாற்றுவா ரென்று நான் பெரிதும் எதிர்பார்க்கிறேன். அதுவே தமிழ் மக்களின் விருப்பமும், எனது விருப்பமுமாகும்.

உள்ளுறை

பாட்டுமுதற்குறிப்பு	எண்	பக்கம்
1. பொது		
ஓம்எனும்	1	3
தாளுட்சி	2	4
நாமாட்சி	3	5
வெண்டாமரை	4	6
காதலாகி	5	7
நீற்றினை	6	8
காயம்	7	9
ஊனை	8	10
அஞ்செழுத்து	9	11
அடைக்கல	10	12
மாணிக்க	11	14
மங்கை	12	15
வையம்	13	17
வள்ளலார்	14	18
2. முருகன் வணக்கக் கீதங்கள்		
A. பொது		
எழுபுவன	15	21
கருணைச்செந்தேன்	16	22
இருக்கும் இடம்	17	23
நீலக்கடல்	18	24
பனிமாமதி	19	25
தோலும் நரம்பும்	20	26
வெறிகொண்ட	21	27
காக்க எனை	22	28
என்னை மறந்திருப்ப	23	29
அழுத கண்ணீர்	24	30
அந்தோ என்றன்	25	31
காமக்கடலின்	26	32
கண்ணுடி	27	33
மூச்சுவிட்டிருக்கும்	28	34
நினைத்தபோதென்	29	35
அச்சம் உனக்கேன்	30	36
வேலுமயிலிருக்க	31	37
B. பழநி		
பார்த்திருப்பேன்	32	38
கிண்கிணி	33	39
ஐயா புரிந்தது	34	40
உன் அருளாலே	35	41
C. திருத்தணிகை		
சதங்கை	36	42
தணிகாசலத்தில்	37	43
திருத்தமுடன்	38	44
D. திருச்செந்தூர்		
கூடும் விதம்	39	45
வந்தேறி	40	46
தரிசனம்	41	47
E. திருப்பரங்குன்றம்		
திருப்பரங்குன்றில்	42	49
கலியாணமூர்த்தி	43	50
F. திருமுருகன்பூண்டி		
திருமுருகன்பூண்டி	44	51
செவிட்டாத	45	53
G. திருச்சிக்கல்		
சிங்கார	46	54
திருச்சிக்கலில்	47	55

பாட்டுமுதற்குறிப்பு	எண்	பக்கம்
H. சீனுபுரம்		
சீனுபுரத்துறையும்	48	56
தெய்வங்கள்	49	57
வேல்பிடித்த	50	58

3. சிவபெருமான் வணக்கக் கீதங்கள்

பாட்டுமுதற்குறிப்பு	எண்	பக்கம்
A. சிவவுருவத்தத்துவம்		
ஏழிசையாகியும்	51	61
முன்னைப்பழம்	52	63
தன்னலம்	53	64
பச்சைக்கொடி	54	66
எரிமலையும்	55	67
பாயும் முரட்டு	56	69
சங்கரா	57	71
அடிபடுந் தெய்வம்	58	72
தென்பாலுகந்தாடும்	59	73
மதுரை		
மாமதுரையில்	60	74
திருவாலங்காடு		
ஆலங்காட்டில்	61	75
B. சிவனிடம் சரண்புகுதல்		
நீளநினைந்தடியேன்	62	76
இடரினும் தளரினும்	63	77
C. சிவனிடம் வேண்டும் வரம்		
பொய்க்கின்ற	64	78
என்பால்	65	79
எத்தனை	66	80
ஆனந்த	67	81
D. சிவனின் அருள் திறம்		
மறுத்தனை	68	82
கடையன்	69	84
அடித்தடித்	70	86
மூவாமருந்	71	87
நன்றேசெய்	72	88
E. உலகிற்குபதேசம்		
திருமுல்லை	73	90
முல்லைவாயில்	74	91
கடல்வற்றி	75	92
இந்திரபோகம்	76	93
தீவினைப்பாரம்	77	94

4. திருமால் வணக்கக் கீதங்கள்

பாட்டுமுதற்குறிப்பு	எண்	பக்கம்
A. கனவிற் கண்ட காட்சி		
எங்கும்	78	97
கனவிற் கண்டேன்	79	99
B. நாங்குனேரி		
நான்நமோ	80	100
தேங்குநாரி	81	101
C. காஞ்சிபுரம்		
மெய்குன்றி	82	102
D. கண்ணன்		
கானக்குழல்	83	103
வெண்ணெய்	84	104

பாட்டுமுதற்குறிப்பு	எண்	பக்கம்
5. உலக நிலையாமையும் உள்ளத்துணர்ச்சியும்		
A. உலகத்தை நம்பாதே		
எட்டிப்பழம்	85	107
நம்பாதே	86	108
நீரிற்குமிழி	87	109
பொய்யான	88	110
B. மனத்திற்கு உபதேசம்		
இன்னும் பிரேமை	89	112
எண்ணிப்பார்	90	113
நைந்தழிந்து	91	114
C. மனோநிலை		
அடிமைத்திறத்தில்	92	115
ஆயிரம் ஈட்டி	93	116
இனியும்நான்	94	117
6. இயற்கைப்பொருள் கீதங்கள்		
சூரியனே	95	121
வெள்ளைமதியே	96	123
இமைத்தும்	98	127
வெள்ளலை	99	129
தாமரை	99	129
வானவில்லை	100	131

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
4	சரணம் வரி 2	செய்தும	செய்தும்
7	சரணம் வரி 4	சோதிபாதீர்	சோதியாதீர்
8	பல்லவி வரி 1	நீறறினை	நீற்றினை
16	குறிப்பு 3	எத்தமை	எடுத்தமை
27	கடைசிவரி	வருடதினத்தன்று	வருடத்தினத்தன்று
28		சரணம்	சரணங்கள்
32	சரணம் 1 வரி	செயயாத	செய்யாத
36	கடைசிவரி	ஓர்நாள்	ஒருநாள்
51	குறிப்பு, வரி 6	பூன்டி	பூண்டி
67	சரணம் 1 வரி 1	இருக்கும்	இருக்கும்
68	குறிப்பு 8	பிணததின்	பிணத்தின்
71	முதல்வரி	சாற்றுவாய் நீ	சாற்றுவாய் நீயே
72	குறிப்பு 5 வரி 3	செறுப்பு	செருப்பு
84	குறிப்பு 1 வரி 2	அணை	Nil
102	குறிப்பு4இறுதிவரி	மங்ளை	மாலை
108	அனுபல்லவி வரி 2	(எண்)	(நம்)
69	குறிப்பு வரி 1	திருப்பாச்சிலாச்சிராமம்	திருப்புகலூர்

1. பொது

1

விநாயகர்

இராகம்—சௌராஷ்டிரம் தாளம்—ஆதி

பல்லவி

ஓம்எனும் ஒலிநீ ஓங்கும் அவ்வடிவும்
உருவாய் உயர்வோனே (ஓம்)

அனுபல்லவி

பாமாலை செய்துன் நாமமுமே கூறி
நாதா வென்றடியர்சொல் கணபதி (ஓம்)

சரணம்

மனசுதேறி மாருதுவந்து மலருடனே இறைஞ்சிப்
பணிகளிங்கு செயும் அவைகள் ஐயமுறச்
சொல்லு சொல்லெனக் கெஞ்சி,
அனுதினமும் பணியடியர் முகமலர
அகமதிற் கொள்ளக் களி நாளும்
நனிசெயும் மன்ன, வேழமா முகமதொடு
விரைவில் வருதி பக்தன் நானிங்கினி மகிழ்வுற (ஓம்)

குறிப்பு: "ஸ்ரீகணபதி" என்ற தியாகராஜரின் பாட்டின் இராகம், மெட்டு, இவைகளிலேயே, இக்கீர்த்தனையும் அமைக்கப்பட்டுள்ளது.

2 மீனாட்சியம்மை

இராகம்—ஜகன்மோகினி தாளம்—ஆதி

பல்லவி

தானாட்சி செய்யும் எழில் தங்கும் தென்மதுரையில்
மீனாட்சி பாதம் பணிந்தேன் மேன்மையணிந்தேன்
(தா)

அனுபல்லவி

தேனாட்சி செய்யுமலர்த் திசைமுகனோடு மாலும்
தேடித் திரிந்தும் காணாத் தேவர்க்குகந்த தேவி (தா)

சரணம்

மானாட்சி செய்யும் கையன் மழுவாட்சி செய்யும் மெய்யன்
மனமாட்சி செய்தும் தொண்டர் இனமாட்சி காக்கும் ஐயன்
ஊனாட்சி செய்யும்[1] என்றன்[2] உடலாட்சி தன்னைக்கொண்ட
ஓங்கும் சோமேசன் முனம் பாங்கின் மணந்த தேவி (தா)

மதுரையில் மீனாட்சியம்மையைத் தரிசித்த பின் ஆசிரியரால் பாடப்பட்டது.

1. சதையானது மிகுந்திருந்து ஆட்சி செய்யும்

2. என் உடம்பை இடமாகக் கொண்டு ஆட்சி செய்கின்ற. "எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்" என்ற திருவாசகத்தையும் நோக்குக.

3 காமாட்சியம்மை

இராகம்—வாகதீஸ்வரி தாளம்—ஆதி

பல்லவி

நாமாட்சி[1] தேவியுடன்[2] பூமாட்சி தேவி பணி
காமாட்சியுன் கழல் என் கண் மாட்சியே—கதியருள்
செய் (நா)

அநுபல்லவி

சீமாட்டியாய்ச் சிவனுர் செம்பாதித் தேகந் தன்னில்
சேர் மாட்சியாய்க் காஞ்சியில் பார் ஆட்சி செய்திடுவாய்
(நா)

சரணம்

பாமாட்சி யாலுன்றனைப் பணிமாட்சி தேடிவந்தேன்
பரிவாற் சிறந்தெனக்குப் புரிவாய் நின் தண்ணருளே
[3]காமாட்சி சாரும் எழிற் [4]கலைமாட்சிக் காஞ்சி தன்னுள்
காராட்சி மேனியுடன் கனிவாட்சிக் கண்ணுடையாய்
(நா)

---

1. சரஸ்வதி 2. பூமாதேவி அல்லது பூவில் உள்ள தேவி யாகிய இலக்குமி. 3. கா = பொழில்—மாட்சி = மாண்பு 4. கலைகளின் மாண்பு நிறைந்த காஞ்சி. "கல்வியைக் கரையிலாத காஞ்சிமா நகர்" என்ற அப்பர் திருவாக்கையும் நோக்குக.

ஆசிரியர் காஞ்சிக்குச் சென்று காமாட்சி யம்பிகையைத் தரிசித்த பின் பாடப்பட்டது இக்கீர்த்தனை.

4 கலைமகள்

இராகம்—சரஸ்வதி தாளம்—ஆதி

பல்லவி

[1] வெண்டாமரைத் தலத்தில் வீற்றிருக்கும் தாயே
வேண்டிப் பணிந்திடுவேன் விரும்பி யருள்வாயே (வெ)

அனுபல்லவி

பண்டாய நான்மறையும் பலவிதக் கலைகளும்
[2] கண்டாலே யுணர்ந்திடும் கவின் திறம் மகிழ்ந்தருள் (வெ)

சரணங்கள்

1. தூயவெள்ளாடையுடன்[3] துலங்கும் பொன்மேனியினாய்
தோன்றித் துணையிருந்து தோத்தரிப்போர்க் கருள்வாய்
வாயாலுன் நாமமதை வாழ்த்தி வணங்கிச் சொல்வேன்
வாழ்வில் உன்னருள் உண்டேல் வையகமெல்லாம் வெல்வேன் (வெ)

2. கம்பன் குருபரன் நற் காளிதாஸனும் அன்று
காசினியோரால் மெச்சிக் கருதப் பெறவும் செய்தாய்
தம்பெருந் தோழரென்றே தரணி யாள்வோர் அவரைத்
தாங்கித் துதித்திடவும் பாங்கிற் புரிந்தாய் அருள் (வெ)

---

1. வெண் தாமரை
2. எந்தக் கலையையும் கண்டமாத்திரத்திலேயே அறிந்து கொள்ளச் செய்க.
3. விளங்கும்.

அஞ்செழுத்து

இராகம்—பெஹாக் தாளம்—ரூபகம்

பல்லவி

காதலாகிக் கசிந்து கண்ணில் நீருமல்கிக் கரையும் அன்பர்
நாத நாமம் நமச்சிவாய என்று நாடுவீர்—உலகீர் (கா)

அனுபல்லவி

சாதலாதி மூப்பும் நோயும் சார்ந்தவாழ்வு தீர்ந்து நீங்கச்
சாம்பலான நீறுபூசிச் சோம்பலின்றித் தாம் பணிந்து (கா)

சரணம்

ஈதலாதி யறங்கள் செய்தும் எண்ணில் தீர்த்தம் தன்னில் ஆடி
வாதிலாத வாழ்வு வாழ்ந்தும் மாதவனைக் காண நேடிக்
கோதிலாத நூல்கள் நாடுங்குவலயத்தீர், கவலையைத்தீர்
பாதிமாதின் பாகன்தன்னைச் [1]சோதியாதீர் யாதும் நாளும் (கா)

---

1. "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும், சோதிக்க வேண்டாம்" என்ற சம்பந்தப் பெருமான் திருவாக்கையும் நோக்குக.

6 திருநீறு

இராகம்—கானடா தாளம்—ஆதி

பல்லவி

[1] நீற்றினை யணிந்திடும் நெடுந் தகையோர்—சிவப்
பேற்றினை யணிந்திடும் பெருமையரே—அருமையுடன்
(நீ)

அனுபல்லவி

[2] ஆற்றினை யணிந்திடும் அரன்பதம் பணிந்திடும்
அடியவர்க் கணிகலம்[3] பொடியெனப் பெயர் பெறும்
(நீ)

சரணம்

[4] தூற்றின சமண் நகை ஆற்றிற் கரைத்த பொடி
[5] கூற்றினை நிகர் பிணி மாற்றின மாண்பின் பொடி
போற்றிடும் மெய்ப்புகழார் [6] போரில் ஏனுதிநாதர் [7]
மாற்றலர் தம்மை வெல்ல மகிமை யளித்ததிரு (நீ)

---

1. திருநீற்றினை.
2. கங்கையை
3. ஆபரணம். ''சுந்தரமாவது நீறு'' என்றார் சம்பந்தர்.
4. சமணர்தம் அகம்பாவத்தை ஆற்றிலே கரைந்தோடும்படி செய்த நீறு. சமணர் சம்பந்தருடன் போட்டியிட்டு ஆற்றில் விடுத்த தம் ஏடு ஓடிப்போக அவர்களது செல்வாக்கும் ஓடிப் போனமையைக் குறிக்கும்.
5. பாண்டியனுக்கு யமனை யொத்துத் துன்பம் அளித்த வெப்பு நோயைத் தீர்த்தமையைக் குறிக்கும்.
6. மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்ல வந்த பாதகன் நீறு அணிந்திருந்ததால் அவனைக் காப்பாற்றியதும் திருநீறு;

7. அடியார்

இராகம்—உமாபரணம் தாளம்—சாபு

பல்லவி

[1] காயம் முழுதும் நீறும் கண்கள் வழியும் நீரும்
தோயும் வடிவின் தொண்டர் தோற்றம் கண்டேன்—
துயரம் விண்டேன் (கா)

அனுபல்லவி

தேயம் முழுதும் சுற்றிக் காயும் கனியும் உண்டு
சிந்தை சிவன் தாள்பற்றிக் கந்தை மிகையாக் கொண்டு
(கா)

சரணம்

வாயும் செந்தமிழ்க்கவி வளமுறப் பொழிதர
வணங்கித் தலைகுனிந்தே இணங்கித் தொண்டர் குழுவில்
ஏயும் திருக்கரத்தில் எழில் உழவாரப்படை
ஏந்தித்திரிந்தும் அருள் மாந்திப் பிணைத்தும் கரம் (கா)

---

1. இப்பாட்டு, பொதுவாகச் சிவனடியாரின் தோற்றத்தையும், சிறப்பாகத் திருநாவுக்கரசு பெருமானின் தோற்றத்தையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

அதன் மூலம் தன் பெருமையை என்றும் நிலை நாட்டியதும் திருநீறு.

7. ஏனாதி நாதர் என்னும் மற்றொரு அடியாரையும் வெல்லக் கருதி வந்தவன் நீறு அணிந்திருந்ததால் அவன் "தன் கருத்தே முற்று வித்தான்." இங்ஙனம் அவன் அடைந்த வெற்றி யவனுடையதல்ல ; திருநீற்றினுடைய வெற்றியாகும் என்னும் கதையைக் குறிப்பிடுகிறது.

8 ஞானசம்பந்தர்

இராகம்—இந்தோளம் தாளம்—ஆதி

பல்லவி

[1] ஊன சம்பந்தத் துலகில் [2] உய்வழிதாராய்
ஞான சம்பந்தா என்றனின் நைவழி [3] தீராய் (ஊ)

அனுபல்லவி

கான [4] சம்பந்தத் தமிழ்க் காழி சம்பந்தா உயர்
வானசம்பந்தம் கொள்வேன் வாழ்த்தியே நானுன் நாமம் (ஊ)

சரணம்

[5] மீன வன் நொந்தவலி [6] ஈனசம்பந்தக் கலி
மேவும் இருகலியை வென்ற சைவப் புலியே [7]
[8] கோனவன் கொண்டதவக் கோதை மங்கைக்கரசி [9]
குழந்தை எனக் குழைந்தேகூப்பிக்கை தொழுந்தேவே (ஊ)

---

1. ஊனங்களின் சம்பந்தத்தைக் கொண்ட இவ்வுலகில்
2. பிழைத்தெழும் வழியைக் காட்டியருள்வாய்
3. நாசமடையும் வழியை யொழித்திடுவாய்
4. இசையின் சம்பந்தமுடைய தமிழ்த் தேவாரம்பாடிய. சுந்தரமூர்த்தி சுவாமிகள் "இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர்" என்று குறித்துள்ளது கருதுக.
5. பாண்டியனுக்கு நோவைக் கொடுத்த வெப்பு நோய்
6. ஈனர்களது சம்பந்தத்தால் ஏற்பட்ட கேடு
7. இவை இரண்டையும் சென்று அழித்த புலி போன்றவனே
8. பாண்டியன் மனைவியாகிய
9. மங்கையர்க்கரசி என்னும் தேவி.

9 நாவுக்கரசர்

இராகம்—ஹரிகாம்போதி தாளம்—ஆதி

பல்லவி

[1] அஞ்செழுத் தோதினர் [2] ஆழ்கடல் நீந்தினர்
அப்பர் என்றிடு நாவுக் கரசு கண்டாய் (அ)

அனுபல்லவி

தஞ்சமென்றே சிவனர் தாள்கள் அவைபரவி
நெஞ்சமதில் நினைந்தே நெகிழ்ந்து தமிழ்புனைந்தே (அ)

சரணம்

[3] வஞ்சமண் ஆலந்தன்னை வாங்கியுண்டேயும் சென்றார்
[4] வைத்தவெங் நீற்றறையை வாழ்தலமாக்கி நின்றார்
[5] அஞ்சல் இல்லோம் என்றுமுன் கஞ்சந்தனையேவென்றார்
[6] ஆசை அப்பூதிச் சேயன் அரிநிற் பிழைக்க என்றார் (அ)

---

1. பஞ்சாக்ஷரமாகிய ‘நமசிவாய’ என்பதைப் பாடிப் பரவினர்.

2. சமணர்களால் கல்லுடன் கட்டிக் கடலில் எறியப் பட்ட போதிலும் அஞ்செழுத்தின் துணையால் அக்கடலி னின்றும் கரையேறினர்

3. வஞ்சமுடைய சமணர் தந்த விஷம் கலந்தசோற்றை வாங்கியுண்டும் இறவாமல் தன் வழிச் சென்றார்

4. சமணரால் தாம் இடுவித்த நீற்றறையைச் சிவனடி நீழலாக்கி யாதொரு தீங்கும் நேராமல் நின்றார்

5. சமணர்கள் தம்மைக் கொல்லும் பொருட்டு விடுத்த மத யானையை “அஞ்சுவதியாதொன்றுமில்லை அஞ்சவருவது மில்லை” எனப் பாடி யடக்கி அதைப் பணிவித்தார்.

6. அப்பர் உணவு உண்ணும்பொருட்டு வாழையிலை யறுக்கச் சென்ற குழந்தை (அப்பூதியடிகளார் முதல் மகன்) பாம்பு கடித்து இறந்தகாலை அவன் உயிர்த்தெழும்படிப் பாடினர்.

10 சுந்தரர்

இராகம்—பைரவி தாளம்—சாபு

பல்லவி

அடைக்கல மாகு முன்றன் அடித்தலமே—அதை
ஆரூரனேசூட் டாய்என் முடித்தலமே (அ)

அனுபல்லவி

[1] விடைக்கலங் கார நாதன் விருத்தனுய் வழக்காட
வீதியிடையவனை விரட் டியவா எனக்கே (அ)

சரணங்கள்

1. [7] சடைக் கலங்காரமாய்வெண் சந்திரனைவைத் திட்டான்
தனக் கலங்காரத் தோழன் தாணியில் நீ என்றிட்டான்
[2] நடைக் கலங்காரஞ் செய்தோர் நள்ளிரவிற் சென்றிட்டான்
நம்பன் உன் பொருட்டென்னில் அன்ப நின்போல் வாருண்
டோ ? (அ)

2. [3] ஆற்றிவிட்ட பொன்னினை ஆரூர்க் குளத் தெடுத்தாய்
[4] ஆற்றப் பசி பிச்சையூண் அரந்தர நீ மடுத்தாய்
[5] பேற்றின் சங்கிலி தன்னைப் பிணைக்கச் சூளே கொடுத்தாய்
[6] பெருங்கலிக்காமர் கொண்ட பிணக்கொழிய அடுத்தாய் (அ)

---

1. விடைக்கு அதாவது ரிஷபத்துக்கு அலங்காரம் செய்வதைப்போல் வீற்றிருக்கும் சிவன், அந்தணவடிவில் வந்து வன்றொண்டரை அடிமை என்று சொல்ல, வன்றொண்டர்

அவ்வந்தணரது கையிலுள்ள ஓலையைக் கிழிக்கும் பொருட்டுத் துரத்தியதைக் குறிக்கின்றது இவ்வனுபல்லவி.

2. இது நடுராத்திரியில் சிவபிரான் சுந்தரர் பொருட்டுப் பரவையின் வீட்டுக்குத் தூதராய் நடந்து சென்றதைக் குறிக்கிறது.

3. சிவன் ஆரூரருக்குத் திருமுதுகுன்றத்தில் அளித்த பொன்னை, அவர் அவ்வூர் ஆற்றில் போட்டுவிட்டுத் தனது திருஆரூர் வந்து அவ்வூரிலுள்ள குளத்தில் அதே பொன்னை எடுத்ததைக் குறிக்கும்.

4. திருக்கச்சியூருக்குச் சென்ற வன்றொண்டர் பசியால் வருந்தும்பொழுது சிவபிரான் ஓர் அந்தணவடிவத்துடன் வந்து, அவ்வூரில் தான் பிச்சை வாங்கி வந்து சிறிது உணவு அளிக்க அதையேற்று ஆரூரர் உண்டதைக் குறிக்கும்.

5. திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியாரைத் திருமணம் செய்யும் பொருட்டு ஆரூரர் செய்து கொடுத்த சபதத்தைக் குறிக்கும்.

6. தான் சிவபிரானைப் பரவையிடம் தூதனுப்பியதற்காகத் தன்மீது கோபங்கொண்டிருந்த ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் சீற்றத்தைத் தணிக்கும் பொருட்டுச் சுந்தரர் அவர் தம் வீட்டிற்குப் போனதைக் குறிப்பிடுகிறது.

11 மாணிக்கவாசகர்

இராகம்—மோஹனம் தாளம்—ஆதி

பல்லவி

மாணிக்க வாசகரின் வார்த்தை சொல்வோம்—நம்
1 மறுமை இம்மை யிரண்டும் மாற்றிக் கொல்வோம்—வெல்
[வோம் (மா)

அனுபல்லவி

காணிக்கையாய்த் தன்னையும் கையிலுள்ள பொன்னையும்
2 காதலுடன் குருவின் பாதமலர் வைத்திட்ட (மா)

சரணம்

ஆணிப் பொன்னம்பலத்தில் ஆனந்த நர்த்தனஞ்செய்
ஆதிமுதற் பரமன் சோதி எழிற்சிவனைப்
பேணிப் பணிந்துருகிப் பெய்யுமழையெனவே
3 பிரசத் தமிழ் பொழிந்து பிறவித்துயர் ஒழிந்த (மா)

---

1. "மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி மறுமையோடிம்மையும் கெடுத்த பொருளனே" என்னும் மணிவாசகரின் வாக்கை நோக்குக.

2. மணிவாசகர், தம்மையும் தாம் மன்னன் பொருட்டுக் குதிரை வாங்க எடுத்துச் சென்ற பொன்னையும் திருப்பெருந்துறையில், குருந்த மரத்தடியில் வீற்றிருந்த குருநாதனின் பாதத்தில் காணிக்கையாகச் சமர்ப்பித்து நின்றதைக் குறிக்கும்.

3. தேன்போன்ற - திருவாசகமென்னும் தேன்.

12 மங்கையர்க்கரசி

இராகம்—தேவகாந்தாரி தாளம்—ஆதி

பல்லவி

மங்கையர்க்கரசி என் மனத்தரசி—நெடு
மாநிலச் சைவர்க் கருள் இனத்தரசி [1]

(முடுகு) மங்களரூபி களங்கமில் ஆவி
விளங்கிடுதேவி உளங்களிகூர்தரு (ம)

அனுபல்லவி

செங்கைச் சிவக் கன்றன்று[2] சேர்ந்தெடுக்க முன்னின்று
அங்கை குவித் தெழுந்தாள் எங்குலத்தெய்வம் நன்று (ம)

சரணங்கள்

1. காரமண் என்னும் இருள்[4]கலைந்து வெண்ணீற்றின் அருள்
கதிரொளி பாண்டிநாட்டில் காலமெல்லாம் நிலவப்
பேரருட் காழிச் சேயைப் பிரியமுடன் அழைத்த
பெய்வளைச் செல்வி எங்கள் தெய்வத்திரு மடந்தை (ம)

2. சோழர் குலம் விளக்கும் சோதிச்சுடர்விளக்கே [5]
[6] சுந்தர பாண்டியன்றன் துதிக்கத்தகும் துணைவி
வீழவிடாது சைவம் வீரக் குலச்சிறையார் [7]
வேண்டும் துணையாய்நிற்கப் பாண்டிநன்னாட்டைக்
காத்தார் (ம)

1. சைவ இனத்துக்கே ஓர் அரசி. "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" என்ற சேக்கிழார் பெருமான் திருவாக்கையும் நோக்குக.

2. திருஞானசம்பந்தர்.

3. மதுரைக் கோவிலில் ஞானசம்பந்தர் பாதத்தில் வீழ்ந்து பணிந்த மங்கையர்க்கரசியை அவர் தம் கைகளால் தொட்டு எத்தமையைக் குறிக்கிறது.

4. கரிய சமணர்கள் நிரப்பிய இருள்.

5. சோழர் குலத்தை விளக்க மங்கையர்க்கரசி அதில் அவதரித்தமை கூறப்பட்டது.

6. சுந்தரபாண்டியன் என்னும் கூன்பாண்டியனுகிய மன்னன் மங்கையர்க்கரசியின் கணவனுயினும் அவன் அவரைப் போற்ற வேண்டிய அளவு அவ்வம்மையார் உயர்வுடையவரா யிருந்தார். காரைக்காலம்மையை அவர்தம் கணவன் வணங்கினதைக் கவனிக்க.

7. சைவ வீரராகிய குலச்சிறையார் என்னும் மந்திரி, மங்கையர்க்கரசியார்க்குத் துணைநின்றமை கூறப்பட்டுள்ளது.

13 வடலூர் வள்ளலார்

இராகம்—ஆந்தோளிகா தாளம்—ஆதி

பல்லவி

வையம் புகழும் எங்கள் வடலூர் வள்ளலார் என்னும்
ஐயன் பதம்பணிந்தே அருள்பெறுவோம்—இருள் அறுவோம் (வை)

அனுபல்லவி

ஐயம் மனத்திற்கொண்டே அழியும் ஜகத்திற்கின்றே
அபயம் அளிக்கும் அருள் உபயம்செயும் உத்தமர் (வை)

சரணம்

உய்யும் வழிதவறி ஒழியும் உலகம் இன்று
செய்யும் பணி அம்பலச் சிவனின் பணியே என்று
மெய்யை யுரைத்துச்சென்ற மேலாம் தவத்தர் அருள்
பெய்யும் அருட்பாவினைப் பெரிதும் கசிந்துபாடி (வை

14 வடலூர் வள்ளலார்

இராகம்—கௌளம் தாளம்—ஆதி

பல்லவி

வள்ளலார் வண்டமிழை வாழ்த்தியோதிடிலே நாம்
[1]எள்ளலாகும்வருவீர் இருவினையை-இனியுலகினில்(வ)

அனுபல்லவி

[2]உள்ளூறும் இன்பக்கடல் ஓங்கித் திளைக்க உயிர்
உன்னிடு வீரேல் நீவிர் பன்னிப் பகல் இரவாய் (வ)

சரணம்

தள்ளலாகும் நம்மிடம் சார்ந்த விகாரம் பல
தப்பலாகும் எந்நாளும் எய்ப்பளிக்கும் வஞ்சமே
கொள்ளலாகும் அம்பலக்கூத்தனின் தண்ணருளே
கொல்லலாகும் பிறப்பைக் குருராஜராமலிங்க (வ)

1. இகழலாகும்.
2. உயிரில் உள்ள இன்பக்கடல்.

2. முருகன் வணக்கக் கீதங்கள்

15 **A. பொது**

இராகம்—நீலாம்பரி   தாளம்—சாபு

பல்லவி

ஏழு புவனத் தெழில் எல்லாம் திரண்ட மைந்த[1]
இளஞ்சுடர் ஞாயிறே குழந்தை வேலா (ஏ)

அனுபல்லவி

[2]மாழை விழிப் பதுமை மாதர் இருவர் நிதம்
வாழை முதல் முக்கனி வாழ்வெனத் துய்த்திடுவோய்
(ஏ)

சரணம்

தாழை மல்லிகை ஜாதி சண்பகம் முல்லை யாதி
தண்மலர் வாசமும் பால் தழங்கருந்தேன் ருசியும்
ஆழ்கடல் முத்தும் பொன்னும் அணி வயிரமும் மின்னும்
அலகில் ஜோதி யழகும் அமைதர உமைதரும் (ஏ)

---

1. திரண்டு அமைந்த என்றும் திரண்ட மைந்த என்றும் கொள்ளலாகும்.

2. மாவடுவன்ன கண்ணையுடைய.

16

இராகம்—ஷண்முகப்ரியா தாளம்—ஆதி

பல்லவி

கருணைச் செந்தேன் கசியும் கமலவதனச் சேயே
காதல் மிகக் கந்தனே கசிந்தழுதேன் காப்பாயே (க)

அனுபல்லவி

வருணனைக் கடங்காத வனப்பின் கடலே உன்னை
வாரியள்ளிக் குடிக்க வாழ்வில் என்றும் துடித்தேன் (க)

சரணங்கள்

1. பொருள் நனி யடைந்த நற் புலவர்கள் மகிழ்ந்துளம்
[1]பொய் புனையின்றி உண்மைப் பொருள் புனைந்தியற்றிடும்
அருள் நனி சுரக்கும் பல் அருங்கவிச் சித்திரங்கள்
அவைகளிற் சுவைதர அழகொழுகப் பழகும் (க)

2. காலைச் சுடர் விரிக்கும் [2]கைபுனைந் தியற்றிடாக்
காந்திச் சூரியன் எழில் ஏந்திக் கொழிக்கும் உன்னைச்
சோலைப் பசுங்கிளியாள் கோலக் குறத்தி வள்ளி
ஆலைக் கரும்பு ரசம் போலக் குடிப்பாள் அள்ளி (க)

---

1. புலவர்கள் வழக்கமாகக் கூறும் "பொய் புனை" யில்லாமல், உண்மையாகத் தாம் கண்ட பொருளாகிய முருகன் திருவுருவத்தையே வருணித்துள்ள சிறந்த கவிகளாகிய நக்கீரர், அருணகிரி நாதர், குமரகுருபரர் முதலியவர்களின் கவிச் சித்திரங்களில் அவன் கண்கூடாகப் பழகி நம்மனத் திற்குக் காட்சியளிப்பதைக் குறிக்கின்றது.

2. திருமுருகாற்றுப்படையைப் பார்க்க.

17

இராகம்—**ஹம்ஸத்வனி** தாளம்—**ஆதி**

பல்லவி

இருக்கும் இடந்தேடி ஏழை என்பா லோடி
எழுந்தருளும் தெய்வமே குழந்தை வேலன்
(முடுகு) எனதிரு கரமவை புனித முருகனடி
யவைதொழ யினிதுற மனது மகிழநிதம் (இரு)

அனுபல்லவி

எருக்கும் மத்தமும் அணி எங்கள் சிவனார் பணி
தருக் குடையான் கிணிகிணித் தாளுடையான் நன்மணி
(இரு)

சரணம்

தெருக்கள் எல்லாம் தேடித் திரிந்து புலம்பித் தினம்
தெரிசனம் பெற நாடித் தேம்பி யழுதேன், மனம்
உருக்கும் தன் கோலமதை [1]உருக்கிய பால் வெள்ளியில்
உவக்கும் படித் தந்தேயென் தவக் குருவாயுவந்தோன்
(இரு)

---

1. பால் போன்ற வெள்ளியை யுருக்கி வார்த்த முருகன் றன் உருவம் பதித்த படத்தைக் குறிப்பிடும்.

இப்பாட்டின் தோற்றுவாய்: **12-5-44**ல் ஆசிரியர் மதுரையில் தங்கியிருந்தபோது ஒருநாள் படங்கள் விற்பவன் ஒருவன் விலைக்குப் படங்கள் தேவையா என்று இவரைக் கேட்டுக்கொண்டேயணுகினன். "படமூட்டையைக் கீழே வையும்; முதலில் மேலே இருக்கும் படம் முருகனதாயின் நிச்சயம் எடுத்துக் கொள்ளுகிறேன்" என்று ஆசிரியர் கூறினர்.

18

இராகம்—கரஹரப்ரியா தாளம்—ஆதி

பல்லவி

[1]நீலக்கடல் மிதக்கும் நிறை சுடர்க் கதிரோன்
நிகர்க்கும் தோகை மயில்மேல் உகக்கும் குகா (நீ)

அனுபல்லவி

[2]பாலைக் கனவில் தோன்றும் பசும்பொழில் தீவைபோன் றென்
பாழும் உளத்தில் தோன்றி வாழ்வும் தருவாய் ஊன்றி (நீ)

சரணம்

ஆலைக்கரும்பு ருசி யாகும் என்றே அடியார்
ஆர்வக் கடலில் திளைத் தாடிப் பணிந்து நிதம்
கோலக் குணக் குமரா குறத்தி வள்ளி தெய்வானை
கூடிக் களிக்கும் தேவா கோனேஎன் றேத்துவோனே (நீ)

---

1. காலையில் நீலமாகிய கடல் பரப்பின் மீது கிழக்கே உதயமாகும் சூரியனைப் பச்சைமயிலின் மீது வீற்றிருக்கும் சிவப்பு நிறமுடைய முருகன் ஒத்திருக்கிறான் என்பது இதன் பொருள்.

2. பாலைவனம்.

அங்ஙனமே முதன்முதல் அவன் மூட்டையை யவிழ்த்தவுடன் எடுக்கப்பட்ட படம் முருகனுடையதாயிருக்க அதை ஆசிரியர் விலைக்கு வாங்கிக் கொண்டார். அப்போது அவர் உள்ளத் தெழுந்த ஆச்சரியம், முருகன் கருணையைக் கண்டு மூண்ட மகிழ்ச்சி எல்லாம் தூண்ட, இக்கீர்த்தனை அப்போதே ஆசிரியரால் பாடப்பட்டது.

19

இராகம்—சிவாநந்தி தாளம்—ஆதி

பல்லவி

பனிமா மதி முகமார் மங்கையர்
பரிவாற் பணி முருகா—பரகதியது யருள் செயவரும்
(ப)

அனுபல்லவி

மனிதருட் பேயாய் நான் மாநில மீதினில்
[1]மாண் பிழந்தோய்ந்தேன் மதித்தெனை யாள்வாய் (ப)

சரணம்

காலமும் நானுனைக் காணத் திரிந்தேன்
காணேன் கலக்கமுற்றேன்
ஞாலமும் வானும் சீலமுடன் நாடும்
[2]ஞாயிறின் மேலோய் நலந்தரச் சேர்வாய் (ப)

---

1. பெருமை யிழந்து
2. ஞாயிறைக் காட்டிலும், சூரியனினும்

20

இராகம்—முஹாரி தாளம்—ஆதி

பல்லவி

[1]தோலும் நரம்பும் மூடித் துதைந்த சதையும் கூடித்
தோன்றும் எழிற் பிணமாய் நான் திரிந்தேன்—
[அருள் பிரிந்தேன் (தோ)

அனுபல்லவி

காலும் கையும் தலையும் கண்ணும் மூக்கும் செவியும்
மேலும் பல உருவும் மேவும் பண்பே மருவும் (தோ)

சரணம்

பாலும் கற்கண்டும் தேனும் பாகின் ருசிப் பழமும்
மாலும் பெறற்கரிய மகிமை யமுதும் ஆகும்
வேலும் மயிலும் கொண்ட கோலமுருகன் தன்னை
ஏலும் படிப்பணிந்தே ஏத்தா திழிந்த நாயேன் (தோ)

---

1. இஃது 2-5-44ல் பாடப்பட்டது.

21

இராகம்—நாதநாமக்ரியை தாளம்—ஆதி

பல்லவி

[1]வெறிகொண்ட தாயிடினும் விரும்பி வளர்த்த நாயை
வெளியேற்றித் தள்ளுவரோ [2]அளியுடையார் (வெ)

அனுபல்லவி

நெறிகொண்ட நின்மலர்த்தாள் நித்தம் நினைந்து வாழ்
[வின்
குறிகொண் டிருக்க நாயேன் குணங்கொண் டிருக்கச்
[செய்வாய் (வெ)

சரணம்

முறிகொண்டென் தீவினைப்பேய் முனிவுடன் தான
[லைத்தே
முடிகொண்ட [3]வாழ்வில்நாட்டம் முழுதும்தந்தேயும்
[[4]வாட்டும்
பொறிகொண் டைம்புலன்கூட்டும் பொய்வழிப்போ
[யென்மனம்
புண்பட் டழிந்ததையா கண்விட்டுப்பார் கந்தய்யா.
(வெ)

---

1. 'தாம் வளர்த்ததோர் நச்சுமாமரம் ஆயினும் கொலார்' என்ற திருவாசகத்தையும் நோக்குக.

2. அருள் உடையார்

3. மன்னரது வாழ்வில்

4. ஆசையைத் தந்து துன்புறுத்துகின்றது.

இப்பாட்டு 13-4-44 (தமிழ்ப் புதுவருட தினத்தன்று) பாடப்பட்டது.

22

இராகம்—காபி தாளம்—ஆதி

பல்லவி

காக்க எனை மறந்த காரணம் ஏதோ—
கழறலாகுமோ கந்தனே—சிவ மைந்தனே (கா)

அனுபல்லவி

ஆக்க எனை மறவா அருமறையோன் படைத்தான்
ஆயினும் நீயே யிந்த அவனியின் வாழ்விடைத்தான் (கா)

சரணம்

1. வாக்கை மறவா வாயால் வாழ்த்த மறவா துன்னை
ஏக்கம் மறவா நாயேன் ஏத்திப் பணிந்தேன் அன்னை
[2]கோக்கள் மறவா ஆயர் குலத்தவன் போல் நீ என்னை
நோக்க மறவாய் நானும் [3]நோற்றல் மறவேன் நின்னை
(கா)

2. நிந்தித்த வள்ளியின் சொல் நிறைந்த அமுதமுண்டோ
சிந்தித் தினையில் அள்ளிச் சேர்த்திட்ட தேனையுண்டோ
சந்தத் தமிழின் தேனைத் தானுண்டு மாலும் கொண்டோ
வந்தித் திடும் என் றனை வாழ்வித்திட மறந்தாய் (கா)

---

1. கூறலாகுமோ
2. பசுக்கள்
3. நோன்பிருந்து பணிதல்

23

இராகம்—கீரவாணி தாளம்—ஆதி

பல்லவி

என்னை மறந்திருப்பதேன்—எழில் முருகா
என்னை மறந்திருப்ப தேன்

(மு) இத்தலத்திலிலே மெய்த்துணைக் குரியர்
எத்துணைத் துமிலை வைத்தெனக் கருள (எ)

அனுபல்லவி

பொன்னை மறந் திருக்கப் போமோ உலோபிக் காங்கே
உன்னை மறந் திருக்க உள்ளம் பொறேனுன் நீயும் (எ)

சரணம்

அன்னை மறந்திருந்தால் ஆறுதல் பிள்ளைக் குண்டோ
ஆயன் மறந்திருந்தால் ஆடு மாடும் வாழுமோ
மின்னை மறந்திடாத[1] மெல்லிடையா ரிருவர்[2]
மேவிக் குலாவ மயில் மேல் வீற்றிருக்கும் குகா (எ)

---

1. மின்னலைப்போன்ற
2. வள்ளி தெய்வானை என்னும் இருவர்

24

இராகம்—சுருட்டி தாளம்—ஆதி

பல்லவி

[1] அழுத கண்ணீர் ததும்பி அகங்குழைந்தே வெதும்பித்
தொழுதழுதேன் முருகனே மால் மருகனே

(முடுகு) ஆதரவே யொரு போதுமிலாதிரு
மாநில மீதுறு பாதகன் நானுனை (அ)

அனுபல்லவி

தழுதழுத்த நாவினால் தஞ்சமென்றே கூவினால்
பழுதழித்தேயிப் பாவி பாலிரங்காய் நீ மேவி (அ)

சரணங்கள்

1. முழு மதி தன்னைப் பாலில் முத்து மணி வயிரம்
செழு மலரோடும் காய்ச்சிச் செய்த உருவச்சேயே[2]

(முடுகு) முத்தமிழ் வித்தக பத்தர்கள் நத்திட
முத்தி தனைத் தரும் அத்தனின் புத்திர (அ)

2. காயம் மனைவி செல்வம் கர்தற் குழவி யெல்லாம்
மாயம் என்றே துணிந்தேன் தூய நின்றாள் பணிந்தேன்

(முடுகு) கற்பனை விற்பனர் நற்பொருள் சொற்கொடுன்
அற்புத மிக்க மின் பொற்பதம் செப்பிட (அ)

---

1. 14-10-43 அன்றிரவு பூரணச் சந்திரன் வானில் பிரகாசித்துக் கொண்டிருந்ததை ஆசிரியர் உற்று நோக்கிய வண்ணம் இருந்த பொழுது ஓர் எண்ணம் அவர் மனத்தில் உதித்தது. அது இப்பாட்டில் உள்ள முதல் சரணமாக உரு

25

இராகம்—சாவேரி தாளம்—சாபு

பல்லவி

அந்தோ என்றன் தனிமை யகன்றிட ஆட்கொண்டென்
சிந்தாகு லம்தீர்த் தாளுவாய்—சிவ மைந்தனே (அ)

அனுபல்லவி

சந்தோஷம் என்னும் குளிர்ச் சந்திரனை என் மனச்
சஞ்சலம் என்ற பாம்பே சாப்பிட்டதால் கூப்பிட்டேன்
(அ)

சரணம்

சொந்த மனைவி யோடென் சோதரரும் அன்னையும்
பந்த மிகு சுற்றமும் பண்பு மிகு நண்பரும்
இந்த நாளில் அடைந்த என்றன் பணி யாளரும்
நொந்து விடுத்தார் என்னை நோவக் கெடுத்தார் பின்னை
(அ)

---

1. ஆசிரியர் தன் உத்தியோகத்தில் இருந்தபொழுது உண்டாகிய உணர்ச்சி மேலீட்டால் தனது அப்போதைய உண்மை மனோபாவத்தையும் அனுபவத்தையும் 8-3-44 அன்று இப்பாட்டின் மூலம் வெளியிட்டுள்ளார்.

வெடுத்தது. அதன் பின் இக் கீர்த்தனம் முழுதும் பாடப் பட்டது.

2. முழு மதியையும் முத்து, வயிரம், மாணிக்கம் இவற்றையும் பல மலர்களையும் ஒன்றாகக் கலந்து நிறைந்த பாலிலே இட்டுக் காய்ச்சிய பின் அதன் விளைவாகிய ஒளி மிகுந்த பண்டத்தால் உருவமைத்தாலென்ன ஒளி விடும் மேனியையுடைய குழந்தைத் தெய்வமே.

26

இராகம்—ப்ரபாவதி தாளம்—ஆதி

பல்லவி

காமக்கடலின் கரை ஏற்றிவிட்டாய்—‘ எனைக்
கண்டுகொள் ’என் றென்னைக் காப்பாற்றி நட்டாய்[1]

(முடுகு) கழலிணை தொழுநிதம் கதியது தந்தாய்
அழகுறும் உனதுரு வதனுடன் வந்தாய்
கந்தையா—கனிவுடன் நினதுளம்
நைந்தையா—கதியதை யருளியு
[2] கந்தையா—இது பொழுது தவிடு
வந்தய்யா—பரம குருபரனே (கா)

அனுபல்லவி

நேமக் கடன்கள் செய்து நித்தம் உனைப்பணியா
நீசப்புலையன் என்பால் நேசப்பரிவும் கொண்டே (கா)

சரணம்

சேமம் தருநின் பொற்றுள் சேவை செயயாத வெற்றுள்
சீலம் விடுத்துப் பெண்கள் ஜாலம் அடுத்துப் புண்கள்
தாழுங் கொண்டே யலைந்தே தத்தளித்திட்டேன் நைந்
[தே
தாகம் தணித் தென் தீய மோகம் தடிந்தே அன்பால்
(கா)

---

1. நிலை நிறுத்தினுய் என்றும், நண்பனுக்கினுய் என்றும் பொருள் கொள்க.

2. யருளி உகந்தையா என்று பிரிக்கவும்

27

இராகம்—பிலஹரி தாளம்—சாபு

பல்லவி

[1]கண்ணாடி நல்வதனக் கவின்நாடி நின்கமலக்
கழல்நாடிக் கதி நாடினேன்—கந்தா என்சொந்தா (க)

அனுபல்லவி

விண்ணாடி வாழும் இன்பும் வேயுறு தோளியராம்
பெண்ணாடி வாழும் இன்பும் பின்னோடிப்
[போயொழியக் (க)

சரணம்

புண்ணாடிப் புரையோடிப் புழுத்துச் சீழ்பொதிந்தஎன்
பொய்நாடும் மெய்யோடென்றன் புந்தியிலும் நீ
[போந்துன்
தண்ணாடும் செங்கருணைத் தயைநாடித் தங்கிட நான்
பண்ணாடும் பாடல் பாடிப் பரவிப் பணிந்து தினம் (க)

---

1. கண்ணாடி=எனது கண்கள் நாடி என்றும் கண்ணாடி போன்ற இனது என்றும் பொருள் கொள்ளலாம்.

2. மூங்கில் போன்ற தோட்களையுடைய பெண்கள். இப் பாட்டு எழுதப்பட்ட நாள் 25-11-43.

28

இராகம்— ஹம்ஸாநந்தி தாளம்—ஆதி

பல்லவி

மூச்சுவிட்டிருக்கும் போதெலாம் உன்றனின்
பேச்சுவிட்டிருப் பேனோ முருகா நானே (மூ)

அனுபல்லவி

காச்சுமூச்சென்று கத்திக் கடைசியிற் கையமர்த்திப்
போச்சுயிர் என்றென் சுற்றம் பொசுக்கும் வரை என்
[உடல் (மூ)

சரணம்

வாய்ச்சமட்டும் உலகில் வாழ்க்கை இன்பம் நுகர்ந்தே
வாழ்த்தியுன்னை யலகில் வகையிற் பணிந்திருந்தே
(முடுகு)வஞ்சகம் கொஞ்சமும் நெஞ்சினில் லின்றியே
தஞ்சம் அடைந்துமே கெஞ்சியும் அஞ்சியும்(மூ)

29

இராகம்—ஆபோகி தாளம்—ஆதி

பல்லவி

நினைத்தபோதென் நேரில்தோன்றும் நின்மலா குகா
—உனைத்
தினைத்துணையும் நான்மறவேன் ஆறுமாமுகா (நி)

அனுபல்லவி

கனைத்தழுதும் கதறித்தொண்டை கம்மிப்போயும்
[இம்மிப்போதும்
களைத்துப் போய்விடாமல் உன்னைத் திளைத்துப்
[போதனே என்றேத்தி (நி)

சரணம்

மனைத்துணைவியாகும் மாதும் மகிழ்த்துணையாகாதபோதும்
மலைச்சுமையும் ஆகித் தீது மரித்துவீழச் செய்யும்போதும்
அனைத்தும் தூய சுகமென்றெண்ணி அணைத்தமாதால்
[அழியும் போதும்
அடைக்கலம் நின் பாதப்போது அரைக்கணம்
[பொறேன் என்றே நான் (நி)

30

இராகம்— ஹரிகாம்போதி தாளம்—ஆதி

பல்லவி

[1]அச்சம் உனக்கேன் மனமே—அவனிதனுள்
அச்சம் உனக்கேன் மனமே
(முடுகு) அதுபெரியது இதுவலியது வினைகொடியது
எனஉரைதரு குறையினியிலை இதுதனையுணர்(அ)

அனுபல்லவி

இச்சகத்தில் யாரையும் இச்சகம் பேசவேண்டாம்
பச்சைமயில் வாகனன் பாதமலர் பணிவாய் (அ)

சரணம்

துச்சமென்றெண்ணி வினைத் தொகுதிப்பகைவெறுத்தே
துய்க்குமெல்லாம் முருகன் மெய்க்கருணை என்றெண்ணி
வைச்சநிதி பெண்டிரின் வாழ்விற்பசை யறுத்தே
வள்ளிக் கணவன் பேரை வாய்நிறையப் புகன்றே
(முடுகு) வடிவார்திரு பொடிநீறுமே
வளமார்உடல் அதுமீதுமே
மீடிதீர்குரு முருகாவென
வடிவேலவின் அடியேமனம்
வைத்திட்டுப்—பூசித்
துய்த்திட்டுப்—பாவம்
எய்த்திட்டு—நேசம்
மொய்த்திட்டு—வாழ்வாய் (அ)

---

1. ஆசிரியர் தனது உத்தியோக அலுவல் சம்பந்தமாய் ஓர் நாள் இரவு மதுரைக்கு ரயில் வண்டியில் பிரயாணம்.

31

இராகம்—வலஜி | தாளம்—ஆதி

பல்லவி

வேலும் மயிலிருக்க வேதனையைப் பெருக்க
வெவ்வினைக் கெவ்விதம் ஒண்ணும்—நீவிரே
[எண்ணும் (வே)

அனுபல்லவி

பாலும் பழமிருக்கப் பட்டினிநோய் நெருக்கும்
பான்மை யுலகிலுண்டென் பாருமுளரோ சொல்லீர்
(வே)

சரணம்

சேலும் வணங்கும் விழிச் சேயிழையார் இருவர்
சேர்ந்திரண்டு புடையும் ஆர்ந்து கொஞ்சிக்குலாவக்
கோலம் நிறைந்த குகன் ஞாலம் முழுதும் சுற்றிக்
கூவும் அடியார்க்கென மேவும்பொழுதே ஏந்தும் (வே)

செய்து கொண்டிருந்தார். (மே மாதம் 1944 வருடம்.) அப்போது முதல் வகுப்பு வண்டியில் இவர் ஒருவர் மட்டுமே இருந்தார்; வேறு பிரயாணிகள் இல்லை. அந்தத் தனிமையில் ஆசிரியர் உள்ளத்தில் தனது வாழ்க்கைத் தனிமையும் அதன் காரணமாக அச்சம் ஒன்றும் தோன்றலாயின. அப்போதே அவ்வுணர்ச்சிப் பெருக்கின் பயனாக ஆசிரியர் இக்கீர்த்தனையைப் பாடி முடித்தார்.

32 B. பழநி

இராகம்—தோடி தாளம்—ஆதி

பல்லவி

[1]பார்த் திருப்பேன் பழநிப் பண்டாரக் கோலத்திலே
பாலசுப்ரமணியன் பண்பினையே (பா)

அநுபல்லவி

நேர்த்தியுடன் நிமிர்ந்து நீளுலகம் ஆண்டிடும்
கீர்த்தியுடையான் தன்னைக் கெஞ்சிப் பணிந்திருந்தே
(பா)

சரணம்

ஆர்த்தொலிக்கும் கழலைச் சேர்த்துப்பிடித்து நின்றே
ஆசைக் குகந்த மண வாள எனப் புகன்றே
வார்த்தை குழறி மெய்யே வேர்த்து விதிர் விதிர்க்க
வஞ்சம் அகன்ற நெஞ்சால் தஞ்சம் எனநினைந்தே (பா)

---

1. பழநிக்குத் தன் உத்தியோக நிமித்தம் புறப்படப் போகும் அன்று, ஆசிரியர் தன் அலுவல் நிலையத்தில் உள்ளவர்கட்குத்தான் பழநியில் காணப்போகும் முருகன் தரிசனத்தையும் அதன் பெருமையையும் தெரிவிக்கும் பொருட்டுச் சென்னையில் பாடப்பட்டது இக் கீர்த்தனை.

33

இராகம்—செஞ்சுருட்டி தாளம்—ஏகம்

பல்லவி

[1]கிண்கிணிச் சதங்கை கட்டிப் பண்களி கூரக்கை கொட்டி
என் கணின் முன்னே வந்து நிற்பாய்—பழநி வெற்பாய்
(கிண்)

அனுபல்லவி

மண்களி கூரமகிழ்ந்து விண்களி கூரப்புகழ்ந்து
கண் களிகூரப் பணியும் [1]பண்களூறும் உன் பதத்தில்
(கிண்)

சரணம்

உண்கனி நீ [2]யாயிருக்க ஓர் கனிக்கன்றே யுலகை
எண்கணிக்க வொண்ணுத இமைப்பொழுதிற் சுற்றிவந்து
கண் பனிப்ப [3]நின்ற இளம் கன்றனைய காதல்மிகு
தண்பனிச் சந்திரமுகா தென் பழநிச் சேய் முருகா
(கிண்)

இந்தக் கீர்த்தனை 1-3-44 அன்று பழநியாண்டவன் சந்நிதியில் இயற்றப்பட்டது.

1. இசைகளெல்லாம் பொருந்திய.
2. அடியார்கள் உண்ண விரும்பும் கனியாக நீயே இருக்க.
3. கண்கள் நீரால் நனைய.

34

இராகம்—கல்யாணி தாளம்—ஆதி

பல்லவி

[1]ஐயா புரிந்த தெனக்கே—உன்றன் பெருமை
ஐயா புரிந்த தெனக்கே (ஐ)

அனுபல்லவி

வையாபுரிக் கந்தனே வாழ்த்தும் அடியவர்தம்
கையால் தொழ அவரைக் கண்ணுற் பார்த்துங்
[காப்போனே (ஐ)

சரணம்

மெய்யா முளத்தி னோடும் மேலாம் உனைத்தொழவே
மேவிக் கனிந்து சென்றேன் தாவிக் குனிந்து நின்றேன்
செய் யாயுன் தண்ணருளைச் சீராயெனக் கென்றுன்னைச்
சேயாய்ப் பணிந்தேன் நீ காப் பாயே பழநியப்பா (ஐ)

---

1. இந்தக் கீர்த்தனை 1-3-44 அன்று பழநிமலைமீது ஏறி ஆசிரியரும் அவர் அலுவல் துணைவர்களும் முருகனின் தரிசனம் கண்டவுடன் இறைவன் சந்நிதானத்திலேயே இயற்றப் பட்டது.

35

இராகம்—சாமா தாளம்—ஆதி

பல்லவி

உன்னருளாலே பிறந்தேன்—எனக்கும் உன்றன்
இன்னருள் தாநீ சுரந்தே—எழிலுறு பழநியில் குக
(முடுகு) உலகினில் உனைவிட
ஒருகதி பிறிதிலை
எனுமது தெளிவுற
நனிமன மறியுமே (உன்)

அநுபல்லவி

மன்னருட் பிறந்திடும் மகிமையில்லேன் எனினும்
மாமயில் மீதமரும் மாமுருகனே கோனே (உன்)

சரணம்

அன்னை வயிற்றுள் அன்று ஆறுமுகா நின் குன்று
தன்னை[1]யடையும் போது [2]தரிக்கும் அருள் தந்தவா
பின்னை வயிற்றில் திண்ணம் சேர்த்துப் பிறவா வண்ணம்
நின்னை வணங்கி நின்றேன் நீயே அருள் செய்வாயே
(உன்)

1. அவள் அடையும்போது.
2. நான் கருத்தரிக்கும்.

36 C. திருத்தணிகை

இராகம்—மத்யமாவதி தாளம்—ஆதி

பல்லவி

[1]சதங்கைக் கிண்கிணி யோசைப் பதங்கை
[குவித்தேன் ஆசைச்
சண்முகனே—பன்னிரு கண்முகனே

(முடுகு) தணிகாசல மிசையேசுக
அணியார் இழை அருள் மாதுடன்
தத்தித்தோம்—எனவரும்
சத்தத்தோ—டெழில் மயில்
வைத்திட்டாய்—உனதடி (சத)

அனுபல்லவி

மதங்கொண்டிடும் கரியின் இதங்கொள் முகத்தோன்
[அருள்
மனங்கொண்டு வள்ளிதனை மணங்கொண்டணைத்தாய்
[முன்னே (சத)

சரணம்

நிதங்கண்டுனைப் பணிந்தே நெஞ்சுவக்கப் புணர்ந்தே
தேடியும் ஓடிவந்தேன் பாடிமன முவந்தேன்
விதங்கொண்டிடு மலரால் விரும்பியடியார் காலை
வேளை முதல் மாலையுன் தாளைப் பணிய நின்றாய் (சத)

---

1. இக்கீர்த்தனை ஆசிரியர் திருத்தணிகைக்குப் போகும் வழியிலேயே அவரால் பாடப்பெற்றதாகும்.

37

இராகம்—சலநாட்டை தாளம்—ஆதி

பல்லவி

தணிகாசலத்தில் ஒரு மணியாசனத்தின் மயில்
தனிலார்ந்திடும் குருவை இனிதார்ந்தனன்

(முடுகு) தகதக வெனவொளி
மிகவிடு முகனவன்
ஜகமது புகழுறு
முகன் எனும் குகனவன் (த)

அனுபல்லவி

பிணியாசைப் பெருங்கடல் பிழையே சூழல் என்னுடல்
[1]கணியாத நாள் உழன்றேற கதியாதுமின்றி நின்றேன்
(த)

சரணம்

பணியாசை யோடடைந்தேன் பதியாமவன் பதத்தைப்
பணமாசையே தவிர்த்தேன் பலகாலும் கைகுவித்தேன்
அணியார் இழைக்குறத்தி அவளோடு மற்றொருத்தி
அழகாய்ப் புடைநிறுத்தி அணைவானை நெஞ்சிருத்தித் (த)

---

1. அளவிடப்படாத நாட்கள்.

ஆசிரியரும் அவரது அலுவல் குழுவினரிற் சிலரும் திருத்தணிகை சென்று முருகனைச் சேவித்தபின் அங்கேயே இக்கீர்த்தனை எழுதப்பட்டது.

38

இராகம்—சாவேரி தாளம்—ஆதி

பல்லவி

திருத்தமுடன் பணிந்தேன் வருத்தமதும் தணிந்தேன்
திருத்தணிகையில் வளர் ஒருத்தனையே (திரு)

அனுபல்லவி

கருத்துடன் கைகுவித்தே காலமெல்லாம் சேவித்தே
கங்குல் பகல் பாவித்தே பொங்கியுளம் பூரித்தே (திரு)

சரணம்

நிருத்தம் இடும் ஒருவன் நினைத்து மகிழ் மகனை
நிறைந்த எழில் தவழ நின்றருள் செய்குகனைப்
பொருத்தம் உறும் இரண்டு பூங்கொடி தாம்புரண்டு
பொலியும் கொழுகொம் பென்றே பொருந்தும் புண்
[ணியக் கன்றைத் (திரு)

---

1. இக்கீர்த்தனையும் திருத்தணிகை முருகனைச் சேவித்த பின் ஆசிரியரால் பாடப்பட்டது.

39 D. திருச்செந்தூர்

இராகம்—காம்போதி தாளம்—ஆதி

பல்லவி

கூடும் விதம் நீ அருள்வாய்—உனைக்

(முடுகு) கூவி யழுது மனம்
மேவித் தொழுது தினம்
தேவி வள்ளியினுடன்
தாவி மயிலுலவிச்
செந்தூர் தனில் வளரும்
கந்தா உன் றனையேநான் (கூ)

அனுபல்லவி

நாடும் நகரங்களும் தேடும்பொருள் சுற்றமும்
நங்கையவர் உறவும்நைந்தேக—முருகாவுனைக் (கூ)

சரணம்

[1]கானம் இறைக்கும் அலை தானும் அழுந்தி நிதம்
[2]வானம் நிறைக்கும் தமிழ் வாரி [3]படிந் துன்பதம்
நானும் பணிந்துனருள் தானும் அடைந்துன் முனம்
நாளும் குடைந்தின்பத்தில் குதித்தே நடித்தே
[மகிழ்வுடன் (கூ)

---

1. இசை யலைகளை இறைக்கும் கடலில் திளைத்து.
2. வானம் அளாவ உயரும்.
இந்தக் கீர்த்தனை 27-3-44ல் திருச்செந்தூருக்குப் போகும் வழியில் பாடப்பட்டது.
3. தமிழாகிய கடலில் மூழ்கி.

40

இராகம்—கேதாரகௌளம் தாளம்—ஆதி

பல்லவி

வந்தேறி உன்றன் திரு வடிவை வணங்குதற்குச்
செந்தூரில் வேலனே செய்தாய்—நற்சீரலைவாய் (வ)

அநுபல்லவி

நொந்தே திரிந்துலகில் வெந்தே புழுங்கி மனம்
நோற்றல் இலாவெனைக்காப் பாற்றல் கருதும் தேவே
(வ)

சரணம்

தந்தை எனக்கு நீயே தாயும் நீ தானுவாயே
தஞ்சம்நீ யல்லாதேப்ர பஞ்சம் தன்னில் வேறுண்டோ
விந்தைபல புரிந்தே விளையாட்டுகள் அயர்ந்தே
வேதனை தானும் தந்தே நாதா எனைப் புரந்தாய் (வ)

27-3-44 அன்று ஆசிரியரும் அவர் தோழர்களும் தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூருக்குச் சுப்பிரமணியரைத் தரிசிக்கும் பொருட்டு மோட்டாரில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது இப்பாட்டு அவரால் பாடப்பட்டது.

41

இராகம்—மத்யமாவதி　　　　　　　　தாளம்—ஆதி

பல்லவி

தரிசனம் கண்டு கொண்டனன் —தாகம் விண்டனன்
தரிசனம் கண்டு கொண்டனன்

(முடுகு) சரவண பவகுக
அறுமுக குருபரன்
பதமலர் இதமுற
மனமகிழ் வுடன்நன்றி (த)

அனுபல்லவி

[1]பரிசனம் நாடும் செந்தூர் பகல் உச்சிவேளை சேர்ந்து
பரவசமாய் முன்னின்று பவவினை தன்னை வென்று (த)

சரணம்

[2]பரிகாசம் செய்யும் பாவிப் பாமரர் பாங்கொழியப்
பலவித இடையூறும் பறந்து நில்லாதழிய
உரிமை யடிமையானுன் ஒளிமுறுவலைக் காண
உளமகிழ்ந் தோடிவந்தேன் உணர்வு மிகுந்துகந்தே (த)

---

1. குடிகள்.

2. ஆசிரியர், கடவுள் தரிசனத்துக்கெனத் தூத்துக்குடியைவிட்டுத் திருச்செந்தூருக்குக் காரில் புறப்படப் போகும் சமயம், சிலர் "நீங்கள் போய்ச் சேருவதற்குள் உச்சிக் காலம்

முடிந்துவிடும் ; தரிசனம் கிடைக்காது '' என்றனர். அதற்கு ஆசிரியர், '' கட்டாயம் இன்று தரிசனம் செய்தே வருவன் ; முருகன் எனக்காகக் காத்திருப்பான்'' என்று பதிலிறுத்தார். அதைக்கேட்டு அருகிலிருந்தோர் நகைத்து வாளாவிருந்தனர். ஆசிரியரின் மோட்டார் போய்க் கோவிலருகில் நிற்கவும் கோவிலில் உச்சிக் காலப் பூசை முடிந்து அர்ச்சகர் கதவைப் பூட்டத் தொடங்கவும் சரியாக விருந்தது. ஒரு நிமிஷம் தாமதித்திருந்தால் செந்தூர்வேலனை ஆசிரியர் கண்டிருக்கமுடியாது. ஆனால், இறைவன் அருளால் கதவு பூட்டுதல் நிறுத்தப்பட்டது. ஆசிரியரும் அவர் தோழர்களும் கண்குளிரக் கண்டு முருகனின் கருணைத்திறத்தை வியந்தனர். அப்போது ஆசிரியரால் பாடப் பட்டது இக்கீர்த்தனை : தன்னைப்பார்த்து நகைத்தவர் தோற்றமையைத்தான் இது குறிக்கிறது.

42 E. திருப்பரங்குன்றம்

இராகம்—கல்யாணி தாளம்—ஆதி

பல்லவி

திருப்பரங் குன்றில் வளர் தெய்வச் சுடர்மணியே
விருப்புடன் காணுதுன்னை இருப்பதுண்டோ—இனி
[யடியேன் (திரு)

அனுபல்லவி

[1]பருப்பதன் செல்வி எங்கள் பாண்டியன் தென்மதுரை
இருப்பவள் ஆட்சி செய்தே எழிலின் மீனுட்சி சேயே
(திரு)

சரணம்

நெருப்புருவின் ஈசனுர் நெகிழ்ந்து மனம் மகிழ்ந்து
நித்தமெடுத்துன் மீது முத்தமழை பொழிவார்
தருக்குறும் தண்டமிழன் தனக்கு நிகரில் கீரன்[2]
தமிழ்க்கடல் தன்னில் தோன்றும் தனிச்சுடர்ப்
[பரிதியே (திரு)

---

1. பருவதராஜன் மகள்.
2. நக்கீரன்

1944 வருடம் மே மாதம் 19-ம் நாள் மதுரையில் முகாம் செய்திருந்தபொழுது, ஆசிரியரும் அவர் கோஷ்டியினரும் திருப்பரங்குன்றம் செல்ல வேண்டும் என்று விரும்பினர். அவ்விருப்பத்தை வெளிப்படுத்தி அப்போதே ஆசிரியர் இக்கீர்த்தனையை மதுரையிலிருந்தே பாடினுர்.

அதற்கு முன்னர்த் திருப்பரங்குன்றம் ஆசிரியர் சென்றதுமில்லை, அங்கேயுள்ள சோமாஸ்கந்த முகூர்த்தத்தைப்பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை. எனினும், இப்பாட்டின் சரணத்தில் அவ்வுருவம் இயற்கையாகவே குறிக்கப்பட்டுள்ள விஷயத்தை கோவிலிற் போய்ப் பார்த்தபின் எல்லோரும் ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் அடைந்தனர்.

43

இராகம்—ஹம்ஸத்வனி தாளம்—ஆதி

பல்லவி

கலியாண மூர்த்தியே கந்தமூர்த்தி—உனைக்
கலிதீரப் பரங்குன்றில் கண்டேன் கீர்த்தி (க)

அனுபல்லவி

புலியாடை யரைசூடும் புண்ணியனும் நாடும்
புகழ் சேரும் குருவென்றிப் பூவுலகோர் பாடும் (க)

சரணம்

நலியாமல் வினையாலே நலிகாலம் உனை நாளும்
நலமாரும் மனமோடும் குலநாதன் என ஓதிச்
சலியாமல் அடிபேணச் சமர்பேணும் முருகா நின்
சரியான அருள் தா நல் அரியாஞேன் மருகோனே (க)

இந்தக் கீர்த்தனை திருப்பரங்குன்றக் கடவுளைத் தரிசித்த ஆசிரியரால் 19-5-44ல் பாடப்பெற்றதாகும்.

44 F. திருமுருகன்பூண்டி

இராகம்—வாசஸ்பதி தாளம்—திரிபுடை

பல்லவி

திருமுருகன் பூண்டி தேடிவந்தேன் வேண்டிப்
பெருகும் அருளமுதம் பருகநிதம் (தி)

அனுபல்லவி

[1]ஒரு கனவில் தோன்றி உனதுருவை யூன்றி
வருகஎன வேண்டி வரவழைத்தா யாண்டி (தி)

சரணம்

[2]அருமறை யாரூரர் அவருறை தேருமோர்
அரனுடனேயமர் அறுமாமுகா உன்றன்
உருவொளி தனைக்காட்டி உயிர்ஒளி தனைக்கூட்டி
உய்வித்தனை என்னை மெய்வைத்து நானுன்னைத் (தி)

---

1. ஆசிரியர் திருப்பூரில் 19-6-44 அன்று தங்கியிருக்கும் போது இரவில், கனவொன்று கண்டார். அக்கனவில் சிவலிங்கமும் ஆறுமுகமுருகனும் இருக்கும் ஒரே சந்நிதியைக் கண்டார். அடுத்தநாள் மாலை ஏதாவது அருகிலுள்ள கோவிலுக்குச் செல்ல நினைத்து ஆசிரியர் சில நண்பர்களுடன், திருமுருகன்பூண்டி சென்றார். அங்கே கண்ட சிவ - முருகன் சந்நிதானமே தாம் முன்னிரவு கனவிற் கண்டது என அறிந்த ஆசிரியரின் ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. அதற்குமுன் ஆசிரியர் திருமுருகன்பூண்டி சென்றதே கிடையாது. அப்போதுதான் இக்கீர்த்தனையை ஆசிரியர் அங்கே

பாடினர். இதனோடு ஒரு பதிகமும் அவர் சிவன்மீது பாடியுள்ளார்.

2. அரிய மறையவராகிய சுந்தரமூர்த்தி நாயனருடைய செல்வத்தை வழிபறிக்கச்செய்து அதன் பயனாக அவர் திருமுருகன் பூண்டிச் சிவபிரானிடம் வந்து முறையிட, அவ்வாறு வழிபறிக்கப்பட்ட செல்வத்தையெல்லாம் மீட்டும் இறைவன் சுந்தரர்க்கு அளித்து மகிழ்ந்தமை குறிக்கப்பட்டுள்ளது.

45

இராகம்—பேகடா தாளம்—ஆதி

பல்லவி

தெவிட்டாத தெள்ளமுதம் திரட்டியுண்டேன்
திருமுருகன் பூண்டியோய் உருவு கண்டேன்—உயர்
(முடுகு) தினைமாவினை நனைதேனுடன் ஒருமாதிடை
உணவேசெலும் அறுமாமுகன் அருளாகிய
எழில்மிகும் (தெ)

அனுபல்லவி

குவித்தேன் இருகரமும் கூறியுன்றன் திறமும்
[1]செவித்தேன் எனுந் தமிழால் செபித்தே யுன்புகழ்பாடி
(தெ)

சரணம்

தவித்தேயுலகில் நாளும் தஞ்சமில்லாமல் வாழும்
தனித்தகடையன் நானுன் பனித்தபதம் அடைந்தேன்
[2] அவித்தேன் என் ஆசையெல்லாம் அடுத்தேன்
[என்னுளும் உன்றன்
அருள்தேன் பருகத் தாராய் அழைத்தே எனையும்சீராய்
(தெ)

---

1. செவிகளுக்குத் தேனைப்போன்ற தமிழ்.
2. அழித்தேன்.

இக்கீர்த்தனையும் ஆசிரியர் திருப்பூரிலிருந்து சென்று **19-6-44** அன்று திருமுருகன்பூண்டி முருகனைத் தரிசித்த பின் அவரால் பாடப்பெற்றதாகும்.

46 G· திருச்சிக்கல்

இராகம்—ஆனந்தபைரவி தாளம்—ஆதி

பல்லவி

சிங்கார வேலவனும் செவ்வேளைச் சிக்கலெனும்
மங்காத மாதலத்தில் வாழ்த்தி நின்றேன்—மனமகிழ்ந்து
(சி)

அனுபல்லவி

என் காதலுக்குரிய இன்பக் கடலாம் கந்தன்
'இங்கோடி வாரா'யென்றே என்னையழைத்தான் இன்றே[1]
(சி)

சரணம்

பங்காரும் மாதுமையின் பாகன் நவநீதனர்[2]
பாங்கார்ந்திடப் புகழ்ந்து பார்த்திருக்க மகிழ்ந்து
[3]சங்கார்வெண் ணீற்றுடனே சகலலோகம் புரந்து
சாஸ்வதமாய் ஞானவேல் வீசும் கரத்தின் வேளாம்(சி)

---

1. இது சிக்கலிற் கோவிலில் பாடப்பட்டது.
ஆசிரியர் திருவாரூரிலிருந்து நாகப்பட்டினம் சென்று கொண்டிருக்கும்போது உடன்போந்த நண்பர், சிக்கலை நெருங்கும்போது "இவ்வூர் முருகனைத் தரிசிக்கலாமா?" என்று கேட்க, ஆசிரியர் அதற்கிசைந்து சென்று வணங்கினமையைக் குறிக்கும்.

2. அங்குள்ள சிவனின் திருநாமம்.

3. சங்கைப் போன்ற வெள்ளைத் திருநீறு.

47

இராகம்—கல்யாணி தாளம்—சாபு

பல்லவி

திருச்சிக்கலில் உறையும் தேவதேவா உன்றன்
தெரிசனம் பெறநாடித் தேடிவந்தேன்—அருள்உவந்தே
(திரு)

அனுபல்லவி

அருச்சித்துன் திருப்பாதம் அணைத்துப் பிடித்தெனது
அகச் சுத்தமும் அடைந்தே இகச்சித்தெலாம் பெறுவான்
(திரு)

சரணம்

[1]கருச்சிக்கி யானிழிந்து காலமெல்லாம் உழன்று
கவலைக் கிருப்பிடமாய்க் காசினியி லிருந்தேன்
தெருச் சுற்றியின்றுனது திருவுருவம் கண்டதால்
சிவச்சித்தி தானடைந்தேன் பவச்சுத்தி தான்மிகுந்தேன்
(திரு)

---

1. கருவினிற் சிக்கி.

இக்கீர்த்தனையும் சிக்கலிற் சென்று தரிசனம் செய்த பின் ஆசிரியரால் சந்நிதானத்திலேயே பாடப்பட்டது.

48 சீனாபுரம்

இராகம்—கானடா தாளம்—ஆதி

பல்லவி

சீனாபுரத் துறையும் சேனாபதித் தலைவன்
தேனாமிர்தக் கந்தனின் சேவை கண்டேன்—சிரமம்
[விண்டேன் (சி)

அனுபல்லவி

நானாவித மலர்கள் நாளும் கொண்டுனையே
ஏனோ பணிந்திடா திருந்தேன் இத்தனை நாளும் (சி)

சரணம்

வானோரும் மாநில வாசிகளுமறியா
வாழ்வானதே தந்திடும் வள்ளல் முருகா உனைத்
தானாகவே யடைந்துன் தாண்மாமலர் பணியும்
தன்மை தந்தாய் இதனின் நன்மையுண்டோ சொல்
[எந்தாய் (சி)

சீனாபுரம் என்பது ஈரோடு தாலுக்காவில் பெருந்துறை என்னும் ஊருக்குச் சமீபத்தில் உள்ளதொரு முருகன் ஸ்தலம். ஒரு சிறிய அழகிய குன்றில் முருகன், தண்டாயுதபாணி வடிவத்தில் வீற்றிருந்து காட்சியளிக்கிறார். இந்தக் கோவிலுக்குச் சென்று கடவுளைத் தரிசித்த ஆசிரியர் அம்மலையின் மீதமர்ந்து இக்கீர்த்தனையைப் பாடினார்.

49

இராகம்—தேவகாந்தாரி தாளம்—திரிபுடை

பல்லவி

தெய்வங்கள் ஏத்துசீனு புரத்துறை தேவசேனு
மெய்மங்கை நாதன் பாதம் மேவிநின்றேத்திடுவீர்
[மேதினியீர் (தெ)

அனுபல்லவி

சைவம் களித்தும் எங்கும் தழைத்துவளர்ந்து பொங்கும்
சாஸ்வத நாடாம் கொங்கும் தான்மகிழ்ந்திடத் தங்கும்
(தெ)

சரணம்

மெய்யங்கம் தானும் காட்டிக் கையங்கோர்வேலும்ஆட்டி
மேலெங்கும் நீறே சூட்டி மிகவருள் அமுதூட்டிப்
பொய்யிங் கருமால் வீட்டிப் புளகாங்கிதமே கூட்டிப்
புன்மைகள் எல்லாம் ஓட்டிப் புரக்கும் செவ்வேளைப்
[போற்றி

இதுவும் சீனுபுரக் கோயிலில் பாடப்பட்டது.

50

இராகம்—அடாணு தாளம்—ஆதி

பல்லவி

வேல் பிடித்த சினுபுரப் பாலகனே உன்றன் இரு
கால்பிடித்திருக்கமனம் [1]மால்பிடித்தனன்—விரும்பி
[யருள் (வே)

அனுபல்லவி

கோல் பிடித்த மன்னவரும் கூடிமற்ற முன்னவரும்
சால் புடைவிற் பன்னர்களும் சார்ந்து பணி சண்முகனே
(வே)

சரணம்

பால்பிடித்த வெள்ளைமதிப் பான்மைத் திருநீற்றையுன்றன்
பாங்குறு வதனம் சேர்த்தே தேங்கவைத்தாய் நல்லெழிலை
நூல்பிடித்த நின்னுருவை நோற்குமடியேன் நுகர
நூறுசூரிய விளக்காய்[2] நொடிப்பொழுதில் விளக்காய்[3](வே)

---

1. பித்துப் பிடித்திருந்தனன்.

இப்பாட்டை ஆசிரியர் சினுபுரக்கோயில் முருகன் சந்நிதியில் தரிசனம் காணும் பொழுதே பாடினர்.

2. நூறு சூரியன்களைப் போன்ற ஒளி விளக்கைப் போன்று.

3. விளக்கியருள்வாய்.

3. சிவபெருமான் வணக்கக் கீதங்கள்

51 A. சிவவுருவத் தத்துவம்

இராகம்—அடாணா தாளம்—ஆதி

பல்லவி

ஏழிசையாகியும்[1] இசைப்பயனாகியும்[2]
எங்கள் உளம் நிறையும் மங்களமே—எழில் வளமே
(ஏ)

அனுபல்லவி

[3]காழிசைவ ஞானக் கன்று சம்பந்தன் அன்று
வாழி தெய்வமுன் றனை வண்டமிழால் கண்டதோர் (ஏ)

சரணம்

[4]யாழிசை தன்னுள் நின்றும் யாழினைப்பாலே சென்றும்[5]
யாவையும் தன்பால் வென்றும்[6] ஆடிநிற்பாய்
[நீ என்றும்
ஊழிசெய் காலந்தோறும் [7]ஓசையொலியாய் மாறும்
ஓமெனும் நாதம் சாரும் உள்ளொளியாகிக் கூறும் (ஏ)

---

1. சப்தஸ்வரங்கள்.
2. இசையைக் கேட்பதின் இன்பமாகிய பயன்.
"ஏழிசையாய் இசைப்பயனாய்" என்ற சுந்தரமூர்த்தி நாயனாரின் வார்த்தைகள் எடுத்தாளப் பட்டுள்ளன.
3. திருஞானசம்பந்தர்.
"இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்ற சுந்தரர் வாக்கையும் நோக்குக.
4. திருநீலகண்ட யாழ்ப்பாணர், சம்பந்தப் பெருமானின் தேவாரப் பண்களைப் பாடுங்கால் இசையுருவாகிய சிவன் அப்பாணரது யாழினுள் அடங்கிநின்றார்.
"இன்னிசை வீணையில் இசைந்தனன் காண்க" என்ற திருவாசகத்தைக் கவனிக்க.

5. தருமபுரத்தில், ஞானசம்பந்தர் யாழ்மூரிப் பண்பாடிய போது நீலகண்டயாழ்ப்பாணரது யாழினுள் அவ் இசையுருவாகிய கடவுள் அடங்காமல் அதைமீறிச்சென்றது.

6. ஆனய நாயனர், தனது புல்லாங்குழலில் ஏழிசை மூலம் ஐந்தெழுத்தைப் பாடிய போது சகல ஜீவராசிகளும் அந்த இசையால் வசீகரிக்கப்பட்டன.

7. "ஓசை யொலியெலாம் ஆனய் நீயே" என்ற அப்பர் திருத்தாண்டகத்தை நோக்குக.

52

இராகம்—தர்பார் தாளம்—ஆதி

பல்லவி

முன்னைப் பழம்பொருட்கும்[1] முன்னைப் பழம்பொருளே
தன்னைப் பிழம்புருவாய்க்[2] காட்டிடும் தண்ணருளே

அனுபல்லவி

என்னைப் பழந்தீவினை என்னும் படப்பாம்பது
எய்தித் தினம் விழுங்க உய்தற்கிலேன் அருள்வாய் (மு)

சரணம்

அன்னைக் கமுத சேயன்[3] அருண் மழை பொழிவாயன்
அத்தா நின்னை, "ஏதுவால்[4] அறிவால்[5] எடுத்தசொல்லால்
பின்னைப் பல உவமைப் பேச்சால்[6] சோதிக்க[7] [வொண்ணாப்
பித்தன்" எனப்புகன்ற தத்துவம் தன்னைக்கண்டோம் (மு)

---

1. "முன்னைப்பழம்பொருட்கும்முன்னைப் பழம்பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே" என்னும் திருவாசக வாக்குப் பல்லவியாக எடுத்தாளப்பட்டுள்ளது.

பழமைக்கெல்லாம் பழையவன் புதுமைக்கெல்லாம் புதியவன் கடவுள் என்பது இதன் பொருள்.

2. நெருப் புருவாய்.
3. திருஞான சம்பந்தர்.
4. உதாரணங்களால்.
5. அறிவின் ஆராய்ச்சியால்.
6. உவமான உவமேயங்களால்.
7. ஆராய்ந்து கண்டறியவொண்ணா.

திருஞானசம்பந்தர் மதுரையில், வைகை ஆற்றிலிட்ட தமது ஏடுகளில் பொறித்த பாசுரம் கூறும் வார்த்தைகள் பின்வருவன : "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதிக்கவேண்டாம்"

53

இராகம்—வாசஸ்பதி　　　　　தாளம்—ஆதி

பல்லவி

தன்னலம் பேணாத[1] தோர் தகைமையவன்—எங்கள்
பன்னலம்[2] பேணுந்திரு மேனிச் சிவன்　　(த)

அனுபல்லவி

எந்நலம் வேண்டிடினும் எளிதிற் பிறர்க்கீந்திடும்
மன்னவன் ஆயிடினும் மதித்தெப் பொருளும்
　　　　[வேண்டான் (த)

சரணங்கள்

1. கன்னலின் இன்னமுதம் கலங்கும் அமரர்க்கீந்து[3]
கைநிறை நஞ்சும் உண்டான் மைநிறை கண்டம்
　　　　[கொண்டான்
இன்னலின் தொண்டர்க்கென்றும் இன்னமு
　　　　[தேகியீந்தும்
ஏழையைப் போல் இரந்தே[4] என்றும் உண்பான்
　　　　[அவன் காண் (த)

2. பாலடிசில் ஊட்டிடப் பாய்ந்துசெல்வான்
　　　　[விடைமேல்
பாகின்சுவைப் பிட்டிற்கே[5] ஏகிநின் றேற்பான் அடி
காலடி போற்றுவோர்க்கே கனகமணி வயிரம்
கணமதில் ஈவான் ஆனல் [6]பணஅரவம்தான்
　　　　[பூண்பான் (த)

---

1. கருதாததோர்.
2. பல நலங்களை.

3. பாற்கடல் கடையப்பட்டபோது அதில் தோன்றிய விஷத்தைத் தானுண்டு அமிர்தத்தைத் தேவர்களுக் கீந்தமையைக் குறிக்கும்.

4. தனது அடியார்கள் பசியைத்தணிக்க இனிய உணவைக் கொடுத்துத் தனக்குமட்டும் ஊரெல்லாம் பிச்சையெடுக்கும் சிவனது தன்மையைக்குறிக்கும்.

5. ஞானசம்பந்தர் பசியைத் தணிக்க உமையுடன் சென்று பாலூட்டிய சிவன், தனது பசியைத் தணிக்க வாணிச்சி பிட்டை ஏற்கச்சென்று அதன் பயனைப் பாண்டியனால் பிரம்படிபட்டதைக் குறிக்கும்.

6. தனது அடியவர்கள் வேண்டும்போது பொன், மணி முதலியவற்றைக் கொடுக்கும் சிவபிரான் தான் அணிந்து கொள்ளப் பாம்புகளை விரும்பிய செய்கையைக்குறிக்கும்.

54

இராகம்—நவரசகன்னட   தாளம்—ஆதி

பல்லவி

பச்சைக்கொடி யொன்றிய[1] பசும்பொற்செடி
[யொன்றினைப்[2]
பால்வெள்ளியாகும் குன்றினில்[3]—பார்த்தேன் கை
[சேர்த்தேன் (ப)

அனுபல்லவி

இச்சைக்குகந்த நல எழிலில் திகழும் பல
எங்கும் அந்தச் செடியில் தொங்கும் விந்தை
[கண்டேனே (ப)

சரணம்

நச்சைக் கரந்தபண[4] நாகங்கள் கக்கும்மணி
[5]நாளைப் பழிக்கும் வெள்ளை நல்ல வயிரமதி
[6]செச்சைக் கமலவேணி செம்பவளமெனும் வாய்
சிறந்த முத்தாகும் பற்கள் செறிந்தஅச் செடி
[கண்டேன் (ப)

---

1. உமாதேவி.
2. சிவபிரான்.
3. இமயமலை.
4. விஷத்தை யுள்ளேயடக்கிய படத்தையுடைய.
5. பகலினும் மேம்பட்ட வெள்ளை நிறத்தையுடைய.
6. சிவந்த தாமரையைப் போன்ற சடை.

இப்பாட்டு இமயமலையில் உமாசமேதராய்ச் சிவன் தரும் காட்சியை வியந்து பாடப்பட்டது.

55

இராகம்—சுபபந்துவராளி　　　　　　　　　　　　தாளம்—சாபு

பல்லவி

எரிமலையும்[1] காடுமாய்[2] எருதேறித் திரிந்திடும்
இவனே கடவுள் என்பாரே—நம் ஏதிலரே[3]　　　(எரி)

அனுபல்லவி

அரியும் அயனும் இவன் அடிமுடிதமையன்று
தெரிவதெனத் தேடியும் தெரிவரிய நாதனை　　　(எரி)

சரணங்கள்

1. எரியும் செம் மூக்கிற் காடாய் இருக்கும் தன் மேனியிலே
[4]எதிரிற் பதுங்கிப் பாயும் இரும்புலியும் தெரியும்
[5]பெரியதொரு கரியும், பிறங்கப் பிணைந்துகூடும்
பேரரவங்களுமே[6] சேரரன் எம்பிறையை　　　(எரி)

2. மூர்க்க அரக்கனுகும் முயலகன் மேனி ஏறி[7]
[8]முண்டம் விலகிவெந்த வெண்டலையோடொன்றேந்திப்
[9]பார்க்கத் தகுந்தமானைப் பற்றிக்கரத்தில், கங்கைப்
பாவையுடன் மதியைப்[10] பரிந்தணிவேணியானை (எரி)

---

1. எரிமலை தீப்பற்றி எரியும்போது உண்டாகும் சிவந்த தழற் பிழம்பையொத்த மேனியைச் சிவபிரான் ஒத்திருத்தலின், அந்த நயம் தோன்ற, எரிமலை என்று உவமையாகு பெயராய்க் குறிப்பிடப்பட்டுள்ளார் சிவன்.

2. காட்டிலுள்ள மிருகங்களும் பாம்புகளும் சிவபிரானிடம் காணப்படுதலின், காடு என்னும் உவமையாகு பெயர் இங்கேயும் பிரயோகிக்கப் பட்டுள்ளது.

3. பகைவர்கள்.

4. எதிரில் வருபவர் மீது, பதுங்கிப் பாயும் பெரிய புலியின் தோலை, நயம்பற்றிப் புலி என்றே கூறப்பட்டுள்ளது.

5. பெரிய யானையின் தோலை, யானையென்றே கூறப்பட்டுள்ளது.

6. பெரிய பாம்புகளுமே.

7. முயலகனைக் கொன்று அவன் உடல்மீது சிவபிரான் நிற்பதைக் காண்க.

8. செத்த பிணத்தின் முண்டத்திலிருந்து விலக்கப்பட்ட வெள்ளைத் தலையோட்டை ஏந்தி.

9. பார்ப்பதற்கு இனிய மானைக் கையில் பற்றி.

10. கங்கையையும் சந்திரனையும் சடையில் வைத்தவனை.

இக்கீர்த்தனம், சிவனது உருவைக்கண்டு பிறர் நகைத்து ஏளனம் செய்வதாக நயம்படக் கூறிப்பணியும் ஒருவித நிந்தாஸ்துதியாகும்.

56

இராகம்—ரிஷபப்ரியா   தாளம்—ஆதி

பல்லவி

பாயும் முரட்டுவெள்ளை மாட்டுக் காரன்[1] என்றுன்னைப்
பாவி யுலகம் பேசுதே—பழித்தேசுதே   (பா)

அனுபல்லவி

தாயும் தந்தையும் இல்லாய்[2] பேயும் உறவாய்க்கொள்வாய்[3]
தன்னை மணந்த மாதோ நின்னைவிடாத[4] நீலி   (பா)

சரணங்கள்

1. தேயும் மதியாய்[5] பிச்சை தேடும் கதியாய்[6] நச்சைச்
சிந்தும் படத்தின் நாகம் சேரத்திரிவாய்[7] தேகம்
காயும் சினப் புலித்தோல் [8]கச்சை கட்டும் இடையா
காட்டிற் சாம்பல் பூசியே [9]ஆட்டித்திரியும்காலா(பா)

2. என்றும் அநாதி நீ என்றெண்ணிச் செருப்பாலும் பின்
ஏந்திய கல்லாலும் கை எடுத்த பிரம்பாலும் மெய்
கன்றும்படியடித்தார் அன்று பலபேர் உன்னைக்
[10]கவலை கொண்டேன் அடித்தார் இவனை
[என்றுரோ கேட்டார்?   (பா)

---

1. பாய்கின்ற முரட்டுத் தன்மையையுடைய வெள்ளை நிறக் காளை மீது ஏறுபவனாகிய சிவனை, 'மாட்டுக் காரன்' என்று நிந்தாஸ்துதியாக வருணித்துள்ளது இப்பாட்டில்.

2. ஆதியும் அந்தமுமிலாத அநாதி.

3. சிவனுடன் உறவினராகச் சுடுகாட்டில் நடமாடுபவைகள் பேய்களேயாகும்.

4. நீல நிறத்தையுடைய உமை. 'நீலி' என்ற சொல் 'பட்டி' போன்று நிந்தாஸ்துதியாகவும் பிரயோகிக்கப் பட்டுள்ளது.

5. கலைகள் தேய்கின்ற சந்திரனையுடையவனே—மற்றொரு பொருள்: குறைந்த புத்தியையுடையவனே.

6. பிச்சை யெடுக்கும் கதியவனே,

7. தேகத்தில் பாம்பை யணிபவனே.

8. கச்சை கட்டும் இடையையுடையவனே—கட்டும் 'இடையா.'

9. நடனமிடும் கால்களை யுடையவனே - மற்றொரு பொருள் 'காலாடி'.

10. கவலை கொண்டு, 'ஏன் இவனை இப்படி யடித்தார்கள்' என்று யாராவது பரிந்து பேசினார்களா ?

இப்பாட்டும் நிந்தாஸ்துதியைச் சேர்ந்ததாகும்.

57

இராகம்—சங்கராபரணம் தாளம்—சாபு

பல்லவி

சங்கரா யாரோ சதுரர்[1]—சாற்றுவாய் நீ (ச)

அநுபல்லவி

பொங்கெழில்[2] நீறே பூசிப் புகழ்ந்து முகமன்[3] பேசி
எங்கும் உனைப்பணிகொள் [4]ஏழைத் தொண்டரோ
[நீயோ (ச)

சரணம்

மங்கை உமையைக் கண்டு மனத்திற் பொறுமைகொண்டு
தங்கியுன் செஞ்சடையில் தாங்கவைத்த கங்கையோ
கங்கையைக் கண்டழுங்கிக் காதல் முழுதும்கொள்வான்
பங்கினில் தாங்கவைத்த பாவைஉமையோ நீயோ (ச)

---

1. சமர்த்தர். "சங்கராயார் கொலோ சதுரர்" என்ற மணிவாசகர் திருவாக்கே இங்குப் பல்லவியாக்கப் பட்டுள்ளது
2. அதிகரிக்கும் அழகு.
3. இனிய சொற்கள்.
4. உன்னிடம் பல பயன்களைப் பெறும் ஏழை யடியார்கள்.

சரணம்: இதன் கருத்து. உமாதேவியைக் கண்டு பொறுமை கொண்டு உனது முடியின்மீது அமர்ந்து நீசுமக்கும் படிவைத்த கங்கை சமர்த்தளா அல்லது தூக்கிச்சுமக்கும் நீ சமர்த்தனா?

கங்கை உனது சடையில் இருப்பதைக் கண்டு பொறுமை கொண்டு உன் தேகத்திலேயே பாதியைப் பற்றிக் கொண்டு தன்னைச் சுமக்கச் செய்த உமாதேவி சமர்த்தளா அல்லது உமையைச் சுமக்கும் நீ சமர்த்தனா? கூறுவாய்.

இதுவும் 'நகைச்சுவை' யுடைய நிந்தாஸ்துதியாகும்.

58

இராகம்—சாரங்கா *தாளம்—ரூபகம்*

பல்லவி

அடிபடுந் தெய்வம் எங்கள் அருமைச் சிவன்—ஆனால்
பிடிபடமாட்டான் இங்கே யார்க்கும் அவன் (அ)

அனுபல்லவி

பொடிபடும் நீறே பூசிப் பொன்னம்பலத்துளாடிப்
படிபடும்[1] அன்பர்க்காக மிடி[2]படவும் சலியான் (அ)

சரணம்

[3]தடிகொடு தென்னன் தன்மேல் தாக்கும் அடிதான்
[கொண்டான்
[4]சாக்கியன் தூக்கி வீசத் தேக்கிக் கல்லடியுண்டான்
[5]கடிபொழிற் காளத்தியில் கண்ணப்பனின் செருப்பால்
[6]கடுந்தவம் புரிந்ததோர் கருவிசயனின் வில்லால் (அ)

---

1. உலகத்தில் உள்ள.
2. துன்பப்பட.
3. பாண்டியன் அடித்த தடியடியைக் கொண்டான்.
4. சாக்கிய நாயனார் தினந்தோறும் பூசைசெய்யும் முகத்தான் ஒரு சிவலிங்கத்தின்மீது எறிந்த கற்களைச் சிவன் ஏற்றுக் கொண்டார்.

5. கண்ணப்ப நாயனார், காளத்தியப்பருக்குப் பூசை செய்யுமுகத்தான், அவரது உச்சியிலிருந்த பழந் தழைகளைத் தனது செருப்புக் காலால் தள்ளித் தன்முடியிற் செருகியிருந்த புதுப்பத்திரங்களைப் போட்டதைக் குறிக்கும்.
6. அர்ச்சுனன் தவத்தின்போது சிவன் வேடுவனாகிச் சென்ற காலத்தில் இருவருக்கும் போர் மூண்டபோது வேடுவ

59

தில்லை

இராகம்—ஈசமனோஹரி தாளம்—ஆதி

பல்லவி

தென்பாலுகந் தாடும் தில்லைச் சிற்றம்பலவன்[1]
அன்பாலுகந்தடியார்க் கருளுவன் காண்
(மூடு) திடு கிடுவென சபை நடுவதில் உமையொடு
படஅரவவையுடன் நடு இரவொடு பகல் (தெ)

அனுபல்லவி

என்பாலிசைத்தமாலை[2] எண்டோள்கள் மீதுமாட
[3]அன்பாலிசைத்த கண்கள் அம்பாள் தனையணையத்

சரணம்

பெண்பாலு கந்ததொரு பித்தன் எனப் புகன்றும்
பேய்பாலுகந்துநடம் பிரியமுடன் புரியும்
கண் பாவிய நுதலோன்[4] கழல் பாடுதும் எனவும்
கவின்பாடல்பாடவையம் கணம்சூழக்காலமெல்லாம்(தெ)

---

1. இதுவும் திருவாசக வாக்கு என்பதைக்காண்க.
2. எலும்பினாலுண்டாக்கப்பட்ட மாலை.
3. அன்பினால் செலுத்தப்பட்ட அவர் நோக்குச் சிவ காமியம்மையைச் சேர.
4. கண்ணுடன் திகழும் நெற்றியோன்.
5. "பெண்பாலுகந்தான் பெரும் பித்தன் காணேடி"— என்ற மணிவாசகர் வார்த்தைகளை நோக்குக.

னாகிய சிவனைப் பார்த்திபன் தனது வில்லால் அடித்ததைக் குறிக்கும்.

இவ்வுதாரணங்களாலும் இப்பாட்டாலும் நாம் அறியக் கிடப்பது என்னவெனில், சிவபெருமான் அன்புக்கும் அடியவர்க்கும் எளியவன். ஆனால் வேறு எம்முறைக்கும் எவருக்கும் அரியவன் என்னும் உண்மையே யாகும்.

60 மதுரை

இராகம்—ஆபோகி தாளம்—ஆதி

பல்லவி

மாமதுரையிற் சொக்கநாதரின் தரிசனம்
நேமமுடன் கொண்டிடுவேன்—மனமது குளிர்வுற
[நினைவுடன் (மா)

அனுபல்லவி

தேமதுரக் கனியாம்[1] தேவி மீனாட்சிதன்னைத்
தேகமதிற் பாகமாய்த் திகழச்செய்திடும் ஈசர் (மா)

சரணம்

[2]காமன் தனை எரித்த கண்ணுதற் கடவுளார்
[3]காலன் தனை உதைத்த கண்ணியப் புண்ணியர்
சேமமுறத் தமது செந்தாமரைத் தாளினைச்
சேர்ந்து திளைக்கச் செய்வோர் ஆர்ந்த அடியார்தம்மை
(மா)

---

1. தேனுடன் தித்திக்கும் பழம் போன்ற.
2. சிவன் காமனை எறித்ததைக் குறிக்கும்.
3. சிவன், மார்க்கண்டேயரைக் காக்க, யமனை உதைத்ததைக் குறிக்கும்.

ஆசிரியர், மதுரைக்குப் புறப்படும் தருவாயில் இப் பாட்டைப் பாடினார்.

61 திருவாலங்காடு

இராகம்—சஹாரு தாளம்—ரூபகம்

பல்லவி

ஆலங்காட்டில் ஆடும்ஐயன் கோலங்காண ஆசை
[கொண்டேன்
அம்மை காரைக் காலின் அம்மை செம்மை காணவும்
[விழைந்தேன் (ஆ)

அநுபல்லவி

ஓலங் கூட்டி[1] உறுமுகாட்டில்
உருவங்காட்டி முறுவல்[2] காட்டி (ஆ)

சரணம்

ஞாலங் காட்டி வானுங் காட்டி
நயனங் காட்டிப் புயங்கள் ஆட்டிச்
சூலங் காட்டிச் சுயமும் காட்டிச்[3]
சுகமும் கூட்டிச் சகமும் ஆட்டி (ஆ)

---

1. சத்தம் உண்டாக்கி.
2. புன்சிரிப்பு.
3. சுய ரூபத்தையும்காட்டி.

திருவாலங்காடு செல்ல விரும்பிய ஆசிரியர் தன்வேட்கை மிகுதியால் பாடிய பாட்டாகும் இது.

62 B. சிவனிடம் சரண்புகுதல்

இராகம்—ஆபோகி தாளம்—ஆதி

பல்லவி

[1]நீள நினைந்தடியேன்—உனை
நித்தலும் கைதொழுவேன் (நீ)

அனுபல்லவி

மாள நினைந்தடியேன் வைய மாயை படிந்திருந்தேன்
ஆள நினைந்தடியேன் தனை ஆசைநிறைந்துறுவாய் (நீ)

சரணம்

[2]கோளை நினைந்தழுதேன் தினம் கோபம் நிறைந்திழிதேன்[3]
கோவே யுனையடைந்தேமனம் கோதகன்றேயுனைச்சேர்[5]
நாளை நினைந்துருகிநலம் நாடும் இனம் அடைந்தே
நாதா நினதுதிருநாமம் நம்பா எனவும் கூறி (நீ)

---

1. இப்பல்லவி, சுந்தரமூர்த்தி சுவாமிகளது "நீள நினைந்தடியேன் உனைநித்தலும் கைதொழுவேன்" என்னும் வார்த்தைகளால் ஆக்கப்பட்டுள்ளது காண்க.

2. குற்றம் செய்யும் கோள்களை, கிரகங்களை நினைந்து அழுதேன்.

3. குற்றமுடையேன்.

4. குற்றங்கள் நீங்கி உன்னை வந்தடைகின்ற நன்றை நினைந்து.

5. நன்மையை நாடும் அடியார்கள் கூட்டத்தை யடைந்து.

63

இராகம்—முகாரி　　　　　　　　　　　　　　　　　　தாளம்—சாபு

பல்லவி

இடரினும் தளரினும் எம்பெருமான் பதம்
தொடர நினைந்துதொழுவேன் துணிந்தெழுவேன் (இ)

அனுபல்லவி

சுடரெனும் சோதியாகிச் சுடலையில் ஆடும்ஐயன்
துணையல்லா திவ்வுலகில் புணையில்லை என்றறிந்தே (இ)

சரணம்

பாசக் கயிற்றோடேமன் பதறப்பிடிக்கும்போதும்
பாவக் குழவி மாயைப் பாம்பே கடிக்கும் போதும்
நேசக்கயிற்றின் மங்கை நினைவால் துடிக்கும்போதும்
நெஞ்சம் குமுறிக் கண்ணீர் நிறைத்தே வடிக்கும்போதும்(இ)

64 C. சிவனிடம் வேண்டும் வரம்

இராகம்—வஸந்தா தாளம்—ஆதி

பல்லவி

பொய்க்கின்ற[1] என் மனத்தைப் புனித மனமாக்கிடப்
புண்ணியனே சிவனே எண்ணிடுவாய் (பொ)

அனுபல்லவி

[2]துய்க்கின்ற நற்கனியாய்த் தொங்கு குஞ்சிதபாதம்
மொய்க்கின்ற வண்டாகியுன்மோகம்பெற நினைப்பேன் (பொ)

சரணம்

[3]கைக்கின்ற காய்களைத் தேன் கசியும் கனியாக்குவாய்
கானலை நீராக்குவாய்க் கல்லைச் செம்பொன்னாக்குவாய்
வைக்கின்ற வெவ்விடத்தை வான் அமுதமாக்குவாய்
எய்க்கின்ற வென்மனத்தை ஏன் இனிதாக்கமாட்டாய் (பொ)

---

1. பொய்களையே நாடுகின்ற.
2. அடியார்கள் உண்டு அனுபவிக்கின்ற.
3. கைக்கின்ற = கசக்கின்ற, துவர்க்கின்ற.

65

இராகம்—பிலஹரி தாளம்—ஏகம்

பல்லவி

என்பால் இரங்கமனம் ஏன் இல்லையோ—என் தாய்
[அல்லையோ (எ)

அனுபல்லவி

அன்பாற் சகல உயிர் ஆக்கிப் புரந்தழிக்கும்
அம்மையப்பா நின்னைநான் ஆடிப்பாடி யழுதும் (எ)

சரணம்

பொன்பால்என் றன் மனமே போம்பாலதும் அல்லவே
மின்போலொரு செஞ்சடை யின்பாலோர் ஆறுடையாய்
நின்பால் நிலைத்திருந்தென் நெஞ்சம் நினைத்திருக்க
உன்பால் அடைந்தடியேன் ஓயா தழுதேன் கண்டாய்(எ)

இந்தப் பாட்டு 13-4-44ல் பாடப்பட்டது.

66

இராகம்—சுத்தசாவேரி தாளம்—ஆதி

பல்லவி

எத்தனை நாளைக்கிந்தத் தொத்து நோய்த்துன்பத்தாலே
சித்தம் அழிவேன் எம்பிரான் ஏழைதம்பிரான்

(முடுகு) இத்தாரணிவிட்டோடவுன்
வித்தார நிலைத்தாரடி.
அத்தா அருள் வைத்தாள் (எ)

அனுபல்லவி

பத்தனைக் காத்தருளல் பரமன் உன்பாரம்என்பார்
இத்தனைத் துன்பம் கண்டும் ஏன் இரங்காய்நீ என்பால் (எ)

சரணம்

நித்தமுன் நாமந்தன்னை நினைந்து நவில்வதல்லால்
எத்தகைத் தாம் பணியும் யான்செய்திலேன் எம்மீசா
வைத்த நிதிபெண்டிரும் வாழ்விற் பதவிகளும்
பொய்த்திடும் தன்மைகண்டுன் பொற் கழலல்லாதிங்கு

(முடுகு) நிலையானவை
பிறிதேயெதும்
இலையேஎன
நினையேசரண்
எனநாடு நான். (எ)

67

இராகம்—கல்யாணி தாளம்—ஆதி

பல்லவி

ஆனந்த சாகரத்தில் அழுத்தியே வைப்பாய்
நானுன்றன் தாமரைத்தாள் வழுத்தியும் துய்ப்பேன் (ஆ)

அநுபல்லவி

தேனுந்து தாமரையில் திகழும் பிரமனுடன்
[1]வானுந்தவே வளர்ந்த மாலும் வணங்கும் தேவே (ஆ)

சரணங்கள்

1. மானுந்தன் கரமதில் மாமதி சிரமதில்
[2]வைத்துமுப் புரமதில் [3]வைத்தே தீயுறமதில்
(முடுகு) மங்கையவள்மலை யன்கிளியாளையும்
பங்கிலுறும்வகை பண்புடனேசெயும்
துங்கமுறும் பர சங்கர நாதனே
எங்களதாருயிர் மங்கள போதனே (ஆ)

2. பெண்டுபிள்ளைகளீட்டம் பேணுதல்தன்னில் நாட்டம்
கொண்டும் உலகினீட்டம் கூடியலைந்தே வாட்டம்
(முடுகு) பெற்றுமே வாழ்வினில் முற்றுமே நின்னருள்
உற்றிடல் இன்றியே வற்றிட நாவு(பி)
தற்றி யுழன்றிடு வெற்றியல் பேனை(ய)
கற்றிவிடாதுகண் நெற்றியுளாய் எனை (ஆ)

---

1. மகாபலிச் சக்ரவர்த்தியின் உலகத்தையளக்கத் திருமால் வானமளாவ வளர்ந்ததைக் குறிக்கும்.
2. தன் கரமதில் மானும் சிரமதில் மாமதியும் வைத்து என்று படிக்க.
3. மதிலில் தீயுற வைத்தே என்க.

68 D. சிவனின் அருள் திறம்

இராகம்—அடாணு தாளம்—ஆதி

பல்லவி

மறுத்தனை என்றனுக்கே மங்கைசுகம்—ஆசை
மாற்றினையாதலால் நான் வேண்டேன் ஜகம்

(முடுகு) மனமது கொடு
நரகென மிடி
இனியொரு பொழு
தினிலுற விலை
அரிவையரிடம் அவலரியில் (ம)

அனுபல்லவி

அறுத்தனை மாயை தன்னில் ஆழ்ந்த என் பாசந்தன்னை
அளித்தனை நானும் உன்னை அறிந்திடும் நேசந்தன்னை

சரணம்

உறுத்தநின்னை முன்காமன் ஒருத்தன் வந்தான் அவனை
[1]ஒழிந்தும் உருவம் வெந்தும் ஓய்ந்திடச் செய்தாய் அந்நாள்
[2]ஒறுத்தும் என் உள்ளம் பாய்ந்தும் ஓங்கியக் காமன்மீண்டும்
உரைப்பரும் துன்பம் செய்தான் உய்வழியொன்றும்
[காணேன்

(முடுகு) ஒப்பற்றிடும் உனையின்றியே
எப்பற்றுமே இனியில்லையே
வெப்புற்றிடும் இவன் தொல்லையே
தப்பற்கருள் செயவல்லையே

ஒருபோதுமே
இனிமாதர்கள்
தருமோர்சுகம்
அதுநாடிடேன்

உய்விப்பாய்—மகிழ்
செய்விப்பாய்—அருள்
பெய்விப்பாய்—வினை
நைவிப்பாய்—நனி (ம)

---

1 சிவபிரான் தவத்தில் இருந்தபோது காமன் தனது அம்பை எய்ததும் சிவன் கோபங் கொண்டு தன் நெற்றிக் கண்ணைத் திறந்து நோக்கிக் காமனை வெந்து சாம்பலாகும்படிச் செய்ததைக் குறிக்கும்.

2. துன்புறுத்தியும்.

69

இராகம்—பைரவம் தாளம்—ஆதி

பல்லவி

கடையன் எனக்குரிய நடையில் எனைக் காத்திடும்
கண்ணுதலார் அருள் எண்ணுதலே பொருள் (க)

அனுபல்லவி

சடையன் மகன் ஆரூரர் சம்பந்தர் நாவுக்கிறை
சாற்றும் வாதவூரர்போல் போற்றும் பெருமையில்லேன் (க)

சரணங்கள்

1. [1]கல்லைமுன் பொன்னாக்கினார்[2] கடையேன்கையிற் காசினை
ஒல்லைக்கருங்கல்லாக்கி ஒவ்வாதும் ஓட வைத்தார்
[3]செல்லச் சிவிகை முன்னர் சிறந்து சம்பந்தர்க்கீவார்
[4]சிவிகை எனதழித்தார் குவிகை எனவிழித்தார் (க)

2. பெண்ணையாரூரர்க் கீந்தார்பேயை எனக்குத் தந்தார்
[5]பெய்விடம் அமுதாக்கும் பிஞ்ஞகன் ஏழைஎன்முன்
[6]உண்ணத் தகும் அமுதை மண்ணுக் கிணையாக்கினார்
உய்யத்தகும் என்பேனை நையத்தகுவாய் என்றே (க)

---

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் ஸ்தலத்தில் இறைவனை வணங்கி அணை அக்கோவிலிலிருந்த செங்கற் பாளங்களைத் தன் தலையணையாக வைத்துக் கொண்டு துயின்றார். மறுநாள் துயிலெழுந்ததும் அக்கற்கள் சிவனருளால் பொற்பாளங்களாய் மாறியிருந்தன.

2. ஆனால் பாவியாகிய எனது கையிலுள்ள பொற் காசுகளையும்கூடக் கருங்கல்லைப் போன்றும் ஓடுகளைப்

போன்றும் பயனற்ற தாக்கிவிடுகிருர் இறைவன். அதாவது அப்பொன்ஞல் நான் சுகமடைய முடியாமல் போய்விடுகிறது.

3. திருஅரத்துறையில் சிவபிரான் முத்துச்சிவிகையை சம்பந்தப் பிள்ளையாருக்கு அளித்தார்.

4. என் விஷயத்திலோ, நான் வைத்திருக்கும் வாகனம் எனக்குப் பயனும் இன்பமும் பயக்க முடியாத வண்ணம் செய்யப்பட்டு வருகிறது திருவருளால்.

5. சமணர்கள், அப்பர் பெருமானுக்களித்த விஷத்தை அமுதாக்கினுர் சிவன்.

6. ஆனுல் பாவியாகிய நான் உண்ணலாம் என்று அமுதையே கையில் எடுக்கும்போது அது மண்போல் ருசியற்றதாகிவிடுகிறது. இவை எல்லாம் இறைவன் ஆட்கொள்ளும் முறைகள். இது 2-4-44-ல் எழுதப்பட்டது.

70

இராகம்—சாமா தாளம்—ஆதி

பல்லவி

அடித் தடித் தென் றனக்கே அக்காரம் தீற்றிடும்[1]
அம்மையப்பா உன்றன் அருள்நினைந்தேன்—உய்ந்தேன் (அடி)

அநுபல்லவி

இடித்திடித் தேழையேற்குன் இன் னுபதேசம் செய்தாய்
[2]எவர்க்கும்லொண்ணு இனிமை துவர்ப்புள் துணித்தளித்தே
(அடி)

சரணம்

படித்த படிப்பின் அகம் பாவநிலைபழித்தாய்
பணத்திற் புதைந்திருந்த குணத்தைப் பறித்தழித்தாய்
தடித்த பதவிமோகம் நொடிக்குள் ஒடித்தொழித்தாய்
தையலர் காமம்என் னுள் நையநின் கண்விழித்தாய்[3] (அடி)

---

1. "அடித்தடித்து வக்காரமுன் தீற்றிய அற்புதம் அறியேனே" என்ற திருவாசக வாக்கே பல்லவியாக எடுத்தாளப்பட்டுள்ளது. அக்காரம் = காரமல்லாதது, இனிப்பு.

2. வேறெவருக்கும் கிடைத்தற்கரியதாய இனிப்பைத் துவர்ப்புக்குள் புகுத்திக்கொடுத்தே.

3. கல்வியால் ஏற்பட்ட செருக்கை யழித்தாய், பண ஆசையை யொழித்தாய், பதவி மோகத்தையும் ஒழித்தாய், பெண்கள்பால் யான் கொள்ளும் காமத்தையும் அது என் உள்ளத்திலேயே தீய்ந்து போகும்படி அருளால் விழித்து நோக்கினுய் என்பது கருத்து. இச்செயல்களெல்லாம் துன்பங்களைப் போல் வெளிக்குத் தோன்றினும் அவைகள் உண்மையிலே இறைவன் என்மீது மிகுந்த கருணையாற் செய்யும் பேருதவிகள் என்பதை யான் உணர்ந்தேன்.

இக்கீர்த்தனை 2-4-44ல் எழுதப்பட்டது. இதுவும் ஆசிரியரின் சுயஅனுபவத்தைத் தழுவியே எழுதப்பட்டது.

71

இராகம்—மோஹனம் தாளம்—ஆதி

பல்லவி

மூவா[1] மருந் தொன்றினை மூலபண் டாரமதை[2]
ஆவாவென் றழைத்தெனக் கருளினனே—முக்கண்
[வள்ளலே (மூ)

அனுபல்லவி

தேவாதி தேவர்களும் திருமிகும் தொண்டர்களும்
மாவாலி தன்னைக் கொன்ற மாலும் பெறற்கரிய (மூ)

சரணம்

சாவாச் சமாதியாகித் தவமே பயில் முனிவர்
சாத்திர ஆகமத்தால் தோத்திரம்செய் அந்தணர்
தூவா[3] நின்றே மலர்கள் நாவாற் புகழ் அடியார்
சோகம் நிறைந்துநிற்க மோகம் நிறை எனக்கே (மூ)

---

1. அழியாத அல்லது அதைத்தின்றவர்க்கு அழிவு இல்லாத.
2. மூலதனம். " மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்தும் மினே " எனும் திருவாசகத்தை நோக்குக.
3. தூவி.

இறைவனுகிய சிவபெருமான் ஆசிரியருக்குச் செய்த பேரருள் திறத்தை வியந்து பாடப்பட்டது இக்கீர்த்தனை.

72

இராகம்—பெஹாக் தாளம்—ரூபகம்

பல்லவி

[1]நன்றே செய்திடுவாய் நீ பிழையே செய்திடுவாய்காண்
நானோ இதற்கு நாயகம்—நமச்சிவாய (ந)

அநுபல்லவி

ஒன்றே செய்வேன் உன் நாமம் ஒன்றிச் சொல்வதே
[நேமம்
என்றே சிவனே நாளும் ஏத்திப் பெறுவேன் சேமம்[2] (ந)

சரணம்

[3]அன்றே பிள்ளைக் கறிக்காய் ஆசைகொண்டும் ஏங்கிநின்றாய்
[4]அன்பன் கண்ணப்பன் கண்ணை ஆழ்ந்தெடுத்தும்
[ஏந்தவைத்தாய்
[5]சென்றாரூரருக்கன்று திருவார் பெண்களைத் தந்தாய்
[6]சீராய் வையத்தை மூர்த்தி சேர்த்தாளவும் பணித்தாய்
(ந)

---

1. "நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்னும் திருவாசக வாக்குப் பல்லவியாக எடுத்தாளப்பட்டுள்ளது.

2. சேமம் = க்ஷேமம்.

3. சிவபெருமான், சிறுத்தொண்டரின் குழந்தையாகிய சீராளனின் கறியை உண்ணச் சென்றதைக் குறிக்கும்.

4. சிவபெருமான், காளத்தி மலையில் தனது கண்ணில் இரத்தம் பெருச்செய்து அதைத் தடுக்கும் பொருட்டுக் கண்

ணப்பர் தனது கண்ணைப் பெயர்த்தெடுத்து வைக்கும் நிலைமையுண்டாக்கினதைக் குறிக்கும்.

5. சிவபெருமான், சுந்தரமூர்த்திக்குப் பரவை, சங்கிலி என்னும் இரண்டு பெண்களை மணம் செய்வித்தமையைக் குறிக்கும்.

6. மதுரையில் இறைவன் பூஜைக்காகச் சந்தனம் அரைத்துக்கொடுக்கும் திருத்தொண்டு செய்துவந்த மூர்த்தி நாயனார், சந்தனக்கட்டை கிடைக்காது போனதும் தன் முழங்கையை வைத்துச்சந்தனம் அரைத்ததற்கு மெச்சி அவர் பாண்டிநாட்டின் மன்னனாக ஆகும்படிச் சிவபிரான் செய்த அருளைக் குறிப்பிடும்.

கடவுள், மக்களை 'இன்பம்' என்னும் வழியாகவும், 'துன்பம்' என்னும் வழியாகவும் ஆட்கொள்வார். எது நமக்கு நேரினும் எல்லாம் இறைவன் திருவுளம் என்று நினைக்கவேண்டும் என்பது இப்பாட்டின் கருத்து.

73 E. உலகிற்குபதேசம்

இராகம்—வாசஸ்பதி தாளம்—ஆதி

பல்லவி

திருமுல்லை வாயிலுறை சிவனை நல்வாயில் நிறை
ஒரு சொல்லையே நீ யுரைத் துயர்வடைவாய்—ஓமனமே
(திரு)

அனுபல்லவி

[1]உருவில்லையேனும்மனத் துணர்வெல்லை தன்னுள்தினம்
உயிர்ஒன்றித் தானடனம் ஒளிமல்கச் செய்யிறையை
(திரு)

சரணம்

[2]பருவில்லைக் கையெடுத்தே பருமுல்லை யம்புடனே
தருதொல்லைக் காமனை நீ தானும் வெல்ல அருள்வான்
[3]கருவெல்லையற்றகுழி கவிழ்தொல்லை நீக்கியுன்னைக்
கதிவல்ல பதிதன்னுள் கருணையுடன் வைத்திடும் (திரு)

---

1. ஓர் உருவை இல்லாதவரேனும் உன் மனத்தின் சிறந்த உணர்வினது எல்லைக்குள் நின்று ஆனந்த நர்த்தனம் செய்து உயிரோடொத்திருந்த பேரொளியை யுண்டாக்கிப் புலனாகும் சிவபெருமான் என்பது கருத்து.

"காயத்துள்ளமுதூற ஊற நீ கண்டு கொள் என்று காட்டிய" என்ற திருவாசகத்தைக் காண்க.

2. பெரிய கரும்பு வில்லை எடுத்து, பெரிய முல்லை மலர்களாகிய அம்புகளைத் தொடுத்து உனக்குத் தொல்லையை யுண்டாக்கும் காமனை நீ வெல்ல உனக்கருள்செய்வார் இவர்.

74

இராகம்—மோஹனம் தாளம்—ரூபகம்

பல்லவி

முல்லை வாயில் தன்னில் வாழும் நல்ல நாதன் தன்னைப்
[பாடின்
தொல்லை வாயிற் செல்லல் இல்லையே—தொல்லுலகினில்
(மு)

அனுபல்லவி

சொல்லவாயும் வணங்கத் தலையும்
தொழுவே கையும் உளவேயதனுல் (மு)

சரணம்

கல்லைவாயில் மெல்லும் கணக்கில்
காமவார்த்தை கழறுவோரும்
ஒல்லைநாடி உயர்ந்த அமுதம்
ஒருங்கு கூடி அருந்த வாரும் (மு)

இக்கீர்த்தனையும் திருமுல்லைவாயில் நாதனை நினைந்து பாடப்பட்டது.

---

3. தாயின் கருக்குழியின் எல்லையில் விழும் தொல்லையை நீக்கி உன்னை நல்ல கதியாகிய சிவபுரத்தில் (தன்னிடம்) கருணையுடன் வைத்திடும் இறைவன்.

இக்கீர்த்தனை திருமுல்லை வாயிலை நினைந்து பாடப்பெற்றதாகும். இதற்குப் பின்னர்தான் ஆசிரியர் திருமுல்லைவாயில் சென்று சிவபெருமானை வணங்கினது. திருமுல்லைவாயில் பதிகம் ஒன்றையும் ஆசிரியர் பாடி வெளியிட்டுள்ளார்.

75

இராகம்—மாண்ட்   தாளம்—ஆதி

பல்லவி

கடல் வற்றினாலும் கருணை வற்றாதமுக்
கண்ணன் பதம் பணிந்தே எண்ணுவாய் நீ (க)

அனுபல்லவி

உடல் வற்றினாலும் உன் உள்ளம் வற்றாத துயர்
ஒழிவுற்றுமே நீ உய்யும் வழியுற்றிட விரும்பின் (க)

சரணம்

கூடல் வற்றி யொட்டிடவும் குரல்வற்றிக் கோரமுறக்
கோவென் றலறி நிதம் நாவொன் றுலறிடவும்
[1]அடல் வற்றிடாதவினை அதுபற்றி யலைத்துனை
அழிக்குமுன்னரே சிவன் கழற்சரண் என்றடைவாய்
(க)

---

1. வலிமை குறையாத.

இக்கீர்த்தனை 13-4-44 தமிழ்ப் புதுவருடத்தன்று இயற்றப்பட்டதாகும்.

76

இராகம்—ஹேமாவதி தாளம்—ஆதி

பல்லவி

'இந்திர போகம் துரும்பே'—என்றெண்ணிநிதம்
[1]வந்தரன் மோகம் விரும்பே—இகமே பரமே சுகமிலே

(முடுகு) எழிலேமிக
வழிமாமுக
விழிமாதர்கள்
அழியாதமர்
உலகுறு சுகமெனும் (இ)

அனுபல்லவி

சந்திரனைச் சடையில் தரித்தமர்ந்தே விடையில்
வன்புலித் தோலிடையில் வரித்த வள்ளலைக்கண்டே(இ)

சரணம்

[2]மந்திர தந்திரங்கள் மனமொடுக்கும் திறங்கள்
குந்தி யாசனம் செய்யும் கோடிவித யோகங்கள்

(முடுகு) மற்றிவை பற்றியே
சுற்றிட லாலொரு
வெற்றியும் உற்றிடல்
சற்றுமிலை இதை

மனமேயனு
தினமேகொடு
மகிழ்வோடரன்
புகழ்பாடிட
நிதம் இதம் உறும் அறி (இ)

1. வந்து அரன்.
2. மந்திரங்களாலும் தந்திரங்களாலும் யோகசாதனங்களாலும் யாதும் பயனில்லை. சிவனைப் பாடிப்பணிவாய் என்பது கருத்து.

77

இராகம்—மலயமாருதம் தாளம்—ஆதி

பல்லவி

தீவினைப் பாரம் கழிப்பாய்—தேய்த்துத் தேய்த்து நீ
தேர்ந்தெழுந்துன் கண்விழிப்பாய் (தீ)

அனுபல்லவி

சாவினைப் பிறப்பினைத் தாண்டிச் சாஸ்வதத்தினை
மேவிப் பிழைத்திடவும் தாவித் தவிக்கும் நண்பா (தீ)

சரணம்

ஆவினைக்கூடும் கன்றாய் [2]அழகினைக்கூடும் குன்றாய்
அமைந்த காளத்தி ஏறி அருவினைப் பாரம் நீத்த[3]
தேவுமாலே மிகுந்த[4] செல்வன் கண்ணப்பனைப்போல்
தேர்ந்த மனத்திறேடு சேர்ந்து காளத்தி தன்னில் (தீ)

---

1. தாய்ப்பசுவைப் பிரிந்திருந்து கூடப்போகும் கன்றினை யொத்த ஆர்வத்துடனும் வேகத்துடனும்.

2. அழகினைக் கூடிநிற்கும் குன்றாக அமைந்த காளத்தி மலை மீதேறி.

3. தனது அரிய வினைப்பாரங்களை உதறியெறிந்த.

4. கடவுட் பைத்தியம் பிடித்த கண்ணப்பனைப்போல நீயும் தெளிந்த மனத்துடன் காளத்திமலை மீதேறி உனது தீவினையாகிய பாரத்தையும் கழிப்பாய் என்பது பொருள்.

4. திருமால் வணக்கக் கீதங்கள்

78 A. கனவிற்கண்ட காட்சி

இராகம்—கேதாரம் தாளம்—ஆதி

பல்லவி

ஏங்கும் கவலை யொழிந்தேன் இவ்வாழ்வில் இனி
ஏங்கும் கவலை யொழிந்தேன் (ஏ)

அனுபல்லவி

தூங்கும் என்றன் கனவில் [1]தூங்கும் எழிற் கடவுள்
ஓங்கும் தன் கோலம் காட்டி உய்வித்தார் இன்பம்
[ஊட்டி (ஏ)

சரணங்கள்

1. தேங்கும் இன்பக் கடலில் திகழும் தமிழ் அலையில்
தேன் துளவம் புனைந்தே [2]தான் துயில்வோன்நினைந்தே
பாங்கின் மரகதத்தின் பசுமைமலை நிகர்த்தோன்
பவளச் செவ்வாயிதழில் தவழக் கண்டேன் முறுவல்(ஏ)

2. நாமம் நவின்றுநாளும் நாமம் புனைந்தெந்நாளும்
நாடும் அடியார்நிற்க நாளும்அழியாநிற்கும்
காமம் பயிலும் அந்த காரனுகும் நாயேனும்
காணும் படிக்கருள்எக் காலும் அளித்தார் மாலும்(ஏ)

தோற்றுவாய்:-ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து மூன்றும் வருடம் டிஸம்பர் மாதம் முதல்நாள் காலை 4 மணிச் சுமாருக்கு மகாவிஷ்ணுவின் திருக்கோலத்தை, அனந்த சயனத்தை ஆசிரியர் தன் கனவிற் கண்டு மகிழ்ந்தார். ஆசிரியர் ''வைணவன்'' அல்லரெனினும் இந்தவிதமான எதிர் பாராத திருமால் அருள் அன்று முதல் ஆசிரியரிடம் விஷ்ணு

பக்தியை உண்டாக்கியுள்ளது. இப்பாட்டு, கனவின் மறு நாட் காலை ஆசிரியரால் எழுதப்பட்டது. இதற்கு முன்னர் திருமாலின் நின்ற கோலத்தையும் ஆசிரியர் தனது கனவிற் கண்ட விஷயமும் ஈண்டுக் குறிக்கத் தக்கதாகும்.

1. தூங்கும் எழிற்கடவுள் = துயிலும் அழகுடைய திருமால்.

2. தான் துயில்வோன் நினைந்தே = அறிதுயில் கொள்வோன்.

79

இராகம்—பூபாளம் தாளம்—சாபு

பல்லவி

கனவிற் கண்டேன் ஓர் காட்சி நான் -எக்காலும்அதை
நினைவிற் பிரிந்து நீங்கிடேன் (க)

அனுபல்லவி

மனதில் துஞ்சித் திருமால் மகிழ்வில் தந்தார் ஒருமால்
எனவே வையத் திணைமால் எழிலிற் கண்டேன்
[அவர்பால் (க)

சரணம்

நீளலைப் பாற்கடலாம் நெய்தலைக் கண்டேன் அதில்
நிறைந்த பச்சைக்குன்றமாய் நிகழும் குறிஞ்சி கண்டேன்
வாளன கண்மடவாள் வாழுமார்புத் தாமரை
வளமருதத்தைக் கண்டேன் உளமதில் மாலுங்கொண்டேன்(க)

குறிப்பு:-இந்தக்கீர்த்தனையும் முன் பாட்டில் குறிப்பிடப் பட்ட திருமால் கனவைப் பற்றியே எழுந்ததாகும்.

இதில், திருப்பாற்கடலில், இலக்குமி தேவியைத் திரு மார்பில் கொண்டு துயில்கின்ற திருமாலின் கோலம் ஒரு திணைமயக்கமாக்கொண்டு பாடப்பட்டது.

80 B. நாங்குனேரி

இராகம்—பூரிகல்யாணி தாளம்—ஆதி

பல்லவி

நான் நமோவென நாடிவந்தேன்—இன்று
நாரணனே அருள் நலந்தருவாய் (நா)

அனுபல்லவி

வானமாமலை வள்ளல் எனும் உன் பெயர்
வார்த்தை செவி மடுத்தேன் சேர்த்திருகைஎடுத்தேன் (நா)

சரணம்

கோனுமாய் என்றன் குருவுமாய் உயர்
கோலமாய் நின்றென் குறைகள் தீர்த்துமே
தேனுமாய் எழில் திருவின் மார்பனே
திளைக்க உன்றனை விளைத்தனை அருள் (நா)

ஆசிரியரும் அவர் சகாக்களும் 25-3-44 அன்று திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்கு மோட்டாரில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது நாங்குநேரி என்னும் ஸ்தலத்தை நெருங்கினர். அப்போது சற்றுத் தூரத்தில் தெரிந்த கோவிலின் கோபுரத்தைக் கண்டதும் விஷ்ணுவை நினைந்து ஆசிரியர் இக்கீர்த்தனத்தைப் பாடினர்.

81

இராகம்—உதயரவிச்சந்திரிகா   தாளம்—ரூபகம்

பல்லவி

தேங்குநாரி[1] திகழுமார்பின் திவ்ய மூர்த்தியே
நாங்குனேரி நாரணனின் நாமம் கீர்த்தியே (தே)

அனுபல்லவி

தீங்குவாரி[2] தன்னிலாழ்ந்து தேய்ந்துநைந்த நான்
தேன் துழாயின் நீரையுண்டு கலியும் தீர்ந்தனன் (தே)

சரணம்

ஓங்கும் உன்றன் ரூபந்தன்னை ஒளியிற் காட்டினாய்
உன்னைக் கூடிப் பண்ணைப் பாடும் உயர்வு கூட்டினாய்
தீங்கு சேரும் வினைகள் தம்மைத் தேய்த்தும் ஓட்டினாய்
தினமும் உனையென் மனமே நினையச் [3]சிலையும்
[நாட்டினாய் (தே)

---

1. நாரியாகிய மகாலக்ஷ்மி தேங்கி நிற்கும்.
2. தீங்குகள் நிறைந்த கடல் ஆகிய வாழ்க்கை.
3. உருவம்.

இப்பாட்டும் **25-3-44**ல் நாங்குனேரிப் பெருமானைத் தரிசித்தபின் ஆசிரியரால் பாடப்பட்டது.

82 C. காஞ்சிபுரம்

இராகம்—கருடத்வனி தாளம்—ஆதி

பல்லவி

மெய்குன்றி[1] மேலுயர்ந்து மேதினியை யளந்த
வைகுண்டநாதனடி வணங்கிடுவாம்—மனம் இணங்கி
(மெ)

அநுபல்லவி

பெய்கின்ற[2] வான்கருணைப் பிரச[3] முகத்தொளியைப்
பிணிநின்ற என்னுளத்தே பெரிதும் பரப்பினவன் (மெ)

சரணம்

கைநின்ற சக்கரமும் கதிநின்ற நற்கழலும்
கண்ணின்று காட்சிதந்தென் கலிகொன்றடியேன்நாளும்
உய்கின்ற வாறருளி உலகம் புரந்து காஞ்சி
ஓங்கி வளர்ந்தான் திரு [4]ஓங்கும் பரந்த மார்பன் (மெ)

---

1. உடல் குறைந்தவனாய்ச் சென்று.
2. பொழிகின்ற.
3. தேன் நிறைந்த மலர்போன்ற முகத்தின் ஒளியை.
4. திரு ஓங்கும் - லக்ஷிமி தேவி ஓங்கியமர்ந்துள்ள.

ஆசிரியர் காஞ்சிபுரத்திலுள்ள வைகுண்டநாதப் பெருமாளைச் சேவித்தபின் இப்பாட்டு அவரால் பாடப்பட்டது.

83 D. கண்ணன்

இராகம்—சங்கராபரணம் தாளம்—சாபு

பல்லவி

கானக்குழல் பிடித்தே காதிற் சுகம் வடித்தே[1]
காளிங்கன்மேல் நடித்தவா—கண்ணா—கார்வண்ணா
(கா)

அனுபல்லவி

தேனுக்குழல் [2]வண்டோடித் திகழுமுன் மார்பிற்கூடித்
தீந்துளவத் தேனினை [3]மாந்திப்பண் களைப்பாடக் (கா)

சரணம்

கானக் குறத்தி வள்ளிக் காமக்குமரன் தன்னைக்
"காதற்குரிய மரு காநற்கனியே" என்போய்
மானொக்கும் மைவிழியாள் மங்கை ருக்குமணியை
மார்புற்றிடத் தழுவும் [4]மஞ்சுற்றிடு மேனியாய் (கா)

---

1. காதில் இன்பத்தேனை வடித்து அல்லது பாய்ச்சி.
2. தேனுக்காகத் திரிகின்ற வண்டோடி.
3. அனுபவித்து,
4. மேகத்தை யொத்த.

இப்பாட்டு 30-10-43 அன்று பாடப்பட்டது.

84

இராகம்—கானடா தாளம்—சாபு

பல்லவி

வெண்ணெய்க் களவு செய்து விளையாடும் கண்ணா
—என்
கண்ணைக் களவு செய்யும்[2] கார்முகில் [3]வண்ணா (வெ)

அநுபல்லவி

பண்ணைக் களவு செய்த[4] பாங்கின் கரும்பையொத்த
பச்சைக்கிளி மொழியார் இச்சைக்குகந்த எம்மான்
(வெ)

சரணம்

மண்ணைக் களவு செய்தாய் மாயக்கள்வனும் எந்தாய்
பெண்ணைக் குலவு மார்பா [5]பேதக்குலைவு நீதா
விண்ணுக் கொரு மருந்தே வேதப்பொருளே என்றும்
உண்ணெக் குருகி நின்றும் உன்னடியார் பணிய(வெ)

---

1. வெண்ணெயைத் திருடி.
2. எம் கண்ணைப் பறிக்கும் பிரகாசம் பொருந்திய.
3. கரியமேகத்தின் நிறத்தவனே.
4. பாட்டிலுள்ள இனிமையைக் கொள்ளை கொண்ட
5. "பேதை குணம் பிறருருவம் யானெனதென் உரை மாய்த்து" என்ற திருவாசகத்தை நோக்குக.

உலகத்தையும் உன்னையும் வேறாக நினைத்தலாகிய பேதமும், என்னையும் பிறரையும் வேறாக நினைத்தலாகிய பேதமும் அழியும் வண்ணம் செய்வாய்.

இக்கீர்த்தனம் எழுதப்பட்ட தினம் 30-10-43 ஆகும்.

5. உலக நிலையாமையும் உள்ளத்துணர்ச்சியும்

85 A. உலகத்தை நம்பாதே

இராகம்—தன்யாசி தாளம்—சாபு

பல்லவி

எட்டிப்பழும் பழுத்தால் எட்டிப்பறிப் பாருண்டோ
எளிதில் வினை தழைத்தால்[1] இனிதென்றேற் பாரு
முண்டோ[2] (எ)

அனுபல்லவி

கட்டிக் கரும்பே என்றும் கண்ணின் மணியே என்றும்
கட்டிப் புரண்டு மங்கைக்[3] கட்டில் திளைக்கவேண்டா[4]
(எ)

சரணம்

வட்டிக் கடையில் பண்ட வாணிபத்தில் நீ கொண்ட
வஞ்சக லாபம் என்றும் வாழ்விற் குறுதி என்றும்
பட்டிக் கிடாவைப் போன்ற பாமரரைப் பணிகொள்
பாழும் பதவிகளும் வாழ்வென்றும் ஏங்கவேண்டாம்
(எ)

---

1. தீவினைகள் செழித்துப் பறிப்பதற்கு எளிதாக நின்றாலும்.

2. அவைகளின் செழிப்பின் அழகைக் கண்டு அவற்றை இனிதெனக் கருதிப் பறிப்பவர்களுண்டோ, இல்லை.

3. பெண்களது அணைப்பில்.

4. இன்பம் அனுபவித்திருக்கவேண்டாம்.

இக்கீர்த்தனை தஞ்சாவூரில் பாடப்பட்டது.

86

இராகம்—ஸ்ரீ ரஞ்சனி தாளம்—ஆதி

பல்லவி

நம்பாதே நானிலத்தின் வாழ்க்கையை நண்பா
[1]நச்சுப்பொய்கை என்பதை நன்கறிவாய் (நம்)

அனுபல்லவி

வெம்பாதே நீயதனில் வீழ்ந்து விழுங்கி விடம்
வேகாதே வெந்து புண்ணாய்ப் போகாதே புத்தி
[சொன்னேன் (என்)

சரணம்

[2]கொம்பெனப் பெண்ணைக் கையில் கொண்டால்
[ஒடிந்து விழும்
குணமெனப் பணத்தைப்பை கொண்டால் பிணமாக்
[கிடும்
தென்பாகும் சுற்றமென்று தேடில் சிதைத்தழிக்கும்
சிராம் நிலமென்றுற்றால் சேர்த்துப் புதைக்கும் உன்னை
(நம்)

1. விஷக்குளம்.

2. கொம்பு எனும் சொல் குச்சி என்றும் பெண் என்றும் பொருள்படும்.

87

இராகம்—நாட்டைக்குறிஞ்சி தாளம்—ஆதி

பல்லவி

நீரிற் குமிழியினும் நிலையற்றதே—இந்த
நீள்நில வாழ்க்கையில் நிறைந்த இன்பம்—நினை மனமே
(நீ)

அனுபல்லவி

சீரிற் பிறந்து செல்வச் செருக்கில் வளர்ந்தும்
[வாழ்வோர்
பாரில் இழிந்த ஏழைப் பாமரர் ஆதல் கண்டாய் (நீ)

சரணம்

[1]வாரிக் கடல்நீர் உண்டு வறட்சி தணிந்தார் உண்டோ
[2]வாய் நிறையப் பொன் மென்று வயிற்றுப் பசிதீர்
[வாரோ
[3]பாரில் தவிக்கும் உயிர் பாங்குடன் ஊழியெல்லாம்
பாலில் திளைக்கச் சிவன் பாதத்தேனை மடுப்பாய் (நீ)

1. கடல் நீரையுண்டால் தாகம் தீருமோ.
2. வாய்நிறையப் பொன்னை மென்று தின்றாலும், தின்றவரது பசிதீருமோ—தீராது.
3. உலகிலே தவிக்கின்ற உயிர்கள் ஊழிகள் தோறும் ஓயாது இன்பப்பாலை யனுபவிக்க விரும்பின் சிவனது பாதத் தேன்தான் அதற்கு வழி.

சிவனது திருவடி இன்பமே நிலைத்தது. மற்ற உலக இன்பங்களெல்லாம் நிலையற்றவை, பயனற்றவை என்பதே இப்பாட்டின் முக்கியமான கருத்து.

88

இராகம்—பந்துவராளி	தாளம்—ஆதி

பல்லவி

பொய்யான வாழ்வில் இச்சை வையாதே—மனமே
பொல்லாங்கு வந்தபோதே நையாதே[1]—தினமே
(பொ)

அநுபல்லவி

கையார்ந்த காசும் மண்ணும் மையார்ந்த கண்ணின்
[பெண்ணும்
மெய்யாம் உடல் அழித்தும் உய்யாமல் உன்னைப்
[பண்ணும் (பொ)

சரணங்கள்

1. உறவோர் உனைப் பணத்தின் கறவைப்பசு
[வென்றுள்ளார்
[2]உயிர் போலுன் மனைவியுன் உடல்மேலுவகை
[யுள்ளாள்
பிறரோ உனைக் கண்டுள்ளம் பெரிதும் அழுக்கா
[றுள்ளார்
பிரிய நண்பர்களுன்னைப் பிரிந்தவுடனே நள்ளார்
(பொ)

2. [3]உத்தியோகத்தில் நாட்டம் உனக்கென்ன ஓது
உலகிற் பிறர்க்கடிமை ஒழுங்கல்ல தீது
பத்தியோகம் பண்ணியும் சிவன்பதப் போது
பணிந்திடத் துணிந்திடில் பறந்திடும் வாது (பொ)

1. அழியாதே.

2. உயிர்போன்று நேசிக்கிறேன் என்று கூறும் உனது மனைவியும் கூட உண்மையிலேயே உனது உடல் மீதுதான் விருப்பை வைத்துள்ளாள்.

3. உத்தியோகத்தில் ஆசிரியர் கொண்டிருந்த உண்மையான வெறுப்பைக் காட்டுகிறது.

இஃதும் ஆசிரியரது உண்மை யனுபவத்தை உருவாய்க் கொண்டெழுந்த பாட்டாகும். இஃது 12-10-43 அன்று நள்ளிரவில் பாடப்பட்டது.

89 B. மனத்திற்குபதேசம்

இராகம்—ரீதிகௌள தாளம்—ஆதி

பல்லவி

இன்னும் பிரேமை எதற்கே—ஏழை மனமே
பொன்னும் பெண்ணும் என்பதற்கே ? (இ)

அனுபல்லவி

மன்னும் மாற்றில்லாதசெம் பொன்னும் புகழின்
[பெண்ணும்
துன்னும் ஒளியுடலின் [2]மன்னவனை நீகொண்டும் (இ)

சரணம்

மின்னுவதெல்லாம் பொன்னாய் மேவிடும்
[என்னலாமோ
மிருதுவெண் பண்டமெல்லாம் வெண்ணெ
[யென்றெண்ணலாமோ
பொன்னெனத் தீண்டிற்கையில் புற்றரவாகித்தீண்டும்
பெண்ணெனத் தொட்டிடில் வெம் சுண்ணமெனச்
[சுட்டிடும் (இ)

---

1. செம்பொன்னாகிய மேனியையும் செம்பாதி பெண்ணாகிய மேனியையும் உடைய சிவபிரானை உன் மனத்தினுள்ளே வைத்திருக்கும் உனக்கு இன்னும் பொன்னாசை மண்ணாசை என்ற பிரேமைகள் எதற்காக? என்பது இதன் கருத்து.

2. மன்னரை சிவனை.

90

இராகம்—ஸிம்மேந்திரமத்திமம் தாளம்—ஆதி

பல்லவி

எண்ணிப்பார் மனமே சிறிதே—நீ
மண்ணிற் காலமெலாம் பண்ணிப் பார்க்கும் வினை
தன்னிற் சிரறிவு கண்ணிற் றோணுமோ வென்(று) (எ)

அனுபல்லவி

விண்ணிற் கூடியொளி வீசு மீன்களினும்[1]
[2]எண்ணிற் கூடு பிறப் பெடுத்த வாழ்விலே (எ)

சரணம்

கண்ணைக் கட்டியொளி காணத்தான் திரிவாய்
கையைக் கட்டி மரக் கனி பறித்திடுவாய்
வெண்ணெய்க் கட்டிகொண்டும் வீணில் நெய்க்கழுவாய்
வினையைத்தான் விதைத்துத் தினையைத் தேடி நிற்பாய்
(எ)

---

1. பிரகாசிக்கின்ற நட்சத்திரங்களைக் காட்டிலும்.
2. அதிகமான பிறப்புக்களை எடுத்துள்ள வாழ்க்கையில்.

91

இராகம்—**ஸிந்துபைரவி** தாளம்—**ஆதி**

பல்லவி

நைந்தழிந்து மனம் நாடி மாயைதனில்
நாசமாகுதையா—உயிர்—மோசம் போகுதையா (நை)

அனுபல்லவி

ஐந்திழிந்தபுலன்[1] ஆகும் ஐந்து தலை
அரவம் என்றனுயிர் உறவுகொண்டிடலும் (நை)

சரணம்

[2]கயிறைப் பாம்பெனவும் கல்லைக் காசெனவும்
கலங்கிக் காலமெலாம் விலங்கைப் போலுழன்றும்
உயிரை மாய்த்திடுமோர் உயர்வில்லாத பழி
உலகிற் கூடிப்பல அலகிற் கேடுடனே (நை)

---

1. இழிதன்மையையுடைய ஐந்து புலன்கள்.
2. கயிற்றைப் பாம்பெனவும் கல்லைக் காசெனவும் மயங்கும் மாயை அறிவைக் குறிக்கிறது.

92 C. மனோநிலை

இராகம்—கமாஸ் தாளம்—ஆதி

பல்லவி

அடிமைத் திறத்திலொரு அருமைத் திறத்தை நாடிக்
[1]குடிமைத்திறத்தைக் குறைத்தேன்-குற்றம் நிறைத்தேன்
(அ)

அனுபல்லவி

வடிவைக் குலைத்து வெந்தேன் வாழ்வைக் குலைத்
[தலைந்தேன்
வறுமைக் குணம் பெருக்கிப் பொறுமைக் குணம்
[சுருக்கி (அ)

சரணங்கள்

1. கடிமைக் குழல் மடவார் கதிமெய்க்கதியென்றோடிக்
கவலைக் கடலிற் கூடிக் காலமுழுதும் வாடிக்
(முடுகு) காசு கொடுத்துமே தேசு கெடுத்துமே
மாசு நடைப்பிணை மாகி ஜகத்தினில் (அ)

2. பாரோர் பழிப்பிற்கஞ்சிப் பணம்பதவிக்கே கெஞ்சிப்
பயந்து நடுங்கித்துஞ்சிப் பரிதவித்தேனென் நெஞ்சில்
(முடுகு) பான்மதி சூடிடு வான் பணி நாதரை
யான் பணியாமலென் ஊன் பணி நாடியும்(அ)

---

1. குலப்பெருமை.

2. கடி+மை+குழல்=வாசனை பொருந்திய கரிய நிறத்தையுடைய கூந்தலையுடைய.

இந்தக்கீர்த்தனம், ஆசிரியர் ஒரு நாள் தஞ்சையிலிருந்து சென்னைக்கு ரயில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் பொழுது தம் நிலைமையை நினைந்து பாடியதாகும்.

93

இராகம்—உஸேனி தாளம்—சாபு

பல்லவி

ஆயிரம் ஈட்டிகொண்டென் அங்கமெங்கணும் நாட்டிக்
காயம் உண்டாக்கிவினை களிக்கின்றதே (ஆ)

அனுபல்லவி

வாயிலும் காயத்திலும் வயிற்றிலும் புண்களாகிப்
பாயுதே ரத்த வெள்ளம் பதைக்குதென் பாவி
[யுள்ளம் (ஆ)

சரணங்கள்

1. நேயரும் நித்தம் என்னை நெருங்கும் உறவினரும்
பேயர் போல் என்றன்மீது பிணக்குறும் பகைவரும்
தாயாரும் தமையனும் சார்ந்த வென் மனைவியும்
நாயனை யேனைக்காணும் நாளிலும் நேரத்திலும்(ஆ)

2. ஆசைவைத்தொரு காதல் அணங்கையணையுங்காலும்
ஆவல் வைத்தே உயர்ந்த அரசரைக் காணுங்காலும்
காசைவைத்தே பதவிக் கருவம் முதிருங் காலும்
கண்ணுறங்குங்காலும் நான் எண்ணுறுங்காலும்
என்னை (ஆ)

இந்தப் பாட்டும், ஆசிரியரது அப்போதைய வாழ்க்கையின் உண்மையனுபவத்தையும் உணர்ச்சிப் பெருக்கையும் உருவாக்கிக் காட்டும் ஒரு வார்த்தைச் சித்திரமாகும். இது பாடப்பட்ட நாள் 2-4-44 ஆகும். இதில் கூறப்பட்டுள்ளவைகளனைத்தும் உண்மைகளேயன்றி உபசாரமொழிகளோ, கவிச்சம்பிரதாயங்களோ வல்ல.

94

இராகம்—கௌரிமனோஹரி தாளம்—ஆதி

பல்லவி

இனியும் நான் வேண்டிடுவனோ—இப்பதவிகள்
இனியும் நான் வேண்டிடுவனோ

(முடுகு) ஏதுமின்பமதி
லாதுதுன் பமுறு
வாதுகள் வளர்செய்
தீது மல்குமிவை (இனி)

அனுபல்லவி

கனியைநான் வேண்டிச்சென்றேன் காய்கள் தம்
[மையே கொண்டேன்
கருணைக் கடலைத் தேடிக் கவலைக்குழியில் வீழ்ந்தேன்
(இனி)

சரணம்

பனியார்[1] மதியென்றெண்ணிப் பாவை[2] முகத்தைக்
[கொண்டேன்
பரந்த [3]விண் மீனென்றெண்ணிப் பாழும் பணத்தைக்
[கொண்டேன்
தனியாம்சா யுஜ்யம் என்றே [4]தளையார் அடிமை
[கொண்டேன்
தகையாம் துணைவரென்றே பகையாம் பலரைக்
[கொண்டேன் (இனி)

---

1. குளிர்ச்சிபொருந்திய.

2. பெண்களது.

3. நட்சத்திரங்கள்.

4. கயிறு அல்லது சங்கிலியால் ஆகியகட்டு.

ஆசிரியர் தமது உத்தியோக வாழ்க்கையை எப்போதுமே இன்பமாக அனுபவித்தது கிடையாது. அநேக சமயங்களில் அவருக்கு அவ்வாழ்க்கையில் சலிப்புண்டாகி அவரைச் சஞ்சலப்படுத்தும். அவ்வாறு ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் ஒன்றில், ஆசிரியர் தனது உண்மை மனோ நிலையையும் சுய அனுபவத்தையும் வெளிப்படையாக இக்கீர்த்தனத்தின்மூலம் வெளியிட்டுள்ளார்.

இஃது 8-3-44 அன்று எழுதப்பட்டதாகும்.

6. இயற்கைப் பொருள் கீதங்கள்

95 சூரியன்

இராகம்—ஆரபி தாளம்—திரிபுடை

பல்லவி

சூரியனே உலகிற் சுடரொளி பரப்பிநற்
சுகவழி நிரப்புசற் காரியனே (சூ)

அனுபல்லவி

ஆரியன் என்றும் பிறன் ஆகியோன் என்றும் நிறம்
ஆதியாம் பேதம் இன்றிச் சோதியுனைப் பணிவார் (சூ)

சரணங்கள்

1. [1]வாரிஎனும்பெண்ணிற்குன் வீரிய வெங்கதிர்தான்
[2]வாய்த்திலதேல்மேகம்சே யாய்த்தவழ்ந்தாமோமழை
[3]தேரில்இறங்கிமேலைத் திசையிற்றங்கியும் வேலை[4]
திகழ்கிழக்கில்தோன்றுவாய் புகழ் முருகன் உருவாய் (சூ)

2. [5]கல்லடிபட்டார்உன்னைப் பல்லுடைத்திட்டார்[6] [பின்னைக்
கண்ணெனக்கொண்டார்நின்னைக்[7] கருணைபரிகும் [அவ்வனை
[8]எல்லடிபட்டுன்முன்னம் நில்லாதழிதல் செய்வாய்
[9]எம் முகமும் கமலத் தின்முகமும் மலர்த்தும் (சூ)

---

1. கடல் என்னும் பெண்ணிடம் உனது பலம்பொருந்திய வெங்கதிர்.

2. மேகம் என்னும் குழந்தை சேர்ந்து பொருந்தாவிடில் மழை உலகத்தில் உண்டாகுமோ ?

3. உனது ரதத்தில்சென்று மேல்கடலில் இரவைக் கழித்தும்.

கீழ்த்திசைக் கடலில் முருகனது புகழுடைய உருவாகத் தோன்றுவாய் (காலையில்).

5. சாக்கியரால் கல்லால் அடிக்கப்பட்ட சிவபிரான்.

6. உனது பல்லை உடைத்திட்டார்.

7. அதன் பின் உன்னைத் தமது கண்களில் ஒன்றாகக் கொண்டார்.

8. இருள் நிறைந்த இரவு உன்னால் அடித்துத்துரத்தப் பட அது எங்கும் நில்லாமல் ஓடும்படிச்செய்வாய்.

9. எமது (மக்களின்) முகங்களையும் தாமரைமலரின் இனிய முகத்தையும் மலரச்செய்கின்ற.

96 சந்திரன்

இராகம்—உதயரவிச்சந்திரிகா தாளம்—ஆதி

பல்லவி

வெள்ளை மதியே வானின் கொள்ளை நிதியே தேனின்
தெள்ளமுதக் கிரணமே—தேங்கும் கிண்ணமே (வெ)

அனுபல்லவி

பிள்ளைமதியென்றெங்கள் பெருமான்சடையில் தங்கி
மெள்ளக்கங்கைக்கரையின் மேல் விளையாடி நிற்பாய்
(வெ)

சரணங்கள்

1. குறையும் கலையும் கூடி[1] நிறையும்கற்பில் [2]நின்றிட்டாள்
குந்தி மருகிபோல்[3] நீ குறைவாய் கலைநிறைவாய்[4]
கறையுனைக் களையக் கவலை கொள்ளாதுலகின்
காரிருள் தன்னை நீக்கச் சீருடன் காய்வாய் வானில்
(வெ)

2. அழகு மங்கையர் முகம் அதன் உவமை என்றகம்
அடைந்த செருக்கறவோ[5] அழியும் காதல் மாதரைத்
தழலென உன்கிரணம். தாக்கியதால் அவர்சொல்
[6]சாபத்தாலோ நின்னுரு தன்னிற் சார்ந்ததோர்
மரு[7] (வெ)

3. பரசிவனிடம் பொன்னும் பாடிப் பெற்றோர்பரவை
பரசுகம் எய்தவைத்த பண்பின் ஆரூரன்போல[8]
இரவியிடம் ஒளி நீ ஏற்று மற்றோர் பரவை
எழுப்பியலை இனிதே இன்பம் ஊட்டுவாய் இன்றே[9](வெ

1. துச்சாதனனுல் உரியப்பட்டுக் குறைந்து கொண்டே வந்த துயில், பின் கண்ணன் அருளால் குறையாமல் கூடிவர

2. அதனுல், நிறைந்த தன் கற்பினில் நின்றிட்டவளாகிய.

3. குந்திதேவியின் மருமகளாகிய திரௌபதையைப் போல்.

4. நீயும் உனது கலைகள் குறைந்தும் நிறைந்தும் இருப்பாய்.

5. அழகையுடைய மங்கையர்களின் முகத்திற்கு நானே உவமை என்ற நினது செருக்கையழிக்கவோ (அல்லது)

6. காதலரைப் பிரிந்தமாதர்களை உனது நிலவு வெப்பமுடன் தாக்கியதைக்கண்டு அவர்கள் உன்னைச்சபித்ததாலோ எதனுல்.

7. உனதுருவில் மருவொன்று காணப்படுகிறது (கூறுவாய்).

8. சிவபிரானிடம் பொன்னைப்பெற்றுப் பரவைஎன்னும் பெண்ணைச் சுகமாக இருக்கச்செய்த சுந்தரரைப்போல்.

9. நீயும் சூரியனிடம் ஒளியைப்பெற்று அதனுல் பரவையென்னும் கடலை இன்பமூட்டி அதன் அலைகளை எழும்பச் செய்கிருய்.

97 நட்சத்திரங்கள்

இராகம்—தோடி தாளம்—ஆதி

பல்லவி

இமைத்தும் விழித்தும் ஒளிர் உடுக்குலமே[1]—விண்ணில்
எழிலிற்றிகழும் உம்மை யடுத்திலமே[2] என்றும் (இ)

அனுபல்லவி

தமைப்பிறர்[3] எண்ணும்உச்சம் தனிவிருப்பீரென்றும்
அமைத்தநும் எண்ணிக்கையை[4] அறிந்திலோம்
[நாங்கள் நாளும் (இ)

சரணங்கள்

1. உமையவள் நீலமேனி ஒளிர் அணி வயிரம்போல்[5]
ஒளிபசும் புற்றலைமேல் உறைபனி வெண்துளிபோல்[6]
அமைகடல் நீள நீருள் அழகிற் புரள் கயல்போல்[7]
அரும்பெரும்நீளவானம் அதிற்பொலிபும்மேனியீர்[8]
(இ)

2. காரிருட் கன்னி துஞ்சும் காலத்தொளிர்விளக்கே[9]
கவிச்சுவைத்தேனிசையிற் கமழ்விண்ணுலகின்
[பாட்டே[10]
பாரிருள் துஞ்சும் ஜீவன் பற்பல கோடியாவும்
பாதுகாக்கும் வீரரே[11] பளிங்கைவெல்லும்
[மேனியீர்[12] (இ)

---

1. நட்சத்திரக் கூட்டமே.
2. சார்ந்திலமே.

3. எண்ணும் என்பதற்கு, எண்ணிக்கை எவ்வளவு என எண்ணும் என்னும் பொருளும், மிகவும் மேலானவை என்று கருதும் என்னும் பொருளும் கொள்ளலாம்.

4. உங்கள் தொகை இவ்வளவு என்று இதுவரை நாங்கள் யாரும் அறிந்திலோம். மேனாட்டு விஞ்ஞானிகள் கூட இதுவரை நட்சத்திரங்களின் எண்ணிக்கையை அறிந்திலர்.

5. உமாதேவியின் உடலில் பிரகாசிக்கும் நகைகளின் வயிரங்கள் போலவும்.

6. பச்சைப்பசும்புல் தரையில் படிந்துள்ள வெள்ளைப் பனித்துளி போலவும்.

7. கடலின் அமைதியான இடங்களில் துள்ளிப்புரளும் கயல்கள்போலவும்.

8. அரிய பெரிய நீலநிற வானத்தில் பழகி வாழ்கின்ற ஆதியில்லாத உடலை யுடையீர்.

9. கரிய இரவாகிய பெண் துயிலும்போது எரியும் விளக்கே.

10. கவியின் இன்னிசைத் தேனுடன் நறுமணமுறும் தேவலோகக் கீதங்களே.

11. உலகின் இருளில் தூங்குகின்ற பல கோடி ஜீவராசிகளையும் பாதுகாக்கும் வீரரைப்போல் நிற்பவர்களே.

12. பளிங்கின் வெண்ணிறத்தை மீறிய வெண்மையையுடைய மேனியையுடையவர்களே.

98 கடல்

இராகம்—இந்தோளம் தாளம்—ஆதி

பல்லவி

வெள்ளலை வீங்கியோங்கும் விரிகடலே கண்டேன்
உள்ளலை[1] ஓங்கிப் பூரித்தேன்—உணர்வுகொண்டேன்
(வெ)

அனுபல்லவி

வள்ளல் உனைப்போல் அன்பு வல்லவர் காணேன் வையம்
வாழ்ந்திடத் தண்ணீர்வாரி[2] வானின்றுபெய்வாய்மாரி[3]
(வெ)

சரணங்கள்

1. தெள்ளமுதக் கிரணம் சேர் முழுமதி காணின்
தேங்கியகாமத்தார்கள் வீங்கிவிம்மும் நெஞ்சம்போல்
தள்ளரும்வேகத்தோடுன் தண்ணலைவிம்மித்தாவும்
தன்மை கொண்டோயுன் காதல் நன்மைக்
[காதலன் யாரோ[4] (வெ)

2. பொறைக்குப் படுக்கையானாய்[5] பூமிக்குடுக்கை யானாய்[6]
போற்றி நாவுக்கரசர் புனித உடல் சுமந்தாய்[7]
[8]நிறைக்கற்பின் பெண்டிர்போலுன் நிலைதப்பல்
[இல்லாய் கந்தன்
நிகர்க்கும்இளஞ்சூரியன் நிதத்தும்குளிக்கும் நீராய்[9]
(வெ)

---

1. உள்ளத்தில் எழும் இன்ப அலைகள்.
2. தண்ணீரை முகந்து.

3. மழையாக மாறிப் பெய்வாய்.

4. சந்திரனது கிரணங்களைக் காணும்போது உனது அலைகள், காமத்தினர் நெஞ்சம் விம்முவதைப் போல் வீங்கி ஓங்குகின்றன ஆகையால் உனது காதலன் யாரோ? (கூறுவாய்)

5. பொறுமைக்கு இருப்பிடம்நீ ஆனாய். (நின்பொறுமை மீறினால் உலகம் அழிந்துபடும் என்றவாறு.)

6. பூமாதேவிக்கு ஆடையைப் போன்றுள்ளாய்.

7. திருநாவுக்கரசரைச் சமண மன்னன் கல்லோடு சேர்த்துக் கடலில் எறிந்தக் காலை நீ அவரை வணக்கத்துடன் உனது அலைமீது சுமந்துவந்து கரை யேற்றினாய்.

7. கற்புடைப் பெண்டிர்போல் நீயும் உன் நிலையினின்றும் தவறுதல் இல்லாய்.

9. முருகனைப்போன்ற காலை இளஞ்சூரியன் தினம் குளித்தெழும் தண்ணீரை யுடையாய்.

99 தாமரை

இராகம்—ஹம்ஸவிநோதினி — தாளம்—ஆதி

பல்லவி

தாமரைத் தண்மலரே [1]தாழ்ந்தகுலச் சேற்றினில்
நீ முளைத்தாலும் உலகில்—நிகரில்லாய் நீ (தா)

அனுபல்லவி

காமர்[2] மடப்பிடியின் காதற் சிவன் மேனியும்
பூமலர் நின்காடொத்த [3]பொற்பினன் என்பர்கண்டாய்(தா)

சரணங்கள்

1. ஏற்பாரைக் கண்டலர்ந்த இனிய வள்ளல் முகம்போல்
இளஞாயிறைக் கண்டாலுன் எழில்வதனம் மலர்வாய்
நோற்பார்கள் வையவாழ்வில் நுகர்ந்தும் நோவா [மல் வாழும்
[4]நுணுக்கமதை யுன் இலை நுவன்றிடும் நீருள் [நின்றே (தா)

2. ஏழைக் குலத்தாயேனும் இயற்கைத்தற் குறியேனும்
மாழைக்கண் செல்வியோடு[5] மதிவெண் கலைமகளும்[6]
வாழ்தற்கிடமாய்நின்று வந்திடுவதால் நீயும்
தாழ்விற்செல்வம் கல்விதான் தழைக்கும் தலமாய் [நின்றாய் (தா)

3. மங்கை வதனமும் எம் மகிபர் சிவனின் தாளும்
பங்கயம் என்றால் அல்லால் பான்மை யறிதற்கின்றால்
செங்கண் நெடுமால் உந்தி சேர்ந்திருந்தாய் நீ முந்தி
தங்கியுன் பாலே நின்றான் பங்கயில் நான்முகன் [தான் (தா)

கீதத் தமிழ்

1. தாழ்ந்தகுலம் போன்ற சேற்றினில்.

2. அழகிய இளம் பெண்யானை போன்ற உமையின்.

3. "தாமரைக் காடனைய மேனித்தனிச் சுடரே" என்று மணிவாசகர் கூறுதலை நோக்குக. சிவபெருமானின் மேனி தாமரைக்காடு போன்றும் சிவந்தது என்பது கருத்து.

4. உண்மைத் துறவிகள் உலகவாழ்க்கையில் விஷயங்களை நுகர்ந்தும் அவைகளால் பாதிக்கபடாமல் வாழும் உயரிய நுணுக்கமான தத்துவத்தை உனது 'தாமரை இலைத் தண்ணீர்' என்னும் நிலைமை விளக்குகின்றது.

5. இலக்குமி.

6. கலைமகள்.

நீ ஏழையாகிய சேற்றில் பிறந்திருந்தாலும், உனக்குப் படிப்பு என்பது இல்லை என்றாலும், இலக்குமியும் கலைமகளும் உன்மீது வாழ்வதால் நீ செல்வத்திற்கும் கல்விக்கும் இருப்பிடமாய் விளங்குகின்றாய்.

100 வானவில்

இராகம்—நவரஸகன்னட தாளம்—ஆதி

பல்லவி

வானவில்லை நிகர்க்கும் சிவன் திருக்காட்சி
வர்ணங்கள் ஐந்தே அதில் வளம்பெறல் சாட்சி (வா)

அனுபல்லவி

மோன உள்ளத்தே தோன்றி முற்றிலும் இன்பம் ஊன்றி
நாநலப் பாவலர்க்கே நல்விருந் தாதலாலே (வா)

சரணம்

பச்சை நிறம் அவர்தம் பாதி யுமையின் மேனி
பவளச் சிவப்பாம் அன்னார் பாங்கின்மேனி, தரித்த
கச்சை நிறம் மஞ்சள்[1] மேல் கரியுரிநீலம், சென்னி
[2]வைச்ச மதியும் வெள்ளை வர்ணங்கள் ஐந்து
[கொண்டான் (வா)

---

1. கச்சையாகிய புலித்தோலின் நிறம் மஞ்சள்.

2. வைத்த.

“ நிறங்களோர் ஐந்துடையாய் ” என்ற திருவாசக வாக்கியத்திற்கேற்ப, அவ்வைந்து நிறங்களையும் முறையே சிவனிடத்தும், வானவில்லிடத்தும் அடியவர்கள் கற்பனைக் கண் கொண்டு பார்த்துக் களிப்பர்.

திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ.பி.எல்.
அவர்கள் இயற்றிய வேறு நூல்கள்

தமிழ் நூல்கள்

1. மாணிக்கவாசகர் மாலை

"The stanzas are well-arranged and are characterised by ease, grace and light. Mr. Bala subramaniam's devotion to the saint has raised his imagination to white heat with the result that he has produced here poetry of a very moving kind."

—The Hindu.

*
* *

"These Verses form...a delightful addition to Tamil devotional literature, preserving as they do the flavour of earlier devotees......"

—Indian Express.

*
* *

"The author has in hundred Verses given expression to all his love for his Master (St. Manika vasagar) in a very moving manner. He is so full of his Master that he has almost produced what might be termed a 'Child of Thiruvasagam'—a piece of poetry that is at once characterised by

felicity of expression, flow of style and emotional elevation."

—The New Times—Madras.

***

"This book of devotional poems...is a landmark in the history of modern Tamil devotional literature...For only a person who has felt the thrill and the eccstacy of the Thiruvasagam in every bone and fibre of his being could write in the way Mr. Balasubramaniam has done. Those who have known Mr. Balasubramaniam only as a politician and a public worker would be greatly and agreeably surprised at the high level of poetic excellence of Manickavasagar Malai. But those who have known him as an elegant writter of popular songs supporting the cause of freedom and democracy during the war years and who used to refer to his initials "K. M." and call him "Kavi Mannan" would feel, after a perusal of Manikavasagar Malai, that he deserves that title very well. We congratulate Mr. Balasubramaniam on his excellent contribution to Tamil devotional literature...

—'The Sunday Observer'—Madras

***

"This book contains hundered beautiful songs in Tamil, breathing pure love and exalted ideals which the author has acquired after perusal of the

famous Thiruvasagam of Manikavasagaswami gal. The praises are original and well couched in simple and flowing rythms; the reader will be helped a good deal by this work to understand the original work Thiruvasagam for which there is so far, no authenticated explanatory."

—The Divine Life—Rikshikesh.

***

"இதனை இயற்றிய அன்பர் பாலசுப்பிரமணியம் சிறந்த அறிஞர். சென்ற இருபது ஆண்டுகளாக அவர்தம் உள்ளம் பற்பல இயக்கங்களிலும் எழுச்சிகளிலும் புகுந்தது; புகுந்து புகுந்து ஆற்றுவெள்ளத்தில் அலைப்படும் துரும்புபோல் முட்டி மோதி அமிழ்ந்து எழுந்தது. அதன் விளைவால் சோர்வுற்ற உள்ளம் சிவனைத் தேடியது; சிக்கெனப் பிடிக்க விரும்பியது; மணிவாசகனாரின் திருவாசகத்தில் ஒன்றியது. ஒன்றிய உள்ளம் உருகியது. அந்த உருக்கத்தின் விளைவே இந்நூல். உருக்கத்தில் விளைந்த ஒன்று என்னதான் செய்யாது? படிப்போரையும் உருக்கத்தில் ஈடுபடுத்தும். உருக்கத்தின் குழவியான இந்நூல் படிப்போரை உருக்குகிறது." —சுதேசமித்திரன்

***

"'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்ற பழமொழி நமது நாட்டில் உலவுகிறது. ஆனால், உள்ளத்தை உருக்குவதுடன் நில்லாமல் திருவாசகத்தைப்போன்ற பாமாலை ஒன்றை இயற்றச் செய்யும் அதியற்புதச் சக்திகூட அதற்கு உண்டென்பது இந்த 'மணிவாசகர் மாலை'யிலிருந்து தெரிகிறது. மாணிக்கவாசக

ரின் சொல்லழகும் உருக்கமும் ஸ்ரீ பாலசுப்பிரமணியம் எழுதியுள்ள பாடல்களிலும் நிறைந்திருக்கின்றன......... ஸ்ரீ பாலசுப்பிரமணியம் திருவாசகத்தின் உண்மைக் கருத்தையறிந்துகொண்டிருக்கிறார். அவருடைய கவிதை சரளமாக இருக்கிறது.''

—தினசரி

*
* *

'' 'திருவாசக பாலசுப்பிரமணியம்' என்று திரு. வி. க. அவர்களே அணிந்துரையில் குறிப்பிடுகையில் இன்னு ரது திறன்பற்றி நாம் அதிகம் கூறத் தேவையில்லை......... ஆசிரியரது மொழித்திறன் கவித்திறன் இரண்டையும் இந்நூலில் நன்கு கண்டறிய இயலுகிறது.'' —பாரதமணி

*
* *

'' திருவாசகத் தேன் உண்ட மயக்கில் மணிமொழிக ளால் மாணிக்கவாசகப் பெருமானைப் பக்திப் பரவசத்தாற் பாடும் கவிஞர் ஒருவரை அறிந்துகொள்வது இந்நாளில் இலேசான விஷயமன்று. அதுவும் பண்டைநாள் அருள் திறம் பெற்ற அடியார் யாரோ பாடிப் போந்தனர் என்று ஐயுறுத்தும் வண்ணம் அழகொழுகும் தமிழ்ப் பாக்களால் மணிவாசகப்பெருமானை இன்றைய இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒருவர், அதுவும், ஆங்கிலப் பயிற்சியும், அரசியல் மதிப்பும், அதிகார மாண்பும் படைத்திருந்த ஒருவர், உயிரும் உள்ளமும் குழையச் செய் யும் பாடல்களால் போற்றினர் என்பது நம்புவதற்குக் கூடக் கடினமாயிருக்கும்.

போரிசை விளம்பர அதிகாரியாக இருந்து தன் பத வியை உதறித் தள்ளிய பேரறிஞர் - திரு. கே. எம். பாலசுப் பிரமணியம் அவர்கள் 'மாணிக்கவாசகர் மாலை' என்ற அரிய நூல் ஒன்றை நூறு பாக்களாலே இயற்றியுள்ளார்கள்.

'திருமலிந்த தண்டமிழும் தேனும் பாலும் தேக்கி யுண்ட பாக்கியத்தால்'தான் அவரால் இவ்வரிய செயல் சாத்தியமாயிற்று. மணிவாசகர் பெருமையைக் கூறும் நூறு பாக்களிலும் திருவாசகத்தின் தேன் துளிகளைச் சுவைக்கிறோம்.

அன்பர் திரு. பாலசுப்பிரமணியம் ஒரு கவிஞர்; அதிலும் பக்திப் பெருக்கிற் சிறந்த பரமன் அடியார் என்ற உண்மையை இந்நூல் விளக்குகிறது.'' —சிவாஜி, திருச்சி.

*
* *

"உள்ளே ('மாணிக்கவாசகர் மாலை' என்ற நூலினுள்) சிறிது நுழைந்து பார்த்தேன். எளிதான நடை, உருக்கமான கருத்து, இலகுவான ஓட்டம், ஆழ்ந்த எண்ணம்—இவைகள் படிப்போரை எளிதில் வசப்படுத்தி விடுகின்றன. சைவ உலகம் தங்களுக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளது என்பேன்."

—இராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்,
B.A., B.L. (ஓய்வுபெற்ற அறநிலையப் பாதுகாப்புக் கழக அங்கத்தினர்) கோவை.

*
* *

"அன்பிற் கனியும் திருவாசகத்துடன் தங்கள் பாடலும் கலந்து அன்பிற் கனிகின்றது."

—திரு. ந. சிவகுருநாத பிள்ளை, தூத்துக்குடி.

*
* *

"திருவாசகத் தேனைப் பிலிற்றும் பூக்களாகிய பாக்கள் படிக்குந்தோறும் புதுப்புது மணத்துடன் பொலிகின்றன. 'நின் ஒருவாசகமே உடையனையும் என்னையும் ஒன்றுவிக்

கும்' என்று வடலூர் அடிகள் கூறிப் போந்தமைக்கு எடுத்துக்காட்டாகத் தாங்கள் திகழ்கின்றீர்கள். எனது அன்பர் பலரும் படித்துப் படித்து அதன்கண் மிளிரும் பத்திச்சுவை முதலியவற்றையும், ஆற்றின் ஒழுக்குப்போல் செல்லும் செய்யுள் நடையையும் பெரிதும் பாராட்டிப் பெருமைப்படுகின்றனர்.''

—திரு. எஸ். இராமச்சந்திரப் பத்தர், B.A.,
சப்-மாஜிஸ்திரேட்டு, சீர்காழி.

*
* *

"மணமும் அழகும் பொருந்திய 'மாலை'யில் திருவாசகத் தேன் சொட்டுகிறது. அம்மதுவையுண்டு மகிழ்ந்துளோம்."

—திருவாளர்கள் - மு. பாலசுப்பிரமணியம், & க. குமரவேல்
காரியதரிசிகள், 'மணிவாசக மன்றம்', அரியலூர்.

*
* *

2. திருப்போரூர் சதகம்

"திருப்போரூர் இனிதமர்ந்தென் உளங்கவர்ந்த இறைவரேறே எனக் கூறி, இறைவரெனக் குன்னிலும் யார்? என்று கேட்கும் பாடல், ஆசிரியரின் உள்ள உறுதியை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. ஒவ்வொரு பாடலின் அந்தத்தை அடுத்த பாடலின் ஆதியாகக் கொண்டு அணிபெற விளங்கும் பாடல்கள், அழகிய நடையுடன் உயர்ந்த பொருள்மிக்குப் பக்தர்களைப் பரவசப் படுத்தச் செய்வனவாயுள்ளன. பக்தர் படித்துச் சுவைத்துப் பயன் பெறுவாராக.''

—சுதேசமித்திரன்

3. வடபழநி வடிவேலன் திருப்பதிகம்

"வடபழநி வடிவேலன்மீது பாடிய இப்பத்துப் பாடல்களும் மனமுருகிப் பாடப் பரவசப்படுத்துவனவா யிருக்கின்றன. அவன் அடிபரவும் மக்கள் பக்தி மிகுந்து இன்புற இப்பாடல்கள் உறுதுணையா யிருக்குமென்பதில் ஐயமில்லை."

—சுதேசமித்திரன்

* * *

4. திருமுல்லைவாயில் திருப்பதிகம்

"பத்துப் பாடல்கள்கொண்ட இத்திருப்பதிகம் இறைவனது திருவுருவத்தையும் உள்ளத்துறையவைத்து அவன்வழி மனம் செல்ல உந்துகின்றது. எளிய நடையும் உயர்ந்த பொருளுமடங்கிய இப்பதிகம் யாவரும் படித்து மனனஞ் செய்து உய்தற்குரியதெனக் கூறின் மிகை யாகாது."

—சுதேசமித்திரன்

* * *

5. கள்ளழகர் திருப்பதிகம்

திருமாலிருஞ்சோலைக் கடவுளின்மீது பாடப்பட்ட ஒருபது பாடல்கள் அடங்கிய நூல்.

மேலே குறிப்பிட்ட நூல்கள் 3, 4, 5 இவற்றைப்பற்றி 'ஹிந்து' (Hindu) பத்திரிகை கூறுவதாவது :

"These booklets contain each ten verses in the Viruttam metre made familiar to the Tamil ear by Thayumanavar and Ramalinga Swamigal and the words often echo these masters ...... they are uniformly suffused with refreshing conceits and turns of expression."

விரைவில் வெளிவரப் போகும் நூல்கள் :

1. *திருநாவுக்கரசர் பதிற்றுப் பத்தந்தாதி*
2. *திருப்பழநி வெண்பா அந்தாதி*
3. *குடந்தை, மூவலூர், மயிலாடுதுறை முதலிய தலத்திருப்பதிகங்கள் முதலியன*

ஆங்கில நூல்கள்

1. 'SOUTH INDIAN CELEBRITIES'—Vol. I
2. 'SOUTH INDIAN CELEBRITIES'—Vol. II

SOME OPINIONS

1. **The Hindu, Madras :** "... the author has presented in lively detail pen pictures of Eight well-known publicists of South India...and his knack of getting at the little known but significant details of their lives is unusual. On the whole the sketches are very readable."

2. **The Times of India, Bombay** : " Those who recall the first volume of South Indian Celebrities by K. M. Balasubramaniam will read the second volume with interest. They are attractively written, if at times a trifle forcefully, and succeed in presenting a clear picture of their varied subjects."

3. **Bombay Chronicle, Bombay :** "......the book is a fine contribution in the pen-portrait line of literature so far produced in South India on South Indian men of importance."

4. **The Leader, Allahabad :** "...there is no doubt that he has portrayed their characters in an admirable manner and his style is both fascinating and forceful. The book makes interesting reading and the skilful presentation of facts is delightful and enjoyable. The choice of various episodes connected with the subject of each sketch is apt and brilliant and the author deserves to be congratulated.........on his wide reading and extensive knowledge of men and things."

5. **The Sunday Amrita Bazaar Patrika, Calcutta:** "(It) is a book of biographical interest which delights the reader with its brilliant descriptions. ....The author's sketches of the exalted careers are excellent."

6. **The Mail, Madras:** "Study of the lives of politicians and statesmen of other countries has enabled the writer to present striking parallels or contrast...........generally Mr. Balasubramaniam's style is vivid and forceful........"

7. **The Sunday Times, Madras :** "His style is brilliant and picturesque and the presentation pleasing and masterly. We dare say a persual of

this book will give one a pleasant and enjoyable hour."

8. **The Modern Times, Madras:** "Perhaps what distinguishes this piece of biographical writing from others of the same name is the perfect candour and sincerity that flow throughout the narrative.........His is a successful attempt at drawing a sprightly, dramatic portrait.........The book is written in a vigorous style, picturesque and ironical.........It is a brilliant presentation of our luminous personalities."

9. **Free India, Madras :** "Fashioned after A. G. Gardiner, the style is scintillating and there are frequent flashes of wit and humour. He metes even-handed justice—debunking ! The book furnishes one of the most fearless spotlights on some of the prominent figures on the dyarchic stage."

10. **The Guardian, Madras :** ".........The author ......has yielded to the promptings of Truth and in this series of sketches he holds up the prominent political actors on the background of a larger life so that every man might be seen as he really is. In the hazardous task of analysing characters Mr. B. proves himself to be no novice. He displays penetrating insight and clothes his views in language abounding with epigram and vigour in painting.........Mr. B. has reflected correctly public

opinion about these men and has given that opinion a coruscating, literary form. Public life will be all the purer when searchlight plays upon it, as in this book."

11. **The Cochin Argus, Cochin:** "Mr. K. M. Balasubramaniam, the author wields a facile pen and his skill in portraying characters is remarkable. All the sketches without a single exception appear to have been written without fear or favour, rancour or rant and a complete detachment and zealous adherence to truth are noticeable throughout."

12. **The Railway Herald, Trichy:** "The sketches reveal a clear insight and understanding. He has something to say of many of these persons and he says them fearlessly. His estimates are never far beside the mark. The pen picture of each person is done in a spiritted manner......the style is dashing and brilliant. We would heartily recommend this book to all lovers of good literature."

13. **The Late Rt. Hon. V.S. Srinivasa Sastri P.C.:** "I have read a book (South Indian celebrities) written by him and heard him too on the platform. It is a pleasure to me to testify to his skill in the use of English in either way. He is a master of idiomatic, humorous and highly cultivated expression and in speech is fluent, effective and interesting."

14. The Rt. Hon. Sir Tej Bahadur Sabru, P. C : "I have found your sketches very interesting, your literary style is distinctive. It is pungent and emphatic without being aggressive."

15. The Rt. Hon. M. R. Jayakar P. C. (Member of the Judicial Committee) "It (the publication) is an excellent attempt and one sees through the writing glimpses of the author's intimate knowledge of the public life of his Presidency and the individuals who have kept it going. Some of his sketches are very bold which feature I hope, will be appreciated by those whom he criticises."

16. Sir. F. E. James : "………the articles are brightly written and many of the characteristics to which you draw attention are easily recognisable. This kind of sketch written without malice, but with the use of epigram and wit is attractive and has a very definite place in contemporary literature."

17. The Late Sir P. S. Sivaswami Iyer : "I have read portions of your book which shows wide reading and a great command of language.

18. Sir Mohammad Habibullah Sahib Bahadur : "May I permit myself to congratulate you both on the manner and matter of your publication !"

19. Dewan Bahadur K. Sundaram Chettiar, Retired Judge, Madras High Court : "It is a

masterly delineation of the characteristics of some of the great personalities of South India, with a deep insight into human nature and without fear or favour. Your style is unique and one can read through the book with sustained interest."

20. **Dr. Lanka Sundaram M.A. PH.D. (London):** "Mr. Balasubramaniam has a gift for terse statement and is an accomplished writer. His powerful use of the epigrammatic method is bound to catch public imagination and stay... the author turns with rare brilliance to Mr. Satyamurthi......"

21. **Dr. P. P. Pillai** (International Labour Office, New Delhi): "I read the entire book through at a sitting and never have I spent a pleasenter or more enjoyable hour."